# தமிழ்

## உகரம்

### முதல் பருவம்





**தமிழ் இணையக் கல்விக்கழகம்**

சென்னை – 600025.

www.tamilvu.org

# தமிழ்

## உகரம்

## முதல் பருவம்

தமிழ் இணையக் கல்விக்கழகம்
சென்னை - 600025.

**தமிழ்நாடு அரசு**

**முதல்பதிப்பு - 2025**

விலை: ரூ. 230.00

**பாடநூல் உருவாக்கமும் தொகுப்பும்**

TAMIL VIRTUAL ACADEMY

**தமிழ் இணையக் கல்விக்கழகம்**

**நூல் அச்சாக்கம்**

கற்க கசடற

**தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்**

www.textbooksonline.tn.nic.in


**ஓர் அழைப்பு உங்கள் வாழ்க்கையை மாற்றும்**
**(18 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கான 24×7 கட்டணமில்லாத் தொலைபேசி எண்கள்)**

குழந்தைத் திருமணம், குழந்தைத் தொழிலாளர் போன்ற பாதிப்புகளுக்கு உள்ளாக்கப்படுகிறீர்களா?
மனம், உடல் மற்றும் பாலியல் சார்ந்த துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்படுகிறீர்களா?
பாதுகாப்பற்ற சூழலில் உள்ளீர்களா?
அழையுங்கள் குழந்தை உதவி எண் 1098
உங்கள் விவரங்கள் பிறருக்குத் தெரியாமல் பாதுகாக்கப்படும்

CHILD LINE 1098 NIGHT & DAY

மனம், உடல் மற்றும் பாலியல் சார்ந்த துன்புறுத்தலுக்கு அல்லது அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்படுகிறீர்களா?
பாதுகாப்பற்ற சூழலில் உள்ளீர்களா?
தேர்வு மற்றும் உயர்கல்விக்கு வழிகாட்டுதல் தேவையா?
அழையுங்கள் 14417
உங்கள் விவரங்கள் பிறருக்குத் தெரியாமல் பாதுகாக்கப்படும்

14417 கல்வித் தகவல் மையம்

# தமிழ்த்தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே!
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே!
தமிழணங்கே!
உன் சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!

-'மனோன்மணீயம்' பெ. சுந்தரனார்.

# தமிழ்த்தாய் வாழ்த்து - பொருள்

ஒலி எழுப்பும் நீர் நிறைந்த கடலெனும் ஆடையுடுத்திய நிலமெனும் பெண்ணுக்கு அழகு மிளிரும் சிறப்பு நிறைந்த முகமாகத் திகழ்கிறது பரதக்கண்டம். அக்கண்டத்தில், தென்னாடும் அதில் சிறந்த திராவிடர்களின் நல்ல திருநாடும் பொருத்தமான பிறை போன்ற நெற்றியாகவும், அதிலிட்ட மணம் வீசும் திலகமாகவும் இருக்கின்றன.

அந்தத் திலகத்தில் இருந்து வரும் வாசனைபோல, அனைத்துலகமும் இன்பம் பெறும் வகையில் எல்லாத் திசையிலும் புகழ் மணக்கும்படி (புகழ் பெற்று) இருக்கின்ற பெருமைமிக்க தமிழ்ப்பெண்ணே! தமிழ்ப்பெண்ணே! என்றும் இளமையாக இருக்கின்ற உன் சிறப்பான திறமையை வியந்து உன்வயப்பட்டு எங்கள் செயல்களை மறந்து உன்னை வாழ்த்துவோமே! வாழ்த்துவோமே! வாழ்த்துவோமே!

| பாடம் | பாடப்பொருள் | | பக்க எண் |
|---|---|---|---|
| 1 | **செம்மொழித்தமிழ்** | | 1 |
| | தெரிந்துகொள்வோம் | பெயர்ச்சொல் (பொருள், இடம், காலம்) | |
| | கேட்டல் கருத்தறிதல் | காலம் பொன் போன்றது | |
| | செந்தமிழ்ச்செல்வம் | நாலடியார் | |
| 2 | **இணையத்தில் தமிழ்** | | 13 |
| | தெரிந்துகொள்வோம் | மரபுத்தொடர்கள் | |
| | கேட்டல் கருத்தறிதல் | முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார் | |
| | செந்தமிழ்ச்செல்வம் | திருக்குறள் | |
| 3 | **புறநானூற்றில் மேலாண்மைத்திறன்** | | 23 |
| | தெரிந்துகொள்வோம் | பெயர்ச்சொல் (சினை, குணம்/ பண்பு, தொழில்) | |
| | கேட்டல் கருத்தறிதல் | தலைமைப்பண்பு | |
| | செந்தமிழ்ச்செல்வம் | திருக்குறள் | |
| 4 | **வீரச்சிறுவன்** | | 34 |
| | தெரிந்துகொள்வோம் | இணைமொழிகள் | |
| | கேட்டல் கருத்தறிதல் | கடமையைச் செய்வோம் | |
| | செந்தமிழ்ச்செல்வம் | சிலப்பதிகாரம் | |
| 5 | **தமிழர் உணவுப் பழக்க வழக்கங்கள்** | | 46 |
| | தெரிந்துகொள்வோம் | பெயரெச்சம் | |
| | கேட்டல் கருத்தறிதல் | உதவி மகிழ்வோம் | |
| | செந்தமிழ்ச்செல்வம் | குடும்ப விளக்கு | |

| பாடம் | பாடப்பொருள் | | பக்க எண் |
|---|---|---|---|
| 6 | **மாமனிதர்** | | 57 |
| | தெரிந்துகொள்வோம் | ஒலி வேறுபாட்டுச் சொற்கள் – (ண, ந, ன) | |
| | கேட்டல் கருத்தறிதல் | நன்றே செய்வோம் | |
| | செந்தமிழ்ச்செல்வம் | திருக்குறள் | |
| 7 | **தமிழர் வாழ்வில் இயற்கைக் கூறுகள்** | | 66 |
| | தெரிந்துகொள்வோம் | வினையெச்சம் | |
| | கேட்டல் கருத்தறிதல் | பொறுத்தார் பூமி ஆள்வார் | |
| | செந்தமிழ்ச்செல்வம் | திருக்குறள் | |
| 8 | **நீர் மேலாண்மை** | | 78 |
| | தெரிந்துகொள்வோம் | இணைமொழிகள் | |
| | கேட்டல் கருத்தறிதல் | போதும் என்ற மனமே பொன்செய்யும் மருந்து | |
| | செந்தமிழ்ச்செல்வம் | திருக்குறள் | |
| | **மீள்பார்வை – பயிற்சிகள்** | | 89 |
| 9 | **உலக நூலகங்கள்** | | 95 |
| | தெரிந்துகொள்வோம் | ஒரு சொல் பல பொருள் | |
| | கேட்டல் கருத்தறிதல் | ஊக்கத்தின் மேன்மை | |
| | செந்தமிழ்ச்செல்வம் | திருக்குறள் | |
| 10 | **கல்வியின் சிறப்பு** | | 108 |
| | தெரிந்துகொள்வோம் | ஒலி வேறுபாட்டுச் சொற்கள் – (ர, ற) | |
| | கேட்டல் கருத்தறிதல் | அகத்தின் அழகு முகத்தில் தெரியும் | |
| | செந்தமிழ்ச்செல்வம் | திருக்குறள் | |

| பாடம் | பாடப்பொருள் | பக்க எண் |
|---|---|---|
| 11 | **பழந்தமிழர் வாணிகம்** | 122 |
| | தெரிந்துகொள்வோம் : பல சொல் ஒரு பொருள் | |
| | கேட்டல் கருத்தறிதல் : உழைப்பின் சிறப்பு | |
| | செந்தமிழ்ச்செல்வம் : புறநானூறு | |
| 12 | **உலகத் தொழில் கண்காட்சி** | 134 |
| | தெரிந்துகொள்வோம் : மரபுத்தொடர்கள் | |
| | கேட்டல் கருத்தறிதல் : திட்டமிட்டுச் செயல்படுவோம் | |
| | செந்தமிழ்ச்செல்வம் : திருக்குறள் | |
| 13 | **சிலம்பாட்டம்** | 144 |
| | தெரிந்துகொள்வோம் : ஒலி வேறுபாட்டுச் சொற்கள் (ல, ழ, ள) | |
| | கேட்டல் கருத்தறிதல் : மனத்தை ஒருமுகப்படுத்துவோம் | |
| | செந்தமிழ்ச்செல்வம் : திருமந்திரம் | |
| 14 | **சிலை சொல்லும் கதை** | 160 |
| | தெரிந்துகொள்வோம் : தொடர் அமைத்தல் | |
| | கேட்டல் கருத்தறிதல் : சிந்தித்துச் செயல்படு | |
| | செந்தமிழ்ச்செல்வம் : நீதிநெறி விளக்கம் | |
| | **மீள்பார்வை – பயிற்சிகள்** | 170 |

1.1 பேசுவோம்

பாடம்
1



## கலந்துரையாடுவோம்

நம் கருத்தைப் பிறருக்குத் தெரிவிக்க உதவும் கருவி மொழி என்பது குறித்து வகுப்பில் கலந்துரையாடுக.

## 1.2 படிப்போம்

# செம்மொழித்தமிழ்

கவியரசி ஏழாம் வகுப்பில் படிக்கிறாள். அன்று, வகுப்பாசிரியர் 'செம்மொழித்தமிழ்' என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுமாறு கூறினார். அனைவரும் ஆர்வத்துடன் எழுதினர்.



கவியரசி எழுதிய கட்டுரை மிகவும் சிறப்பாக இருந்தது. ஆசிரியர் அவள் எழுதிய கட்டுரையைப் படிக்குமாறு கூறினார். கவியரசியும் மகிழ்ச்சியுடன் படிக்கத் தொடங்கினாள்.

மொழி நம் கருத்தைப் பிறருக்கு உணர்த்த உதவும் ஒரு கருவி. உலகில் பல மொழிகள் பேசப்படுகின்றன. அவற்றுள் சில மொழிகள் தொன்மை, தனித்தன்மை, உயர்சிந்தனை ஆகிய தகுதிகளைப் பெற்று இருக்கின்றன. அத்தகைய மொழிகள் செம்மொழிகள். தமிழ், சமஸ்கிருதம், இலத்தீன், சீனம், கிரேக்கம், எபிரேயம், பெர்சியன் மற்றும் அரபிக் ஆகிய எட்டும் உலகச் செம்மொழிகள். இந்தியமொழிகளில் தமிழைத் தொடர்ந்து சமஸ்கிருதம், கன்னடம், தெலுங்கு, மலையாளம், ஒடியா ஆகிய மொழிகளுக்கும் இந்திய அரசு செம்மொழித் தகுதி வழங்கியுள்ளது.

தமிழ் மிகவும் தொன்மையான மொழி. இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் எனத் தமிழ்மொழி முத்தமிழாய் விளங்குகின்றது. தமிழில் இலக்கிய, இலக்கணங்கள் மிகுதியாக உள்ளன. தமிழின் தொன்மையை முதன்முதலில் உலகமறியச் செய்தவர் கால்டுவெல் ஆவார். பரிதிமாற்கலைஞர், மறைமலையடிகள் ஆகிய இருவரும் தனித்தமிழ் வளர்த்தனர். தேவநேயப்பாவாணர் செம்மொழிக்குரிய பண்புகளைக் கூறியுள்ளார்.

தமிழால் ஈர்க்கப்பட்ட அயல்நாட்டு அறிஞர்களும் தமிழுக்குச் சிறப்பு சேர்த்துள்ளனர். அவர்களுள் ஜி.யு.போப், கால்டுவெல், வீரமாமுனிவர் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். இன்று உலகம் முழுதும் தமிழ்மொழி கொண்டாடப்படுகின்றது. காலந்தோறும் ஏற்படும் மாற்றங்களை ஏற்றுக் கன்னித்தமிழாய் விளங்குகின்றது; கணித்தமிழாய் ஒளிர்கின்றது. தமிழின் சிறப்பை உணர்ந்து நாமும் தமிழைக் கற்போம். அதன் இலக்கியங்களைப் படித்துச் சுவைத்து மகிழ்வோம் எனக் கவியரசி, தான் எழுதிய கட்டுரையைப் படித்து முடித்தாள். மாணவர்கள் அனைவரும் கைகளைத் தட்டித் தமது பாராட்டுகளைத் தெரிவித்தனர்.

### செம்மொழிக்குரிய தகுதிகள்

- தொன்மை
- பிறமொழித் தாக்கமின்மை
- தாய்மை
- தனித்தன்மை
- இலக்கிய வளம்
- இலக்கணச் சிறப்பு
- பொதுமைப் பண்பு
- நடுவுநிலைமை
- பண்பாடு, கலை, பட்டறிவு வெளிப்பாடு
- உயர்சிந்தனை
- கலை இலக்கியத் தனித்தன்மை வெளிப்பாடு
- மொழிக்கோட்பாடு

## பொருள் அறிவோம்

1. தொன்மை - பழைமை
2. முத்தமிழ் - மூன்று தமிழ் (இயல், இசை, நாடகம்)
3. செம்மொழி - செம்மையான மொழி

## பயிற்சிகள்

### (அ) விடை காண்போம்.

1. கவியரசியின் வகுப்பாசிரியர் எந்தத் தலைப்பில் கட்டுரை எழுதுமாறு சொன்னார்?
2. மொழி எதற்கு உதவுகிறது?
3. உலகச் செம்மொழிகளாகக் கூறப்படும் மொழிகள் எத்தனை? அவை யாவை?
4. தமிழ்மொழியின் தொன்மையை முதன்முதலில் உலகமறியச் செய்தவர் யார்?
5. செம்மொழிக்குரிய பண்புகளைக் கூறியவர் யார்?

### (ஆ) உரிய சொல்லைக் கொண்டு தொடரை நிறைவு செய்க

(வீரமாமுனிவர், தொன்மை, செம்மொழித்தகுதி, பரிதிமாற்கலைஞர், இசைத்தமிழ்)

1. தமிழ் மிகவும் ____________ வாய்ந்த மொழி.
2. தனித்தமிழ் வளர்த்த அறிஞர்களுள் ஒருவர் ______________.
3. முத்தமிழுள் ஒன்று ____________.
4. தமிழால் ஈர்க்கப்பட்ட அயல்நாட்டு அறிஞர்களுள் ஒருவர் ____________.
5. இந்திய அரசு இந்திய மொழிகளுக்கான ____________ யை வழங்குகிறது.

### (இ) பின்வரும் தொடர்களைப் படித்துச் சரி/தவறு எனக் குறிப்பிடுக.

1. நம் கருத்தைப் பிறருக்கு உணர்த்த உதவும் கருவியே மொழி.
2. தொன்மை, தனித்தன்மை, உயர்சிந்தனை முதலான தகுதிகளைப் பெற்ற மொழியே செம்மொழியாகக் கருதப்படுகிறது.
3. தமிழ்மொழியின் தொன்மையை முதன்முதலில் உலகமறியச் செய்தவர் வீரமாமுனிவர்.

## 1.3 தெரிந்துகொள்வோம்

### பெயர்ச்சொல் (பொருள், இடம், காலம்)

பெயரைக் குறித்துவரும் சொல் பெயர்ச்சொல் (Noun). இப்பெயர்ச்சொல் ஆறு வகைப்படும்.

1. பொருட்பெயர்
2. இடப்பெயர்
3. காலப்பெயர்
4. சினைப்பெயர்
5. பண்பு/குணப்பெயர்
6. தொழிற்பெயர்

இவற்றுள் முதல் மூன்று பெயர்ச்சொற்களைப் பற்றி இப்பாடப் பகுதியில் படிப்போம்.

### பொருட்பெயர்


ஒரு பொருளின் பெயரைக் குறிப்பது பொருட்பெயர்.



கணினி



வாசன்



குதிரை



மரம்

## இடப்பெயர்

ஓர் இடத்தின் பெயரைக் குறிப்பது இடப்பெயர்.



வீடு




பள்ளி



பூங்கா



சாண்டியாகோ நகரம்

## காலப்பெயர்

காலத்தின் பெயரைக் குறிப்பது காலப்பெயர்.



மழைக்காலம்



மாலைநேரம்



கோடைக்காலம்




ஜனவரி மாதம்

## பயிற்சிகள்

### (அ) பொருத்துவோம்

| | | |
|---|---|---|
| 1. | கலிஃபோர்னியா | காலப்பெயர் |
| 2. | பனிக்காலம் | பொருட்பெயர் |
| 3. | கொய்யாப்பழம் | இடப்பெயர் |


### (ஆ) பின்வரும் உரைப்பகுதியிலிருந்து பொருட்பெயர், இடப்பெயர், காலப்பெயர்களைக் கண்டறிந்து அட்டவணையில் எழுதுக.

வேலன் பள்ளியிலிருந்து மாலை வீட்டிற்கு வந்தான். உடைகளை மாற்றினான். சமையலறைக்குச் சென்றான். தேநீர் தயாரித்துப் பருகினான். விளையாட்டுத் திடலுக்கு ஐந்துமணிக்குச் சென்றான். நண்பர்களுடன் கால்பந்து விளையாடினான். பின்னர், தன் தந்தையுடன் அங்காடிக்குச் சென்றான். கேக் மற்றும் சாக்லெட்டுகள் வாங்கினான். இரவு வீடு திரும்பினான்.

| பொருட்பெயர் | இடப்பெயர் | காலப்பெயர் |
|---|---|---|
| | | |

## 1.4 மொழியோடு விளையாடுவோம்

**பழங்களின் பெயர்களைப் படித்து, உரிய கூடையில் சேர்ப்போமா?**







பொருட்பெயர்　　இடப்பெயர்　　காலப்பெயர்

## சுவைச்செய்தி

அறிஞர் அண்ணா தமிழ்மொழியில் புலமை பெற்றவர். அதுபோன்றே ஆங்கிலத்திலும் புலமையுடன் விளங்கினார். ஒரு நிகழ்ச்சியின்போது, அண்ணாவின் புலமையைச் சோதிக்க விரும்பினார் ஒருவர். அவர் அண்ணாவைப் பார்த்து, "Frame a sentence that has three 'because' continuously" என்றார். உடனே அறிஞர் அண்ணா, "No sentence can end with because because, because is a conjunction" என்று கூறினார். அவர் கூறியதைக் கேட்ட அனைவரும் வியப்பில் ஆழ்ந்தனர்.



அறிஞர் அண்ணா

## கருத்து விளக்கப்படம்

**கீழ்க்காணும் செய்தித்தாள் செய்தியைப் படித்து, வினாக்களுக்கு விடை எழுதுக.**

### செம்மொழித் தமிழ்

சென்னை, ஜூன் 6 - செம்மொழி என இந்திய அரசால் அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்ட முதல் இந்தியமொழி, தமிழ்தான். இந்திய நாடாளுமன்றத்தின் இரு அவைகளின் கூட்டுக் கூட்டமொன்றின்போது, 2004ஆம் ஆண்டில் அப்போதைய இந்தியக் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

இந்தியாவில் தற்போது தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் ஆட்சிமொழியாகத் தமிழ் இருக்கிறது. இலங்கையின் ஆட்சி மொழிகளுள் தமிழும் ஒன்று. சிங்கப்பூரிலும் ஆட்சி மொழிகளில் ஒன்றாகத் தமிழ் இடம்பெற்றுள்ளது. தென்னாப்பிரிக்காவிலும் தமிழுக்கு அரசியலமைப்பு அங்கீகாரம் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

### வினாக்கள்

1. இந்திய அரசால் செம்மொழி என்று அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்ட முதல் இந்திய மொழி எது?
2. தமிழைச் செம்மொழியாக அறிவித்த ஆண்டு எது?
3. தமிழ், செம்மொழி என யாரால், எங்கு அறிவிக்கப்பட்டது?
4. தமிழ், எந்தெந்த நாடுகளில் ஆட்சிமொழியாக உள்ளது?
5. தென்னாப்பிரிக்காவில் தமிழுக்கு எத்தகைய அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது?

## 1.5 கேட்டல் கருத்தறிதல்

### காலம் பொன் போன்றது

அமெரிக்காவின் குடியரசுத்தலைவராக இருந்தவர் ஜார்ஜ் வாஷிங்டன். அவர், எப்போதும் காலம் கருதிச் செயல்படுவார். நேரத்தை வீணாக்குவது அவருக்குப் பிடிக்காது. எந்த ஒரு விழாவாக இருந்தாலும் குறித்த நேரத்திற்குச் சென்றிடுவார்.

ஒரு நாள் வழக்கம்போல நாடாளுமன்றத்திற்கு வந்தார். ஆனால், அவருடைய தனிச் செயலாளர் வரவில்லை. சிறிது நேரத்திற்குப் பிறகு செயலாளர் பரபரப்புடன் வந்தார். "ஐயா, என்னை மன்னிக்க வேண்டும். என்னுடைய கடிகாரம் மெதுவாக ஓடுவதால் வருவதற்குச் சிறிது நேரம் ஆகிவிட்டது" என்றார்.

ஜார்ஜ் வாஷிங்டன் தம் செயலாளரைப் பார்த்து, "ஒன்று உங்கள் கடிகாரத்தை மாற்றுங்கள் அல்லது நான் உங்களை மாற்ற வேண்டியிருக்கும்" என்றார்.

### வினாக்கள்

1. ஜார்ஜ் வாஷிங்டன் எந்த நாட்டின் குடியரசுத்தலைவராக இருந்தார்?
2. ஜார்ஜ் வாஷிங்டனுக்குப் பிடிக்காதது எது?
3. நாடாளுமன்றத்திற்கு நேரம் கடந்து வந்தவர் யார்? அதற்கு அவர் கூறிய காரணம் என்ன?
4. குடியரசுத் தலைவர், தம் தனிச் செயலாளரிடம் என்ன கூறினார்? ஏன்?
5. 'காலம் பொன் போன்றது' என்பது பற்றி, உங்களுக்கு ஏற்பட்ட அனுபவத்தைக் கூறுக.

## 1.6 படம் பார்த்துக் கருத்து கூறல்



## 1.7 செந்தமிழ்ச்செல்வம்

### நாலடியார்

கல்வி கரை இல; கற்பவர் நாள் சில;
மெல்ல நினைக்கின் பிணி பல; தெள்ளிதின்
ஆராய்ந்து அமைவுடைய கற்பவே, நீர் ஒழியப்
பால் உண் குருகின் தெரிந்து.

(பாடல் - 135)

- சமண முனிவர்கள்

(பிணி - நோய்; தெள்ளிதின் - தெளிவாக; குருகு - கொக்கு)

**பொருள்:**

கல்வி கற்பதற்கு எல்லையில்லை. அதனைக் கற்பவர்களின் வாழ்நாள்கள் குறைவு. சற்று அமைதியாக நினைத்துப்பார்த்தால் அந்தக் குறைந்த வாழ்நாள்களில் நோயுடன் வாழும் நாள்கள் பலவாக இருக்கின்றன. அதனால் அறிஞர்கள் 'பாலையும் நீரையும் கலந்து வைத்தால் பாலை மட்டும் அருந்தும் கொக்கைப் போல' பொருத்தமுடைய நூல்களைத் தேர்ந்தெடுத்து, அவற்றைத் தெளிவுபட ஆராய்ந்து கற்பார்கள்.

### பழமொழி

கற்றது கைம்மண்ணளவு கல்லாதது உலகளவு

## சொல்வதைக் கேட்டு எழுதுக

1. பண்பாடு
2. தனித்தன்மை
3. உயர்சிந்தனை
4. செம்மொழி
5. இலக்கியம்

## சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக

எ.கா : காலை நேரம்

நடைப்பயிற்சி செய்யக் காலை நேரம் நல்லது

1. முத்தமிழ்
2. தகுதி
3. பாராட்டு

## 1.8 மொழிபெயர்ப்போம்

1. Tamil language is spoken in many countries.

   பல நாடுகளில் தமிழ்மொழி பேசப்படுகிறது.

2. Tamil language has rich literature spanning more than two thousand years.

   ______________________________

## 1.9 அறிந்துகொள்வோம்

| | | | |
|---|---|---|---|
| 1. | செம்மொழி | – | Classical Language |
| 2. | உயர்சிந்தனை | – | High thinking |
| 3. | நடுவுநிலைமை | - | Impartiality |
| 4. | தனித்தன்மை | – | Uniqueness |
| 5. | பண்பாடு | - | Culture |

## 1.10 படைப்பாற்றல் வளர்ப்போம்

'மொழி' என முடியும் நான்கு வரிப் பாடல் எழுதுக

(எ-கா)

நான் பேசும் மொழி

நல்ல தமிழ் மொழி

______________________________

______________________________

______________________________

______________________________

## 1.11 செயல் திட்டம்

தமிழ் வளர்த்த அறிஞர்களுள் ஒருவரைப் பற்றித் தகவல்களைத் திரட்டித் தொகுப்பேடு தயாரித்து வருக.

பாடம்
2

## 2.1 பேசுவோம்















### கலந்துரையாடுவோம்

மேற்கண்ட படங்களிலுள்ள தமிழ்மொழியின் வளர்ச்சிப் படிநிலைகள் குறித்து வகுப்பில் ஆசிரியரோடு கலந்துரையாடுக.

## 2.2 படிப்போம்

# இணையத்தில் தமிழ்

மணிமொழி டெக்சாஸில் வசிக்கிறாள். அவளுடைய அத்தை சென்னையில் வசிக்கிறார். இருவரும் புலனம் (Whatsapp) வாயிலாகக் காணொலியில் கலந்துரையாடுகிறார்கள்.



**மணிமொழி** : ஹாய் அத்தை. எப்படி இருக்கிறீர்கள்?

**அத்தை** : நன்றாக இருக்கிறேன், மணிமொழி. அதுசரி, நீ ஏன் ஒரு வாரமாக என்னுடன் பேசவில்லை?

**மணிமொழி** : நான் உங்களுடன் தொடர்புகொள்வதற்கு வேறு ஒருவழியைப் பின்பற்ற நினைத்தேன். ஆனால், எப்படி என்றுதான் தெரியவில்லை.

**அத்தை** : அது என்ன வழி?

**மணிமொழி** : சொல்கிறேன் அத்தை. இதுநாள்வரை, நான் உங்களுக்கு ஆங்கில மொழியில்தானே செய்தி அனுப்பிக்கொண்டு இருந்தேன். இந்த முறை தமிழில் அனுப்பலாம் என நினைத்தேன். ஆனால், எப்படி என்றுதான் தெரியவில்லை.


**அத்தை** : அட... இதுதான் உன் பிரச்சனையா? கவலையை விடு, மணிமொழி. நான் உனக்குத் தமிழில் செய்தி அனுப்பச் சொல்லித் தருகிறேன்.

**மணிமொழி** : அது சரிதான் அத்தை. ஆனால், கணினியில் (Computer) தட்டச்சு(Typing) செய்வதற்கு ஆங்கில எழுத்துகள்தாம் உள்ளன. அங்குத் தமிழில் எப்படித் தட்டச்சு செய்ய முடியும்?



**அத்தை** : மிக நல்ல கேள்வி மணிமொழி. உன்னைப்போலத்தான் பலருக்கும் இத்தகைய ஐயம் முன்பு எழுந்தது. ஆனால், இப்போது தமிழில் தட்டச்சு செய்வதற்கான இடைமுகம் (Interface) எழுத்துருக்களைப் (Font) பதிவிறக்கம் (Download) செய்து தட்டச்சு செய்யலாம்.

**மணிமொழி** : ஓ! அப்படியா அத்தை? ஆனால் எனக்குத்தான் தமிழில் தட்டச்சு செய்யத் தெரியாதே?




**அத்தை** : அதனால் என்ன? நீ ஒலிப்பு (Phonetic) முறையிலேயே தமிழ் எழுத்துருக்களைத் தட்டச்சு செய்யலாம். அதாவது, நீ ஆங்கிலத்தில் ammA என்று தட்டச்சு செய்தால், தமிழில் அம்மா என வரும். முயற்சி செய்துதான் பாரேன்.

மணிமொழி : அட... இது நல்லா இருக்கே! கட்டாயம் செய்கிறேன், அத்தை. ஆனால், எனக்கு இன்னும் ஓர் ஐயம்....

அத்தை : மீண்டும் என்ன ஐயம்?

மணிமொழி : அது வந்து. . . அத்தை, நான் ஒலிப்பு முறையைப் (Phonetic) பயன்படுத்தித் தமிழில் தட்டச்சு செய்து அனுப்பினால், உங்களால் படிக்க முடியுமா?

அத்தை : மணிமொழி, நீ நன்றாகச் சிந்திக்கிறாய். நீ பதிவிறக்கம் செய்து பயன்படுத்திய தமிழ் எழுத்துரு என்னிடமும் இருக்கவேண்டும். அப்போதுதான், அதனை என்னால் படிக்கமுடியும் என்றுதானே நினைக்கிறாய். இப்போது நீ கூறியதை, முன்னரே வல்லுநர்களும் நினைத்தார்கள். அதனால்தான், மற்ற மொழிகளுக்கு ஒருங்குறி அமைப்பு இருப்பதுபோலத் தமிழுக்கும் ஒருங்குறி (UNICODE) உருவாக்கியுள்ளார்கள்.



மணிமொழி : தமிழ் ஒருங்குறியா? அப்படி என்றால் என்ன, அத்தை?

அத்தை : சொல்கிறேன், கேள். முன்பெல்லாம், கணினியில் தமிழ்த் தட்டச்சு செய்வதற்கு எனப் பொதுவான எழுத்துரு இல்லை. அதனால், எந்த எழுத்துருவைப் பயன்படுத்துகிறோமோ, அதனையும் செய்தியோடு சேர்த்து அனுப்பினால்தான் மற்றவர்களால் படிக்க இயலும். இப்போது அப்படியில்லை. ஆங்கிலத்தைப் போலத் தமிழுக்கும் பொதுவான எழுத்துருவைக் கண்டறிந்துள்ளார்கள். அதனை, இணையத்திலிருந்து (Internet) இலவசமாகப் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். சரி, மணிமொழி. தமிழில் தட்டச்சு செய்வது குறித்து அறிந்துகொண்டாய் என நினைக்கிறேன். சரிதானே?

மணிமொழி : சரிதான் அத்தை. மிக்க நன்றி.

அத்தை : நல்லது மணிமொழி. அம்மாவையும் அப்பாவையும் கேட்டதாகச் சொல். மீண்டும் தொடர்புகொள்வோம்.

## தமிழ் அறிவோம்

| | | |
|---|---|---|
| வலைப்பூ (blog) | புலனம் (whatsapp) | படப்பகிரி (Instagram) |
| வலையொளி (YouTube) | முகநூல் (Facebook) | |

## பொருள் அறிவோம்

1. தட்டச்சு - கணினியில் எழுத்துகளைப் பதிப்பித்தல்
2. எழுத்துரு - தட்டச்சு செய்யப் பயன்படும் எழுத்துகளின் வரிவடிவம்
3. ஒருங்குறி - கணினி வழியாக தமிழில் தட்டச்சு செய்யப் பயன்படும் பொதுவான எழுத்துரு

## பயிற்சிகள்

### அ) விடை காண்போம்.

1. தமிழ் ஒருங்குறி (UNICODE) எழுத்துரு ஏன் உருவாக்கப்பட்டது?
2. எழுத்துருக்கள் என்றால் என்ன? அவற்றின் பயன் யாது?
3. மணிமொழி தன் அத்தையின் மூலம் தெரிந்துகொண்ட தகவல்கள் யாவை?

### ஆ) கோடிட்ட இடத்தில் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

### (ஒலிப்பு, புலனம், தட்டச்சு, ஒருங்குறி, எழுத்துரு)

1. டெக்ஸாஸில் வாழும் மணிமொழி, அத்தையுடன் __________ வாயிலாகப் பேசினாள்.
2. தமிழில் __________ எனப்படும் ஒரே குறியீட்டுத்தரம் உருவாக்கப்பட்டது.
3. __________ முறையில் தமிழில் தட்டச்சு செய்யலாம்.
4. மணிமொழி தமிழ்மொழியில் __________ செய்வது பற்றி அறிந்துகொண்டாள்.
5. ஆங்கிலத்தைப் போன்று தமிழ்மொழிக்கும் __________ கண்டறிந்துள்ளனர்.

### இ) குறியீட்டுடன் பெயரைப் பொருத்துக.

| | | |
|---|---|---|
| 1. | Blog | முகநூல் |
| 2. | Whatsapp | படப்பகிரி |
| 3. | Instagram | வலையொளி |
| 4. | YouTube | வலைப்பூ |
| 5. | Facebook | புலனம் |

## 2.3 தெரிந்துகொள்வோம்

### மரபுத்தொடர்கள்

ஒரு சொற்றொடர் அதற்குரிய பொருளைக் குறிக்காமல், வேறொரு பொருளைக் குறிப்பது மரபுத்தொடர் எனப்படும்.




## பயிற்சிகள்

**(அ) மரபுத் தொடருக்கு ஏற்ற பொருளுடன் இணைத்து எழுதுக.**

| | | | |
|---|---|---|---|
| 1. | தோள் கொடுத்தல் | - | நேர்மையாக இருத்தல் |
| 2. | கை சுத்தம் | - | மிக்க மகிழ்ச்சி அடைதல் |
| 3. | உச்சி குளிர்தல் | - | உறுதுணையாக இருத்தல் |

(ஆ) சூழலுக்கு ஏற்ற மரபுத்தொடரைத் தேர்ந்தெடுத்து எழுதுக


(தோள் கொடுத்தல், கை சுத்தம், உச்சி குளிர்தல்)

| | | | |
|---|---|---|---|
|  | **கவின்** | அம்மா! நான் ஏழை எளியவர்களுக்கு உதவப் பணம் சேகரிக்கிறேன். | ____________ |
| | **அம்மா** | அப்படியா கவின்! உன் செயல் எனக்கு மிக்க மகிழ்ச்சியளிக்கிறது. | |
|  | குமரன் | இந்தப் பாறையை வழியிலிருந்து அகற்ற வேண்டுமே! | ____________ |
| | நண்பர்கள் | நாங்கள் உதவுகிறோம் குமரன். | |
|  | வேல்விழி | அந்தக் காவல் அதிகாரிக்கு ஏன் இவ்வளவு மரியாதை தருகின்றனர்? | ____________ |
| | மாறன் | அவர் பணியில் மிகவும் நேர்மையானவர். | |

## தகவல் துளி


தமிழ் இணையக் கல்விக்கழகம் (Tamil Virtual Academy) என்ற நிறுவனம் கணினித் தமிழுக்கென எழுத்துருக்கள், மென்பொருள்கள், செயலிகள் போன்றவற்றை உருவாக்கி வருகின்றது. அவ்வாறு உருவாக்கப்பட்ட செயலிகளுள் ஒன்று, தமிழ் மின் நிகண்டு (Visual Thesaurus for Tamil). இச்செயலி, உள்ளிடப்படும் ஒரு சொல்லிற்கு இணையான பல பொருளைத் தரும்.

எடுத்துக்காட்டாக, அதில் 'காற்று' என்ற சொல்லிற்கான பொருளைத் தேடினால் அச்சொல் உணர்த்தும் பல பொருள் திரையில் தோன்றும். இதனை http://www.tamilvu.org/ta/content/ என்ற இணைப்பில் காணலாம்.



## 2.4 மொழியோடு விளையாடுவோம்

### குறிப்புகளைக் கொண்டு சொற்களைக் கண்டறிக.




### வலமிருந்து வலம்

1. உலக கணினிகளை இணைப்பது. (4)
2. 'Computer' என்பதன் தமிழ்ச்சொல். (3)
3. வரிவடிவத்தின் மற்றொரு பெயர். (5)

### இடமிருந்து வலம்

4. பொதுவான எழுத்துரு அமைப்பு. (5)
5. 'Interface' என்பதன் தமிழ்ச்சொல். (5)
6. மாணவர்கள் பாடம் படிக்கச் செல்லும் இடம். (7)

### மேலிருந்து கீழ்

7. 'Download' என்பதன் தமிழ்ச்சொல். (7)
8. ஏழு நாள் சேர்ந்தது. (3)

### கீழிருந்து மேல்

9. இந்திய மொழிகளுள் செம்மொழித் தகுதி பெற்ற முதல் மொழி. (3)
10. 'சந்தா மாமா' ஒரு ______________ ஆகும். (5)
11. 'Facebook' என்பதன் தமிழ்ச்சொல். (4)

## 2.5 கேட்டல் கருத்தறிதல்

### முயற்சியுடையார் இகழ்ச்சி அடையார்

முல்லை நன்றாகப் படிப்பாள். அவளுக்குக் கலைகளிலும் ஈடுபாடு இருந்தது. ஆனால், அவள் நினைத்ததுபோல் அனைத்திலும் வெற்றிபெற முடியவில்லை. அதனால், அவள் நம்பிக்கை இழந்து சோர்வாக இருந்தாள். அதை முல்லையின் அம்மா புரிந்துகொண்டார். அவளிடம் ஒரு பழத்தைக் காட்டி, 'இந்தப் பழத்திலுள்ள விதைகளுள் எத்தனை விதைகள் மரமாகும்?' என்று கேட்டார். 'அனைத்து விதைகளுமே மரமாகுமா என்பது ஐயம்தான் அம்மா ' என்றாள் முல்லை.

அம்மா தொடர்ந்தார். 'இதிலிருந்து உனக்கு என்ன தெரிகிறது? முயற்சி செய்யும் அனைத்திலும் வெற்றி கிடைக்கும் என்று எண்ணுதல் கூடாது. முயற்சி என்ற விதைகளை விதைத்துக் கொண்டே இருக்க வேண்டும். ஒருநாள் உறுதியாக வெற்றி கிடைக்கும்' என்றார். முல்லை நம்பிக்கையுடன் புன்னகை செய்தாள்.

### வினாக்கள்

1. முல்லை எவற்றில் ஈடுபாடு கொண்டிருந்தாள்?
2. முல்லை நம்பிக்கை இழக்கக் காரணம் என்ன?
3. முல்லையின் அம்மா கையில் என்ன வைத்திருந்தார்?
4. அம்மா ஒரு பழத்தைக்கொண்டு, முல்லைக்கு எவ்வாறு தன்னம்பிக்கை ஊட்டினார்?
5. முல்லை உணர்ந்துகொண்டது யாது?

## 2.6 படம் பார்த்துக் கருத்து கூறல்



## 2.7 செந்தமிழ்ச்செல்வம்

### திருக்குறள்

எவ்வது உறைவது உலகம் உலகத்தோடு
அவ்வது உறைவது அறிவு.

(குறள் 426)

-திருவள்ளுவர்

(எவ்வது - எவ்வாறு; அவ்வது - அவ்வாறு)

**பொருள்:**

உலகம் எவ்வாறு உயர்ந்தோர் வழியில் செல்கிறதோ, அதற்கேற்ப நாமும் நடந்து கொள்வதே அறிவாகும்.

### பழமொழி

இளங்கன்று பயம் அறியாது

## சொல்வதைக் கேட்டு எழுதுக

1. ஒலிப்புமுறை
2. ஒருங்குறி
3. தமிழ்ப்பணி
4. கல்விக்கழகம்
5. வலையொளி

## சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக

எ.கா. இணையம்

கணினி அறிவியலின் அடுத்த மைல்கல்லாகத் திகழ்வது **இணையம்** ஆகும்.

1. எழுத்துரு
2. மின்னஞ்சல்
3. மின் இதழ்கள்

## 2.8 மொழிபெயர்ப்போம்

1. இணையத்தில் பல தமிழ்நூல்கள் கிடைக்கின்றன.

   Many Tamil books are available on the internet.

2. தமிழ்மொழி வளர்ச்சிக்குக் கணினி பெரிதும் பயன்படுத்தப்படுகின்றது.

   ______________________________

## 2.9 அறிந்துகொள்வோம்

| | | | |
|---|---|---|---|
| 1. | உலவி | – | Browser |
| 2. | சமூகவலைத்தளம் | – | Social Networking Site |
| 3. | அருகலை | – | WiFi |
| 4. | வலைப்பக்கங்கள் | – | Web pages |
| 5. | வழங்கி | - | Server |
| 6. | மின்நூலகம் | - | e-Library |
| 7. | மின் அகராதி | - | e-Dictionary |
| 8. | மின்அஞ்சல் | - | e-mail |
| 9. | விசைப்பலகை | – | Keyboard |
| 10. | பயனர்பெயர் | – | User Name |
| 11. | கடவுச்சொல் | – | Password |
| 12. | வலைப்பூ | – | Blog |

## 2.10 படைப்பாற்றல் வளர்ப்போம்

முகநூல் தளத்தில் உள்ள 'என்னைப் பற்றி' (About me) பகுதிக்கான பதிவைத் தமிழில் எழுதி வருக.


## 2.11 செயல் திட்டம்

தமிழ் இணைய மாநாடுகள் பற்றிய படங்களைத் திரட்டித் தொகுப்பேடு (Album) உருவாக்குக.

பாடம் 3

## 3.1 பேசுவோம்









## கலந்துரையாடுவோம்

அக்காலத்திலும், இக்காலத்திலும் நடைபெற்ற ஆட்சிமுறை, மேலாண்மை அமைப்புகள் குறித்து உங்கள் ஆசிரியருடன் கலந்துரையாடுக.

## 3.2 படிப்போம்

### புறநானூற்றில் மேலாண்மைத்திறன் (கற்பனை நாடகம்)

### காட்சி – 1

உறுப்பினர்கள் – அரசர், அமைச்சர்
இடம் - அரண்மனை

அமைச்சர் : வணங்குகிறேன் அரசே!

அரசர் : வணக்கம் அமைச்சரே, நம் மக்களிடம் புதிதாக வரி வசூலிக்க வேண்டுமென்று கூறினேன் அல்லவா, அது எந்த நிலையில் உள்ளது?

அமைச்சர் : (அமைச்சர் பதில் ஏதும் கூறாமல் இருக்கிறார்.)

அரசர் : அமைச்சரே, என்ன பதிலையே காணோம்? வரி வசூலித்தீரா இல்லையா?

அமைச்சர் : அரசே, சற்றுப் பொறுங்கள். சென்ற மாதம்தான் புதிதாக வரி சுமத்தினீர்கள். இப்போது உடனடியாக மற்றொரு வரி என்றால், மக்கள் என்ன செய்வார்கள்?

அரசர் : அமைச்சரே, நான் இட்ட கட்டளையை நிறைவேற்ற வேண்டியது உம் பொறுப்பு. எதிர்க்கேள்வி கேட்காதீர்.

அமைச்சர் : (அமைச்சர் மெதுவாகத் தலையசைக்கிறார்.)

### காட்சி – 2

உறுப்பினர்கள் – அரசர், அமைச்சர்
இடம் - காட்டுப்பகுதி

அரசர் : அமைச்சரே, வாருங்கள். நகர்வலம் சென்று வருவோம்.

அமைச்சர் : இதோ வருகிறேன், அரசே.

(இருவரும் குதிரை மீதேறிச் செல்கின்றனர். நகரத்தைக் கடந்து, காட்டுப் பகுதி வழியே செல்லும்போது, சற்றுத்தொலைவில் ஒரு யானை இருப்பதைப் பார்க்கின்றனர்.)

அரசர் : அமைச்சரே! அதோ பாருங்கள், காட்டு யானை.

அமைச்சர் : ஆம். அரசே. நன்கு வளர்ந்த யானை. ஆனால். அஃது என்ன செய்கிறது பாருங்கள்.

அரசர் : என்ன செய்கிறது? அந்நிலத்தில் விளைந்துள்ள உணவுப்பயிரைத் தானே மேய்கிறது.

அமைச்சர் ; சரியாகச் சொன்னீர்கள், அரசே. ஆனால், நன்கு உற்றுக் கவனியுங்கள். அதன் வாயில் போகும் உணவைவிட, அதன் காலில் மிதிபட்டு அழிவது அதிகமாக இருக்கிறதே!

அரசர் : அட, ஆமாம். அந்த முரட்டு யானைக்கு யார் எடுத்துச் சொல்வது?

(இருவரும் அரண்மனைக்குத் திரும்புகின்றனர். வழியில், அரசரின் பட்டத்து யானையைக் காண்கின்றனர்.)

அமைச்சர் : அரசே, அதோ பாருங்கள். நம் பட்டத்து யானை எத்துணை அழகு! அதன் தந்தங்களைப் பாருங்கள். பிறை நிலா போல உள்ளனவே! அஃது, உணவுப் பொருளைக் கொஞ்சம்கூட வீணாக்காமல் உண்கிற அழகைக் காணுங்கள்.

அரசர் : அட, ஆமாம். யானைப்பாகன் கவளம் கவளமாக உணவைக் கொடுக்க, அது சிந்தாமல் சிதறாமல் உண்கிறதே!

அமைச்சர் : ஆம். அரசே. நம் பட்டத்து யானை இப்படி உணவு உண்டால், சிறுநிலத்தில் விளைந்த நெல்லும் அதற்குப் பல நாள் உணவாகும்.

அரசர் : உண்மைதான் அமைச்சரே.

(இதைக் கூறிய அரசர் ஏதோ சிந்தனையில் ஆழ்ந்தார். அவர் நினைத்ததை அமைச்சர் புரிந்து கொண்டார்.)

அமைச்சர் : 'அரசே! நாம் கண்ட நிகழ்வு, எனக்கு ஒரு பாடலை நினைவூட்டுகிறது.

அரசர் : ஆமாம் அமைச்சரே! அந்தப் பாடல் புறநானூற்றில் உள்ளது. மக்களை வருத்தி, அவர்களிடமிருந்து அதிகமாக வரி வசூலித்தால், அவர்களும் துன்பப்படுவர். நாட்டிலும் வளம் குறையும். அவ்வாறின்றி, மக்களின் நிலையறிந்து முறையாக வரி வசூலித்தால், அவர்களும் மகிழ்ச்சி கொள்வர். நாடும் நலம் பெறும் என்பதை நானும் அறிந்துள்ளேன். இப்போது எனக்குப் புரிந்துவிட்டது. இனி, மக்களைத் துன்பப்படுத்தாமல் சிறந்த முறையில் ஆட்சி செய்வேன்.

அமைச்சர் : நல்லது, அரசே. வாருங்கள். அரண்மனைக்குச் செல்வோம்.

## பொருள் அறிவோம்

1. அண்டை நாடு - அருகிலுள்ள நாடு
2. வரி வசூலித்தல் - வரி ஈட்டுதல்
3. கட்டளை - ஆணை
4. தொலைவில் - தூரத்தில்
5. கவளம் - யானைக்குக் கொடுக்கப்படும் உணவுருண்டை

## பயிற்சிகள்

### அ) விடை காண்போம்

1. காட்டு யானை உணவுண்ட நிகழ்வைக் கூறுக.
2. அரசரின் பட்டத்து யானைக்குரிய சிறப்பு யாது?
3. நாடகக்காட்சி வாயிலாக அரசனுக்கு அறிவுறுத்தப்படும் செய்தி என்ன?

### ஆ) கோடிட்ட இடத்தில் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

**(நகர்வலம், பிறை நிலவு, அரசர், நெல், மக்கள்)**

1. சிறு நிலத்தில் விளைந்த ____________ யானைக்குப் பல நாள் உணவாகும்.
2. மக்களிடம் வரி வசூலிக்க வேண்டுமெனக் கூறியவர் ____________.
3. அரசரும் அமைச்சரும் ____________ சென்றனர்.
4. பட்டத்து யானையின் தந்தங்கள் ____________ போல இருந்தன.
5. அரசன் மிகுதியாக வரி வசூலித்தால் ____________ துன்பப்படுவர்.

### இ) கீழே கொடுக்கப்பட்டுள்ள தொடர்களுள் எது சரி, எது தவறு எனக் கூறுக.

1. மக்களிடம் புதிதாக வரி வசூலிக்க வேண்டுமென்று கூறியவர் அமைச்சர்.

   (சரி/ தவறு)

2. அரசரும், அமைச்சரும் குதிரை மீது ஏறி நகர்வலம் சென்றனர்.

   (சரி/ தவறு)

3. பட்டத்து யானையின் தந்தங்கள் பிறை நிலா போன்று இருந்தன.

   (சரி/ தவறு)

4. அமைச்சர் பட்டத்து யானைக்குக் கவளம் கவளமாக உணவு கொடுத்தார்.

   (சரி/ தவறு)

5. நகர்வலத்தின்போது அரசரும் அமைச்சரும் நன்கு வளர்ந்த குதிரையைக் கண்டனர்.

   (சரி/ தவறு).


## 3.3 தெரிந்துகொள்வோம்

### பெயர்ச்சொல் (சினை, குணம்/ பண்பு, தொழில்)

முதல் மூன்று வகைப் பெயர்ச்சொற்களை முந்தைய பாடத்தில் படித்தோம். இப்பாடப் பகுதியில் சினை, குணம், தொழில் ஆகிய மூன்று வகைப் பெயர்ச்சொற்களைப் பற்றிப் படிப்போம்.

### சினைப்பெயர்


பொருள்களின் உறுப்பைக் குறிப்பது சினைப்பெயர்



**கை**



**பூ**



**கண்**



**கிளை**

### குணப்பெயர்


ஒரு பொருளின் பண்பை உணர்த்தும் பெயர் குணப்பெயர்




பாலின் நிறம் வெண்மை



**நிலவின் வடிவம் வட்டம்**



**சாக்லெட்டின் சுவை இனிமை**



உயரமான கட்டடம்

## தொழில் பெயர்

ஒரு தொழிலை உணர்த்தும் பெயர் தொழிற்பெயர்



ஆடுதல்



நீந்துதல்



ஓடுதல்



படித்தல்

## பயிற்சிகள்

**(அ) கட்டங்களில் உள்ள சினை, குணம், தொழில்பெயர்ச் சொற்களை வண்ணமிட்டுக் காட்டுக.**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| த | லை | தை | வா | ல் | த | டு | பா |
| இ | னி | மை | அ | ம் | ட | ட் | வ |
| மை | ம் | செ | ஓ | லை | ங் | எ | ம் |
| பூ | மொ | ட் | டு | ன் | கா | து | ல் |
| எ | ழு | து | த | ல் | ல் | கா | த |
| மை | ளை | கி | ல் | மை | ரு | க | த் |
| சு | க | ண் | க | ழு | த் | து | டி |
| ப | கை | பு | ப் | ச | க | கை | ப |

## (ஆ) வண்ணமிட்ட சொற்களை உரிய கட்டத்தில் அட்டவணைப்படுத்துக.

1. சித்ரா தோட்டத்தில் பூப் பறித்தாள்.
2. பிறருக்குக் கெடுதல் செய்யக்கூடாது.
3. தேன் இனிப்புச் சுவையுடையது.
4. மரத்தின் கிளையில் கிளிகள் அமர்ந்திருந்தன.
5. பலகை சதுர வடிவில் உள்ளது.
6. நாம் ஒழுக்கத்தைப் பின்பற்றி வாழ்தல் வேண்டும்.
7. இரத்தத்தின் நிறம் சிவப்பு.
8. நல்ல புத்தகங்களைத் தேடிப் படித்தல் வேண்டும்.
9. அழகன் தன் கையே தனக்கு உதவி என்றான்.

| சினைப் பெயர்ச்சொல் | குணப் பெயர்ச்சொல் | தொழில் பெயர்ச்சொல் |
|---|---|---|
| | | |
| | | |
| | | |

## (இ) பொருந்தாத சொல்லை வட்டமிடுக.

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | கண் | கால் | தலை | கைத்தடி |
| 2. | வட்டம் | பட்டம் | செவ்வகம் | சதுரம் |
| 3. | எழுதுதல் | பாடுதல் | தேடல் | திடல் |
| 4. | குருவி | இலை | கிளை | பூ |
| 5. | இனிப்பு | நடிப்பு | புளிப்பு | துவர்ப்பு |

## தகவல் துளி






தமிழ்நாட்டில் காஞ்சிபுரம் மாவட்டத்திற்கு அருகிலுள்ள ஊர் உத்திரமேரூர். இங்குள்ள கல்வெட்டு ஒன்றில் 'குடவோலை முறை' குறித்த செய்தி உள்ளது. ஊரை மேலாண்மை செய்யும் பொறுப்பாளர்கள் 'குடவோலை முறை' மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டனர். முதலில், தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களின் பெயர்களை ஓலைச்சுவடிகளில் எழுதுவார்கள். பின்னர், அவற்றைக் குடத்திலிட்டுக் குலுக்குவார்கள். கூட்டத்திலிருந்து ஒரு சிறுவனை அழைத்து, ஏதேனும் ஓர் ஓலைச்சுவடியை எடுக்கச் செய்வார்கள். இவ்வாறே எத்தனை உறுப்பினர்கள் வேண்டுமோ அத்தனை பேரையும் தேர்ந்தெடுப்பார்கள். இதேபோன்ற செய்தி, சங்க இலக்கியத்திலும் (அகம் : 77) இடம்பெற்றுள்ளது.

## 3.4 மொழியோடு விளையாடுவோம்

**படங்களின் பெயர்களை எழுதிச் சொற்கோபுரம் உருவாக்குக.**










**(பூங்கா, பூ, பூமி, பூக்கள், பூங்கொத்து, பூந்தோட்டம்)**



## 3.5 கேட்டல் கருத்தறிதல்

### தலைமைப்பண்பு

கோடைக்காலம், கடும் வறட்சி நிலவியது. மாவீரன் அலெக்ஸாண்டர் தன் வீரர்களுடன் பயணம் செய்துகொண்டிருந்தார். அனைவரும் தாகத்தால் தவித்தனர். அப்போது, படைவீரர் ஒருவர் சிறிதளவு தண்ணீரைத் தேடிக் கொண்டுவந்தார். அதனை அலெக்ஸாண்டரிடம் கொடுத்தார். அதற்கு அலெக்ஸாண்டர் "நீங்கள் என் உயிரைவிட மேலானவர்கள். நீங்கள் தாகத்தால் வருந்தும்போது நான் மட்டும் எப்படிக் குடிப்பேன்?" என்றார்.

உடனே, "எங்கள் பிள்ளைகளுக்காக" என்றார் ஒரு வீரர். "என்ன, உங்கள் பிள்ளைகளுக்காகவா?" என்றார் அலெக்ஸாண்டர். "ஆம் மன்னா! நீங்கள் நன்றாக இருந்தால் நாடு நன்றாக இருக்கும் அல்லவா?" என்றார் வீரர். அதைக் கேட்ட அலெக்ஸாண்டர் மனம் நெகிழ்ந்தார். "உங்களுக்கு உங்கள் அரசரின் உயிர் முக்கியம். எனக்கு என் வீரர்களாகிய உங்கள் உயிர் மிக முக்கியம். நான் மட்டும் எப்படித் தண்ணீரைக் குடிப்பேன்!" என்று கூறித் தண்ணீரைக் குடிக்க மறுத்துவிட்டார்.

### வினாக்கள்

1. படைவீரர் தண்ணீரைத் தேடிக் கொண்டு வரக் காரணம் என்ன?
2. அலெக்ஸாண்டர் தண்ணீர் குடிக்க வேண்டும் என்பதற்குப் படைவீரர் கூறிய காரணம் என்ன?
3. அலெக்ஸாண்டர், தண்ணீரை ஏன் குடிக்க மறுத்தார்?
4. அலெக்ஸாண்டரின் தலைமைப் பண்பைப் பற்றிப் பேசுக.

## 3.6 படம் பார்த்துக் கருத்து கூறல்



## 3.7 செந்தமிழ்ச்செல்வம்

### திருக்குறள்

இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு.

(குறள் 385)
-திருவள்ளுவர்

(ஈட்டல் - சேர்த்தல்; காத்தல் - பாதுகாத்தல்; வல்லது - திறமையுள்ளது)

**பொருள்:**

செல்வம் (பொருள்) வரும் வழிகளை உண்டாக்குதல், அந்த வழிகளில் பொருளை தேடிப்பெறுதல், ஈட்டியவற்றைக் காத்தல், காத்தவற்றை அறம், பொருள், இன்பம் நோக்கிச் செலவிடுதல் என்னும் இவற்றில் திறமை மிக்கதே அரசு.

### பழமொழி

அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி

## சொல்வதைக் கேட்டு எழுதுக

1. கற்பனை
2. நகர்வலம்
3. உணவுப்பொருள்
4. புறநானூறு

## சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக

### எ.கா. கவளம்

யானைக்கு உணவைக் கவளமாக்கித் தருவர்.

1. கடமை
2. உழைப்பு
3. வரி வசூல்

## 3.8 மொழிபெயர்ப்போம்

1. பழங்காலத்தில் வரிசெலுத்தும் முறை இருந்தது.

______________________________

2. அரசர்கள் நிலத்தைத் தானமாக வழங்கினர்.

______________________________

## 3.9 அறிந்துகொள்வோம்

1. மேலாண்மை - Management
2. யானைப்பாகன் - Mahout
3. கவளம் - Ball of rice
4. உணவுப்பயிர் - Food crop

## 3.10 படைப்பாற்றல் வளர்ப்போம்

**பின்வரும் கதையின் தொடக்கத்தைப் படித்து, உங்கள் கற்பனைக்கு ஏற்றவாறு தொடர்ந்து எழுதுக.**

கவின் தன் நண்பர்களுடன் கடற்கரைக்குச் சென்றான். அங்கு அனைவரும் மகிழ்ச்சியாகப் பேசிக்கொண்டிருந்தனர். அப்போது, ஐந்து வயதுக் குழந்தை ஒன்று, கடலை நோக்கி ஓடியது. பேசிக்கொண்டிருந்த நண்பர்கள், அக்குழந்தை தனியாகச் செல்வதைப் பார்த்துப் பதறினர். அப்போது.......

## 3.11 செயல் திட்டம்

அறமுணர்த்தும் ஒரு சிறுகதையை நாடகமாகத் தொகுத்து வருக.

## 4.1 பேசுவோம்

# பாடம் 4




### கலந்துரையாடுவோம்

நமக்கு என்னென்ன கடமைகள் உள்ளன என்பது குறித்துக் குழுவினருடன் கலந்துரையாடுக.

## 4.2 படிப்போம்

### வீரச் சிறுவன்



ஹாலந்து நாட்டில் சிறிய கிராமம் ஒன்று இருந்தது. அது, கடல் மட்டத்திலிருந்து உயரம் குறைவான பகுதியில் அமைந்திருந்தது. அதனால், அவ்வப்போது கடல் நீர் கிராமத்திற்குள் புகுந்துவிடும். எனவே, கிராம மக்கள் கடல் நீர் உள்ளே வராமல் தடுக்க தடுப்புச்சுவர் கட்டிப் பாதுகாத்து வந்தனர். அந்தத் தடுப்புச் சுவருக்கு 'டைக்ஸ்' (Dikes) என்று பெயரிட்டனர். அந்தக் கிராமத்தில் பீட்டர் என்னும் சிறுவன் இருந்தான். அன்று அவன், தன் நண்பனின் வீட்டிற்குச் சென்றுவிட்டு, டைக்ஸ் வழியாக வந்து கொண்டிருந்தான். இனி...




ஆஹா! என் கிராமம் எவ்வளவு அழகாக இருக்கிறது!



நீலக்கடலே! என் கிராமத்தைப் பார்த்தாயா? எத்துணை அழகு! இதற்குத் தீங்கு செய்ய நீ நினைக்கலாமா?



என்ன இது? தடுப்புச்சுவரிலிருந்து
தண்ணீர் கசிவதுபோல் இருக்கிறதே?
அருகில் சென்று பார்ப்போம்.




யாராவது இருக்கிறீர்களா? ஓடி
வாருங்கள். தடுப்புச்சுவரில் துளை
ஏற்பட்டு, நீர் கசிகிறது. உதவுங்கள்.



நான் என்ன செய்வேன்? அருகில்
யாரும் இல்லையே! இப்படியே
விட்டுவிட்டால், துளை பெரிதாகிக்
கடல்நீர் கிராமத்திற்குள் வந்துவிடுமே!



இதோ, இந்தக் குச்சியைக் கொண்டு
துளையை அடைக்க முயற்சி செய்கிறேன்.
அட, தண்ணீர் கசிவது நிற்கவில்லையே!



என் கைவிரல் கொண்டு துளையை
மூடப்பார்க்கிறேன். அட,
பரவாயில்லையே! இப்போது தண்ணீர்
கசியவில்லை.



ஆ! உடலெல்லாம் நடுங்குகிறதே! குளிர்
வாட்டுகிறதே! யாராவது உதவுங்கள், உதவி!
உதவி!



அதோ, அங்கே பாருங்கள். சிறுவன் ஒருவன் தடுப்புச்சுவரின் அருகே மயங்கிக் கிடக்கிறான். வாருங்கள், உதவுவோம்.



அடடா! தடுப்புச்சுவரில் துளை ஏற்பட்டுள்ளதே! சிறுவன் தன்னுடைய கைவிரலால் அடைத்துக்கொண்டிருக்கிறான் பாருங்கள். ஓ! இரவு முழுவதும் இப்படியே இருந்திருப்பான் போலும்!



(பீட்டர் மெதுவாகக் கண்திறக்கிறான்) தம்பி, நீ எத்துணை பெரிய உதவி செய்திருக்கிறாய், தெரியுமா? உன் உயிரைப் பற்றிக் கவலைப்படாமல், ஊர்மக்களைக் காப்பாற்றி இருக்கிறாய்.



(பீட்டரை அவன் வீட்டிற்கு அழைத்துச் சென்றனர்) அம்மா! உங்கள் மகன் மிகச்சிறந்த வீரன். இன்று நம் அனைவருடைய உயிரையும் காப்பாற்றியிருக்கிறான்.

## பொருள் அறிவோம்

1. தடுப்புச்சுவர் - பாதுகாப்புச்சுவர்
2. கசிவு - வெளியேற்றம்
3. வாட்டுதல் - வருத்துதல்

## பயிற்சிகள்

### (அ) விடை காண்போம்

1. தடுப்புச்சுவர் ஏன் கட்டப்பட்டது?
2. தடுப்புச் சுவரில் ஏற்பட்ட துளையை அடைக்க, பீட்டர் என்ன செய்தான்?
3. பீட்டரின் செயலைக் கண்டு, ஊர் மக்கள் என்ன கூறினர்?

### (ஆ) உரிய விடையை எழுதித் தொடரை நிறைவு செய்க.

(டைக்ஸ், துளை, நீர்க்கசிவு, நண்பன்)

1. தடுப்புச் சுவரின் பெயர் ____________________
2. பீட்டர் தன் ____________________ வீட்டிற்குச் சென்று திரும்பினான்.
3. தடுப்புச் சுவரில் ____________________ ஏற்பட்டு நீர் கசிந்தது.
4. பீட்டர், துளையைத் தன் விரலால் அடைத்து ____________________ ஏற்படாமல் தடுத்தான்.


### (இ) வீரச்சிறுவன் பாடத்திற்குப் பொருந்தும் சரியான மரபுத்தொடரைக் (✓) குறியிட்டு காட்டுக.

1. கை சுத்தம் ☐
2. உச்சி குளிர்தல் ☐

### (ஈ) கீழே கொடுக்கப்பட்ட தொடர்களுள் சரியான தொடருக்கு (✓) குறியிடுக.

1. கிராம மக்கள் தடுப்புச்சுவருக்கு 'டைக்ஸ்' எனப் பெயரிட்டனர். ☐
2. பீட்டர் இங்கிலாந்தில் வசித்து வந்தான். ☐
3. பீட்டர், துளையை அடைப்பதற்குக் கற்களைப் பயன்படுத்தினான். ☐
4. பீட்டர் குளிரால் நடுங்குவதை ஊர்மக்கள் பார்த்தனர். ☐
5. கடல்நீர் ஊருக்குள் வருவதைக் கண்டு, பீட்டர் அஞ்சி ஓடினான். ☐

## 4.3 தெரிந்துகொள்வோம்




**அ) தொடருக்குப் பொருத்தமான இணைமொழியை எடுத்து நிரப்புக.**

(சீரும்சிறப்புமாக, அருமைபெருமை, பேரும்புகழும்)

1. நம் மொழியின் ____________________ அறிந்து நாம் அதனைக் கற்க வேண்டும்.

2. மாறன், கலை இலக்கிய விழாவைச் ____________________ நடத்தினார்.

3. ஜவகரைப் ____________________ பெற்று வாழ்க என அவன் பெற்றோர் வாழ்த்தினர்.

**ஆ) உரிய இணைமொழிகளை நிரப்பி, உரைப்பகுதியை நிறைவு செய்க.**

(பேரும்புகழும், சீரும்சிறப்புமாக, அருமைபெருமை)

கனிமொழி, சிறப்பு விருந்தினரின் ____________________ களைக் கூறி வரவேற்றாள். சிறப்பு விருந்தினர், ____________________ விழா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது எனப் பாராட்டினார். மாணவர்கள் அனைவரும் ____________________ பெற அயராது உழைக்க வேண்டும் என அறிவுரை கூறினார்.

## 4.4 மொழியோடு விளையாடுவோம்

குறிப்புகளைப் படித்து விடுபட்ட எழுத்துகளை வண்ணமிட்ட கட்டத்தில் நிரப்புக.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | க | க | க | | | |
| | | | க | ம் | க | | | |
| | | | க | க | க | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |

**வினாக்கள்**

1. வாசிக்கப் பயன்படுவது ______________
2. போட்டியில் வெற்றி பெற்றால் கிடைப்பது ______________
3. பாலைவனத்தில் வாழும் ஒரு விலங்கு ______________
4. தமிழர்களின் பண்பாட்டுக் கூறுகளுள் ஒன்று ______________ தெரிவித்தல்.
5. கப்பல்கள் நிற்கும் இடம் ______________.
6. ______________ விழுப்பந் தரலான் என்று தொடங்கும் திருக்குறளின் முதல் சொல்.
7. சாப்பிடாமல் இருந்தால் ______________ வரும்.
8. புத்துணர்வு பெற நாளொன்றுக்கு குறைந்தது எட்டு மணி நேர ______________ தேவை.

## கருத்து விளக்கப்படம்

கீழ்க்காணும் விளம்பரத்திலுள்ள செய்தியைப் படித்து, வினாக்களுக்கு விடை எழுதுக.




### வினாக்கள்

1. விளம்பர அறிவிப்பு எதனைப் பற்றியது?
2. விழாவில் சிறுவர்களுக்கு நடத்தப்பெறும் போட்டிகள் யாவை?
3. விழாவில் பெரியவர்களுக்கு நடத்தப்பெறும் போட்டிகள் யாவை?
4. தைமாதத்தில் கொண்டாடப்படும் தமிழர் திருவிழா எது?
5. திருவிழாவில் வழங்கப்பெறும் இலவசங்கள் எவை?

## சுவைச்செய்தி



ஜாதவ் பயேங்

மிகப்பெரிய தீவு, அதில் அடர்ந்த காடு. அதன் நடுவில் மூங்கிலால் அமைந்த வீடு. யானைகள் வரும் ஓசை கேட்டு வீட்டின் தலைவர் வெளியே வந்து பார்க்கின்றார். உடனே தம் குடும்பத்தைப் பாதுகாப்பான இடத்திற்கு அழைத்துச் செல்கிறார். யானைகள் அவருடைய வீட்டை அடித்து உடைக்கின்றன.

அதனைக் கண்ட அவர், மகிழ்ச்சியில் கண்ணீர் விடுகிறார். யானைகள், தம் வீட்டை அடித்து நொறுக்குவதைக் கண்டு ஒருவரால் மகிழ்ச்சி அடைய முடியுமா?

அவ்வாறு மகிழ்ச்சி அடைந்தவர் ஜாதவ்பயேங். அவர், இந்திய நாட்டின் அசாம் மாநில ஜோர்விராட் மாவட்டத்தைச் சேர்ந்தவர். அவர் பிரம்மபுத்திரா ஆற்றின் நடுவிலுள்ள மிகப்பெரிய தீவில் ஒரு காட்டை உருவாக்கியவர். யானைகளின் வருகையைத் தமது உழைப்பிற்குக் கிடைத்த பரிசாகக் கருதியவர். அவர், இந்தியாவின் வனமகன் என்று அழைக்கப்படுகிறார்.

## 4.5 கேட்டல் கருத்தறிதல்

### கடமையைச் செய்வோம்

முதியவர் ஒருவர் மரக்கன்று ஒன்றை நட்டு நீர் ஊற்றினார். அதனைக் கண்ட சிறுவன், 'தாத்தா உங்களுக்கு வயதாகிவிட்டது. இந்த மரம் வளர்ந்து பழம் கொடுக்கும்போது, நீங்கள் அதன் பயனைப் பெற முடியாது. பிறகு ஏன் இதனை வீணாய் நடுகிறீர்கள்?' என்றான். அதற்கு அம்முதியவர், 'அதோ பார்! அந்த மரத்தை நான் நடவில்லை. என் முன்னோர் நட்டு வைத்தனர். ஆனால், அதன் பழங்களை நான் சாப்பிடுகிறேன். அதைப் போல் நான் நட்டு வைக்கும் இம்மரக்கன்று, எனக்குப் பிறகு வரும் உன் போன்றவருக்குப் பயன் தருமே' என்றார். அப்போதுதான் அச்சிறுவனுக்கு முதியவர் செய்யும் செயலின் அருமைபெருமை புரிந்தது.

### வினாக்கள்

1. முதியவர் என்ன செய்து கொண்டிருந்தார்?
2. சிறுவன், முதியவரிடம் என்ன கேட்டான்?
3. கதையில் இடம்பெற்றுள்ள இணைமொழி எது?
4. முதியவர் ஏன் மரக்கன்று நட்டார்?
5. மரம் வளர்ப்பதால் ஏற்படும் நன்மைகள் இரண்டனைக் கூறுக.

## 4.6 படம் பார்த்துக் கருத்து கூறல்



## 4.7 செந்தமிழ்ச்செல்வம்

### சிலப்பதிகாரம்

மா மழை போற்றுதும்! மா மழை போற்றுதும்!
நாம நீர் வேலி உலகிற்கு அவன் அளி போல்,
மேல் நின்று தான் சுரத்தலான்.

(புகார்க் காண்டம்; 1- மங்கல வாழ்த்துப் பாடல் 7-9)

(மாமழை – உயர்ந்த மழை; வேலி – சூழ்ந்தல்; அவன் – இறைவன்;
அளி – ஈகை (கொடுத்தல்); சுரத்தல் – பொழிதல்)

**பொருள்:**

மாமழையைப் போற்றுவோம்; மாமழையைப் போற்றுவோம். கடல் சூழ்ந்த இவ்வுலகிற்கு இறைவன் அளித்த கொடையைப்போல் மேலிருந்து பொழிவதால் மாமழையைப் போற்றுவோம்.

### பழமொழி

தருமம் தலைகாக்கும்

## சொல்வதைக் கேட்டு எழுதுக

1. கிராமம்
2. தடுப்புச்சுவர்
3. கடல்மட்டம்
4. கவலை
5. ஊர் மக்கள்

## சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக

எ.கா : கடல் நீர்

கடற்கரைக்குச் சென்றால், கடல் நீரில் கால் நனைத்து விளையாடலாம்.

1. துளை
2. தடுப்புச்சுவர்
3. உதவி

## 4.8 மொழிபெயர்ப்போம்

1. There was a small village in Holland

___

2. Peter saved everyone's life

___

## 4.9 அறிந்துகொள்வோம்

1. கிராமம் - Village
2. கடல் - Sea
3. கடல்நீர் - Sea water
4. கடல் மட்டம் - Sea level
5. தடுப்புச்சுவர் - Barrier Wall
6. பாதுகாப்பு - Protection
7. துளை - Hole
8. நீர்கசிதல் - Water Leakage

## 4.10 படைப்பாற்றல் வளர்ப்போம்

**கதையைப் படித்துப் பொருத்தமான தலைப்பு தருக.**







பெரிய ஆலமரம். அந்த ஆலமரத்தின் அடியில் அமர்ந்து ஊரிலுள்ள பெரியவர்கள் ஓய்வு எடுத்தனர். குழந்தைகளும் அங்கு விளையாடிக் கொண்டிருந்தனர். அப்பொது அங்கு விளையாடிக்கொண்டிருந்த பூங்கொடி கால் தடுக்கி விழுந்துவிட்டாள். அதனைக் கண்ட அவளுடைய நண்பர்களான தேன்மொழியும் இளவரசியும் அவளைத் தூக்கி அவளுக்கு உதவி செய்தனர். ஆனால் தமிழ்ச்செல்வி மட்டும் பூங்கொடி விழுந்ததைப் பார்த்துப்பார்த்துச் சிரித்துக்கொண்டிருந்தாள். உடனே அங்கிருந்த பாட்டி ஒருவர் அவர்களுக்குப் 'பிறர் வலியினைக் கண்டு நாம் மகிழக் கூடாது' என்று கூறினார். அதனைக் கேட்ட தமிழ்ச்செல்வி, பூங்கொடியிடம் வந்து மன்னிப்புக் கேட்டாள். மீண்டும் அனைவரும் இணைந்து விளையாடினர்.

## 4.11 செயல் திட்டம்

உம் பாடப்பகுதியிலுள்ள 'வீரச்சிறுவன்' படக்கதையைக் காணொலியாகத் தயாரித்து வருக.

பாடம்

5

## 5.1 பேசுவோம்



### கலந்துரையாடுவோம்

அக்காலத்திலும், இக்காலத்திலும் பின்பற்றப்படும் உணவு உண்ணும்முறை குறித்து உங்கள் ஆசிரியருடன் கலந்துரையாடுக.



## 5.2 படிப்போம்

### தமிழர் உணவுப் பழக்கவழக்கங்கள்

உணவு, உடலையும் உயிரையும் வளர்க்கும் அமுதமாகும். தமிழர்களின் நிலத்துக்கும் சூழலுக்கும் ஏற்ப, அவர்களின் உணவுகள் வேறுபடுகின்றன. பெரும்பாலும் சோறும் காய்கறிகளும் கறியும் விரும்பி உண்டனர். இவை மட்டுமன்றி, சிறு தானியங்களையும் உணவில் மிகுதியாகப் பயன்படுத்தினர்.




#### தமிழர்களின் உணவுமுறை



தமிழர்கள், இயற்கை உணவு முறையினைப் பின்பற்றினர். இயற்கையோடு இயைந்த பழக்கவழக்கங்களைக் கடைப்பிடித்தனர். அதனால், உடல் நலத்தையும் உளநலத்தையும் போற்றிப் பாதுகாத்தனர். அவர்களுக்கு உணவே மருந்தாக அமைந்தது. பழங்காலம்முதல் உணவை மருத்துவ முறையிலே சமைக்கின்றனர். சமையலில் இஞ்சி, மஞ்சள், மிளகு, சீரகம், கொத்துமல்லி, பூண்டு முதலியவற்றிற்குக் குறிப்பிடத்தக்க முக்கியப் பங்கு உண்டு. இவை ஒவ்வொன்றும் மருத்துவக் குணம் கொண்டவை. தமிழர்கள் தம் உணவில் அறுசுவைக்கும் முதன்மை அளித்தனர்.

#### விருந்தோம்பல்

நம் வீடு தேடி வருகின்ற விருந்தினர்கள், நண்பர்கள், உறவினர்கள் ஆகியோரை இன்முகத்தோடு வரவேற்று, உணவளித்து மகிழ்வர். இதுவே தமிழர்களின் விருந்தோம்பல் பண்பாகும். அனிச்ச மலர் மிகவும் மென்மையானது. அதனை மோந்து பார்த்தாலே வாடிவிடும். அதுபோல, தம்மை வரவேற்பவரின் முகம் சிறிது மலர்ச்சியின்றி இருந்தாலும், விருந்தினர் மனம் வருந்தும் என்பதைத் திருவள்ளுவர், "மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து நோக்கக் குழையும் விருந்து" என்று கூறியுள்ளார். விருந்தோம்பல், தமிழரின் தலைசிறந்த பண்பாகும். எனவேதான், 'மருந்தே ஆயினும் விருந்தோடு உண்' என்றார் ஔவையார்.

தமிழர்கள், வறுமை நிலையிலும் விருந்தோம்பல் பண்பினைக் கடைப்பிடித்தனர். இதனை இலக்கியப் பாடல்கள்வழி அறியலாம். பெரியபுராணத்தில் ஒரு நிகழ்வு, இளையான்குடி மாறனாரின் வீட்டிற்கு இரவு நேரத்தில் விருந்தினர் ஒருவர் வந்தார்.

மாறனார் அவரை வரவேற்று உணவளிக்க நினைத்தார். ஆனால், வீட்டில் உணவுப் பொருள்கள் ஏதும் இல்லை. மாறனாரும் அவரது மனைவியும் என்ன செய்வது என்று சிந்தித்தனர். மாறனார் உடனே சென்று, காலையில் தான் விதைத்த நெல் மணிகளை ஒரு கூடையில் அள்ளி வந்தார். அதற்குள் அவர் மனைவி, வீட்டுத் தோட்டத்தில் இருந்த கீரைகளைப் பறித்துச் சமைத்தார். பின்பு, மாறனார் கொண்டு வந்த நெல்மணிகளைச் சுத்தம் செய்து அரிசியாக்கிச் சமைத்தார். இவ்வாறு சமைத்த உணவினை, விருந்தினருக்கு அளித்து மகிழ்ந்தனர் என்னும் கருத்தமைந்த பாடல்கள் பெரியபுராணத்தில் உள்ளன.

## வாழையிலை விருந்து

தலைவாழை இலையில் விருந்தினருக்கு உணவு அளிப்பது, தமிழரின் மரபாகும். தமிழர்கள், வலக்கையால் உணவு உண்ணும் பழக்கம் உடையவர்கள். அதனால், வாழை இலையின் விரிந்த பகுதியை வலப்பக்கம் வருமாறு அமைத்து உண்பர். தமிழர்கள் தரையில் சம்மணமிட்டு அமர்ந்து உண்ணும் பழக்கம் உடையவர்கள். அமெரிக்காவிலும் வேறுசில நாடுகளிலும் கூட 'வாழையிலை விருந்து விழா'வைத் தமிழர்கள் கொண்டாடி மகிழ்கின்றனர்.



இக்காலத்தில் உணவிலும் உண்ணும் முறையிலும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. பதப்படுத்திய ஆயத்த உணவுகளும் விரைவு உணவுகளும் புழக்கத்தில் உள்ளன. இருப்பினும் தமிழர்களின் அடிப்படையான உணவுப் பழக்கவழக்கங்கள் பெரிதும் மாற்றமின்றித் தொடர்கின்றன.

### உணவுசார் பழமொழிகள்

- நொறுங்கத் தின்றால் நூறு வயது
- தானத்தில் சிறந்தது அன்ன தானம்
- சீரகம் இல்லா உணவு சிறக்காது

## பொருள் அறிவோம்

1. அறுசுவை - ஆறு சுவை (இனிப்பு, புளிப்பு, கசப்பு, கார்ப்பு, துவர்ப்பு, உவர்ப்பு)
2. தலைசிறந்த - முதன்மையான
3. தலைவாழை - வாழையிலையின் நுனிப் பகுதி
4. சம்மணமிட்டு - கால்களை மடித்து உட்காருதல்
5. விருந்தினர் – புதிதாய் வருபவர்
6. புழக்கத்தில் - நடைமுறையில்

## பயிற்சிகள்

### அ) விடை காண்போம்

1. மனிதர்களுக்கு உணவு தரும் நன்மைகள் யாவை?

2. தமிழர்கள் எத்தகைய உணவு முறையைப் பின்பற்றினர்?

3. 'வாழையிலை விருந்து ' பற்றிக் கலந்துரையாடுக.

### ஆ) பொருத்துக

| | | |
|---|---|---|
| 1. சீரகம் இல்லா உணவு | - | அன்ன தானம் |
| 2. நொறுங்கத் தின்றால் | - | சிறக்காது |
| 3. தானத்தில் சிறந்தது | - | நூறு வயது |

### இ) கூடையிலுள்ள உணவுப் பொருள்களின் பெயர்களைக் கூறுக.



## 5.3 தெரிந்துகொள்வோம்

### பெயரெச்சம்

முற்றுப்பெறாத வினைச்சொல் எச்சம்/எச்சவினை எனப்படும். எச்சவினை பெயர்ச்சொல்லைக் கொண்டு முடிந்தால் பெயரெச்சம் ஆகும். பெயரெச்சம், காலவகையால் மூவகைப்படும்.

இறந்தகாலம் - சென்ற செழியன்

நிகழ்காலம் - செல்கின்ற செழியன்

எதிர்காலம் - செல்லும் செழியன்



படித்த மாணவன்

படிக்கின்ற மாணவன்

படிக்கும் மாணவன்



பறந்த பறவை

பறக்கின்ற பறவை

பறக்கும் பறவை



விளையாடிய சிறுவன்

விளையாடுகின்ற சிறுவன்

விளையாடும் சிறுவன்



எழுதிய மாணவன்

எழுதுகின்ற மாணவன்

எழுதும் மாணவன்

## பயிற்சிகள்

**(அ) கீழ்க்காணும் உரைப்பகுதியில் பெயரெச்சச்சொற்கள் உள்ளன. அவற்றைக் கொண்டு புதிய தொடர் உருவாக்குக.**

அம்மா, சமைத்த உணவை அனைவருக்கும் கொடுத்தார். கொடுத்த உணவை உண்டு மகிழ்ந்தோம். உண்ட உணவு அமுதமாய் இனித்தது.

எ.கா : சமைத்த உணவு

______________________________

______________________________

______________________________

**(ஆ) கீழ்க்காணும் தொடர்களை உரிய பெயரெச்சச் சொற்களால் நிரப்புக.**

(கேட்ட, நின்ற, கண்ட, வந்த, தந்த)

பாரதி ________ கனவு பலித்தது.

மாறன் ________ பணம் உதவியது.

நான் ________ வண்டி பழுதானது.

ராபர்ட் ________ வரிசை நீளமானது.

ஜெனி ________ பாடல் இனிமையானது.

## தகவல் துளி

தமிழ்நாட்டில் சிதம்பரத்திற்கு அருகிலுள்ள ஊர் வடலூர். இவ்வூரில், மக்களின் பசிப்பிணி நீக்கும் வகையில் மூன்று வேளையும் உணவு தயாரிக்கப்படுகிறது. ஏறக்குறைய 150 ஆண்டிற்குமுன் திரு. அருட்பிரகாச வள்ளலாரால் ஏற்றி வைக்கப்பட்ட இந்த அணையா அடுப்பின் பணி இன்றும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.



அணையா அடுப்பு

## 5.4 மொழியோடு விளையாடுவோம்

**கட்டத்தில் முறைமாறியுள்ள சொற்களைக் குறிப்புகளுக்கு ஏற்ப முறைப்படுத்தி விடைகளைக் கூறுக.**

1. ஏப்ரல் 23 ________________ நாளாகக் கொண்டாடப்படுகிறது.

2. நூல்களைத் ________________ படிக்க வேண்டும்.

3. புத்தகத்தின் மற்றொரு பெயர்________________

4. அறிவுக் களஞ்சியமாகத் திகழும் இடம்________________

5. கல்வி அனைவருக்கும்________________

6. பாடசாலையை இப்படியும் அழைப்பர் ________________.

7. பாடம் கற்பிப்பவர் ________________.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ல் | நூ | | | | | | |
| ம | ம் | ச | | | | | |
| தி | ம் | மு | ன | | | | |
| ர் | ய | ரி | சி | ஆ | | | |
| நூ | ல | க | ங் | க | ள் | | |
| ளி | ள் | ப | க் | கூ | ட | ம் | |
| பு | த் | த | க | ப் | உ | ல | க |

## 5.5 கேட்டல் கருத்தறிதல்

### உதவி மகிழ்வோம்

வகுப்பறையில், ரியா ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருந்தாள். அதனைக் கவனித்தார் ஆசிரியர். "ரியா என்ன ஆச்சு? ஏதோ கவலையில் இருப்பதுபோல் தெரிகிறதே!" என்று கேட்டார்.

ரியா சற்றுத் தயக்கத்துடன் ஆசிரியரைப் பார்த்தாள். "தயங்காதே ரியா! எதுவாக இருந்தாலும் கூறு" என்றார் ஆசிரியர். "ஐயா! நம் பள்ளியின் வாசல் அருகே முதியவர் ஒருவர், சாலையைக் கடக்க முடியாமல் நின்றிருந்தார். பள்ளிக்கு நேரமானதால், நான் அவருக்கு உதவி செய்யாமல் வந்துவிட்டேன்" என்று தன் செயலை நினைத்து வருந்தினாள்.

"கவலைப்படாதே ரியா! அந்த முதியவரை நானும் பார்த்தேன். அவருக்கு உதவி செய்துவிட்டுத்தான் வந்தேன்" என்றார் ஆசிரியர். அதைக் கேட்டதும் ரியா நிம்மதியடைந்தாள்; ஆசிரியருக்கு நன்றி கூறினாள். ஆசிரியர் அவளது உதவும் குணத்தைப் பாராட்டினார்.

### வினாக்கள்

1. ரியாவின் சிந்தனைக்குக் காரணம் என்ன?
2. முதியவர் எங்கு, எப்படி இருந்தார்?
3. முதியவருக்கு உதவியவர் யார்?
4. ரியா நிம்மதி அடையக் காரணம் என்ன?
5. ரியாவின் எந்தக் குணத்தை ஆசிரியர் பாராட்டினார்?

## 5.6 படம் பார்த்துக் கருத்து கூறல்



## 5.7 செந்தமிழ்ச்செல்வம்

### குடும்ப விளக்கு

வாழை இலையின் அடி உண்பார் வலப்புறத்தில்
வீழ விரித்துக் கறிவகைகள் – சூழ வைத்துத்
தண்ணீர் வெந்நீரைத் தனித்தனியே செம்பிலிட்டு
வெண்சோறிடுமுன் மிக இனிக்கும் - பண்ணியமும்
முக்கனியும் தேனில் நறுநெய்யில் மூழ்குவித்தே
ஒக்கநின்றே உண்டபின் பால் சோறிட்டுத் - தக்கபடி
கேட்டும் குறிப்பறிந்தும் கெஞ்சியும் மிஞ்சும் அன்பால்
ஊட்டுதல் வேண்டும் தாய்போல் ஒண்டொடியே! - கேட்டுப்போ:

(பாடல் அடி , 205-212)

- பாரதிதாசன்

(தண்ணீர் – குளிர்ந்தநீர்: முக்கனி - மாம்பழம்,
வாழைப்பழம், பலாப்பழம்; பண்ணியம் – தின்பண்டம்;
ஒண்டொடி – ஒளி பொருந்திய வளையலை அணிந்த பெண்)

### பொருள் :

ஒளி பொருந்திய வளையலை அணிந்த பெண்ணே கேள்! விருந்தினர்களுக்கு உணவளிக்கும்போது வாழை இலையின் அகன்ற பகுதி வலப்பக்கத்தில் இருக்குமாறு விரித்து வைத்துப் பரிமாற வேண்டிய உணவு வகைகளை இலையினைச் சுற்றி வைக்க வேண்டும். பின்பு குளிர்ந்த நீரினையும் சுடு நீரினையும் தனித்தனியே செம்பில் வைக்க வேண்டும். வெண்மையான சோறு பரிமாறுவதற்குமுன், தேனிலும் நெய்யிலும் மூழ்கவிட்ட முக்கனியான மாம்பழம், வாழைப்பழம், பலாப்பழம் ஆகியவற்றுடன் இனிப்பான தின்பண்டங்களையும் வைத்து, உண்ட பிறகு பால்சோறு கொடுத்து, விருந்தினரிடம் கேட்டும் அவர்களின் குறிப்பறிந்தும் 'சாப்பிடுங்கள், சாப்பிடுங்கள்' என்று கெஞ்சியும் அளவில்லாத அன்பினாலும் அவர்களுக்கு உணவளிக்க வேண்டும்.

**பழமொழி**

தன்கையே தனக்கு உதவி

## சொல்வதைக் கேட்டு எழுதுக

1. பழக்கவழக்கம்
2. சிறுதானியங்கள்
3. உணவே மருந்து
4. வாழையிலை
5. அறுசுவை உணவு

## சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக

எ.கா. தமிழர் மரபு

தரையில் உட்கார்ந்து உணவு உண்பது தமிழர் மரபு.

1. விருந்தினர்
2. விரைவு உணவு
3. பழக்க வழக்கம்

## 5.8 மொழிபெயர்ப்போம்

**உணவுப் பழக்கம்**

சீனர்கள் சாப்பிடும்போது பேசவே மாட்டார்கள். ஆனால் பிரிட்டனில், சாப்பிடும்போது உரையாடல் மிகவும் முக்கியமானதாகும். ஏனெனில், சுவையான உரையாடல், மோசமான உணவையும் சுவை உடையதாக மாற்றிவிடும் என்பர்.

________________________________________

________________________________________

________________________________________

## 5.9 அறிந்துகொள்வோம்

1. மஞ்சள் - Turmeric
2. மிளகு - Pepper
3. சீரகம் - Cumin
4. கொத்துமல்லி - Coriander
5. பூண்டு - Garlic
6. இஞ்சி - Ginger
7. சிறு தானியங்கள் - millets
8. விருந்தோம்பல் - Hospitality

| | | | |
|---|---|---|---|
| 9. | மரபு | - | Tradition |
| 10. | வலக்கை | - | Right hand |
| 11. | பதப்படுத்திய உணவு | - | Preserved food |
| 12. | ஆயத்த உணவு | - | Readymade food |
| 13. | விரைவு உணவு | - | Fast food |
| 14. | நுனி | - | Tip |

## 5.10 படைப்பாற்றல் வளர்ப்போம்

**அகரவரிசையில் வரும்படி பின்வருமாறு பாடல் உருவாக்குக.**

அனைவரும் கூடுவோம்

ஆடிப்பாடி மகிழ்வோம்

இனிமையாகப் பேசுவோம்

ஈ ____________________

உ ____________________

ஊ ____________________

எ ____________________

ஏ ____________________

ஐ ____________________

ஒ ____________________

ஓ ____________________

ஔ ____________________

## 5.11 செயல் திட்டம்

எவையேனும் ஐந்து நாட்டினர் உணவு உண்ணும் முறை பற்றிய செய்திகளைத் திரட்டிப் படத்தொகுப்பு உருவாக்குக.

## 6.1 பேசுவோம்

பாடம்
6






### கலந்துரையாடுவோம்

உலகில் அமைதி நிலவ நாம் என்ன செய்ய வேண்டும் என்பது பற்றி உங்கள் நண்பர்களுடன் வகுப்பில் கலந்துரையாடுக

## 6.2 படிப்போம்

# மாமனிதர்

தென்ஆப்பிரிக்காவில் பிரிட்டோரியா நகரில் நெல்சன் மண்டேலா என்னும் மாமனிதர் வாழ்ந்து வந்தார். மக்களின் உரிமைகளுக்காகப் போராடியதால் 27 ஆண்டுகள் தனிமைச் சிறையில் அடைக்கப்பட்டார். குத்துச்சண்டை வீரரான அவருக்குப் பொதுவெளியில் உடற்பயிற்சி செய்ய அனுமதி மறுக்கப்பட்டது; அதனால் அறைக்குள்ளேயே ஓட்டப்பயிற்சி செய்தார். சிறையில் கல் உடைத்தார். சுண்ணாம்புக்கல் வெட்டும் வேலையைச் செய்தார். சாலை போடும் வேலை செய்தார். கடற்பாசிகளைச் சேகரித்தார். இவை போன்ற கடுமையான வேலைகளையே செய்து வந்தார். அவர் சிறையில் இருக்கும்போது அவரைச் சந்திக்க வந்த மனைவி மற்றும் குழந்தையுடன் தனிமையில் பேச அனுமதி மறுக்கப்பட்டது. அப்போது தன் மனைவியிடம் "என்மகள் ஜெனி இளவரசி; ஆகவேதான், நமக்கு இந்த அரசமரியாதை" என்று அவர் கூறினார். அந்த நாளும் வந்தது. அவர் குடியரசுத் தலைவராகப் பதவி ஏற்றார்.




அவருடைய பதவி ஏற்பு விழாவினை அனைவரும் கொண்டாடி மகிழ்ந்தனர். ஒவ்வொரு நாட்டிலிருந்தும் முக்கியத் தலைவர்கள் வந்திருந்தனர். அறிவியல் அறிஞர்கள், தத்துவ மேதைகள் என அனைவரும் அந்த இடத்தில் மாமனிதருக்காகக் காத்திருந்தனர். பல நாடுகளின் முன்னணி ஊடகங்கள் அனைத்தும் நேரடி ஒளிபரப்பு செய்யத் தயாராக இருந்தன. அம்மாமனிதர் மேடை ஏறினார். பலரின் மகிழ்ச்சிக் குரல் ஒலிக்க, மாமனிதர் பதவி ஏற்றுக் கொண்டார். அந்த நேரத்தில் அவர்

அனைத்துக் குழந்தைகளுக்கும் கல்வி கிடைக்க உறுதி ஏற்றுக் கொண்டார். மக்களின் வாழ்நிலையில் மாற்றம் கொண்டுவர வேண்டும் என்று எண்ணினார். மக்களுக்கு அனைத்து உரிமைகளும் எந்த இடையீடுமின்றிக் கொடுக்கப்பட வேண்டும் என்றும் விரும்பினார். வளர்ந்த நாடுகளுக்கு இணையாகத் தம்முடைய நாட்டினை உயர்த்த வேண்டும் என்றும் உறுதி ஏற்றார். இப்பணிகளுக்காகத் தம்மை அர்ப்பணித்துக் கொள்ளவேண்டும் என்ற மன உறுதியுடன் குடியரசுத் தலைவராகப் பதவி ஏற்றார்.

## பொருள் அறிவோம்

வானூர்திகள் – விமானங்கள்

ஊடகங்கள் – நாளிதழ் மற்றும் மின்னணுத் தொடர்புகள்

மாமனிதர் – சிறந்த மனிதர்

இடையீடு – தடை

## பயிற்சிகள்

**(அ) கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை கூறுக.**

1. மண்டேலாவிடம் உங்களுக்குப் பிடித்த பண்புகள் இரண்டு கூறுக.
2. மண்டேலா சிறையில் அடைந்த துன்பங்கள் யாவை?
3. குடியரசுத் தலைவராகப் பதவியேற்றபின், நெல்சன் மண்டேலா மேற்கொண்ட உறுதிமொழி யாது?

**(ஆ) விடைக்கேற்ற வினா எழுதுக.**

1. குழந்தைகளுக்கான கல்வியில் மாற்றம் வேண்டுமென மண்டேலா விரும்பினார்.
2. உள்ள உறுதியும் உடல் உறுதியும் கொண்ட மாமனிதர் நெல்சன் மண்டேலா.
3. மனைவியிடம் "என்மகள் ஜெனி இளவரசி; ஆகவேதான், நமக்கு இந்த அரசமரியாதை" என்று நெல்சன் மண்டேலா கூறினார்.

**(இ) உரிய சொல்லை எழுதித் தொடரை நிறைவு செய்க.**
**(குத்துச்சண்டை, குடியரசுத், கல் உடைத்தல், பிரிட்டோரியா)**

1. தென் ஆப்பிரிக்காவின் ________________ நகரம் திருவிழா போல் காட்சி அளித்தது.
2. நெல்சன் மண்டேலா ____________ தலைவராகப் பதவி ஏற்றார்.
3. நெல்சன் மண்டேலா ________________ வீரராக இருந்தார்
4. நெல்சன் மண்டேலா சிறையில் இருக்கும்போது ________________ பணியைச் செய்தார்.

## 6.3 தெரிந்துகொள்வோம்

### ஒலி வேறுபாட்டுச் சொற்கள் – (ண, ந, ன)

மயங்கொலிகள், மயக்கம் தரக்கூடிய ஒலிப்பு முறைகளைக் கொண்டவை. அவை ண, ந, ன, ர, ற, ல, ள, ழ. இப்பாடப் பகுதியில் ண, ந, ன ஆகிய மூவெழுத்தின் ஒலிப்புமுறை, பொருள் வேறுபாடு காண்போம்.












மல்லிகை மணம் வீசியது.



தாரணி மனம் மகிழ்ந்தாள்.



வானவில்லின் வண்ணங்கள் ஏழு



எழிலின் கனவுப் பயணம்



நளினா நடனம் ஆடினாள்

## பயிற்சிகள்

**(அ) உரிய மயங்கொலி எழுத்துகளை நிரப்பித் தொடரை நிறைவு செய்க.**

1. கமலி __கை அணிந்திருந்தாள். (ண, ன, ந)
2. மல்லிகை ம__ம் வீசியது. (ண, ன, ந)
3. ம__த்தில் உறுதி வேண்டும். (ண, ன, ந)

**(ஆ) படத்தையும் எழுத்தையும் பொருத்துக.**



ன ____________________




ந ____________________



ண ____________________

## சுவைச்செய்தி



லியோ டால்ஸ்டாய்

சோவியத் ரஷ்ய நாட்டின் புகழ்பெற்ற எழுத்தாளர் லியோ டால்ஸ்டாய் (1828 - 1910). அவர் ஒருமுறை, தொடர்வண்டி நிலையத்தில் நின்றிருந்தபோது, ஒரு பெண்மணி அவரைக் கைத்தட்டி அழைத்து, "ஐயா! தொடர்வண்டி புறப்படும் நேரமாகிவிட்டது. என் கணவர் உணவு வாங்குவதற்குக் கடைக்குச் சென்றுள்ளார். அவரை அழைத்து வாருங்கள். கூலி தருகிறேன்" என்றார். அவரும் ஒப்புக்கொண்டு அப்பெண்மணியின் கணவரை அழைத்துவந்தார். அதற்கான கூலியையும் பெற்றுக்கொண்டார். சிறிதுநேரம் கழித்து, அவர்தாம் இரஷ்ய நாட்டின் புகழ்பெற்ற எழுத்தாளர் லியோ டால்ஸ்டாய் என்பது அப்பெண்மணிக்குத் தெரிந்தது. உடனே, அப்பெண்மணி அவரிடம் மன்னிப்புக் கேட்டார். அதற்கு லியோ டால்ஸ்டாய், "அதனால் என்ன? நீங்கள் கூறிய வேலையைக் கூலிக்காகத்தான் செய்தேன். பெற்ற கூலியைத் திருப்பித் தரமாட்டேன்" என்றார். புகழ் பெற்றவராயினும் உழைப்பின் அருமையை அவர் நன்கு அறிந்திருந்தார்.

## 6.4 மொழியோடு விளையாடுவோம்

**பின்வரும் எடுத்துக்காட்டுகளைப்போல இரண்டு உருவாக்குக.**

| | | |
|---|---|---|
| ப | த | வி |
| த | ங் | கு |
| வி | கு | தி |

| | | |
|---|---|---|
| கோ | து | மை |
| து | ரு | வி |
| மை | வி | ழி |


| | | |
|---|---|---|
| உ | த | வி |
| த | ட் | டு |
| வி | டு | தி |


| | | |
|---|---|---|
| | | |
| | | |
| | | |

| | | |
|---|---|---|
| | | |
| | | |
| | | |

**விடுகதைக்கு விடை காண்க.**

1. வானிலே பறக்கும்; பறவை இல்லை; வால் இருக்கும்; குரங்கும் இல்லை. அது என்ன?
2. உயிரில்லாப் பறவை; ஊர் ஊராகப் பறக்கும். அது என்ன?
3. பச்சை வீட்டுக்குச் சிவப்பு வாசல். அது என்ன?
4. பல் இருக்கும். ஆனால், கடிக்காது அது என்ன?



## 6.5 கேட்டல் கருத்தறிதல்


### நன்றே செய்வோம்

தாமஸ் கடற்கரைக்குச் சென்றார். அப்போது இளைஞன் ஒருவன், கரை ஒதுங்கிய மீன்களைக் கடலுக்குள் வீசிக்கொண்டு இருந்தான். அதைப் பார்த்த தாமஸ், "தம்பி! இந்தக் கடலில் ஒதுங்கும் மீன்களை நீ காப்பாற்றுகிறாய். ஆனால், உலகிலுள்ள மற்றக் கடற்கரைகளில் கரை ஒதுங்கும் மீன்களை யார் காப்பாற்றுவார்?" என்றார். அதற்கு அந்த இளைஞன், "எத்தனையோ மீன்கள் கரை ஒதுங்கி இறந்து போகலாம். ஆனால், நான் தூக்கி வீசிய இந்த மீன்கள் பிழைத்துக் கொள்ளும் அல்லவா!" என்றான். ஆம்; நாம் ஒவ்வொருவரும் செய்யும் நல்ல செயல்களால் மட்டுமே, மாற்றம் நிகழும் என்பதைத் தாமஸ் உணர்ந்தார்.

### வினாக்கள்

1. தாமஸ் எங்குச் சென்றார்?
2. இளைஞன் என்ன செய்து கொண்டிருந்தான்?
3. இளைஞனிடம், தாமஸ் என்ன கேட்டார்?
4. தாமஸிடம், இளைஞன் என்ன கூறினான்?
5. தாமஸ் எதை உணர்ந்துகொண்டார்?

## 6.6 படம் பார்த்துக் கருத்து கூறல்



## 6.7 செந்தமிழ்ச்செல்வம்

### திருக்குறள்

அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதுஒருவன்
பெற்றான் பொருள்வைப் புழி.

(குறள் 226)
-திருவள்ளுவர்

(அற்றார் – பொருள் இல்லாதவர்; அழிபசி - மிகுந்தபசி)

**பொருள் :**

வறியவரின் கடும்பசியைத் தீர்க்கவேண்டும்; அதுவே பொருள் பெற்ற ஒருவன் அப்பொருளைத் தனக்குப் பிற்காலத்தில் உதவுமாறு சேர்த்து வைக்கும் இடமாகும்.

### பழமொழி

அச்சம் அற்றவன் அம்பலம் ஏறுவான்

### சொல்வதைக் கேட்டு எழுதுக

1. நெல்சன் மண்டேலா குடியரசுத் தலைவராகப் பதவி ஏற்றார்.
2. மக்கள் அனைவரும் ஒன்றாக வாழ வேண்டும்.
3. எல்லா உயிர்களிடத்திலும் அன்பு செலுத்த வேண்டும்.

### சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக

**எ.கா. தலைவர்**

ஜார்ஜ், **தலைவர்** பதவியினை ஏற்றுக் கொண்டார்.

1. திருவிழா
2. உடற்பயிற்சி
3. மரியாதை

## 6.8 மொழிபெயர்ப்போம்

1. நெல்சன் மண்டேலா ஒரு மாமனிதர்.

_______________________________________________

2. அமைதிக்கான நோபல்பரிசு பெற்றவர் மலாலா.

_______________________________________________

## 6.9 அறிந்துகொள்வோம்

| | | | |
|---|---|---|---|
| 1. | மக்களாட்சி | - | Democracy |
| 2. | திறந்தவெளி | - | Open space |
| 3. | தத்துவ மேதைகள் | - | Philosophers |
| 4. | உடற்பயிற்சி | - | Exercise |
| 5. | ஊடகங்கள் | - | Media |
| 6. | சுண்ணாம்புக்கல் | - | Limestone |
| 7. | நேரடி ஒளிபரப்பு | - | Live Telecast |
| 8. | கடற்பாசி | - | Sponge |
| 9. | இராணுவத் தளபதிகள் | - | Army Commanders |
| 10. | சிறைக்காவலர் | - | Prison Guard |
| 11. | சிறை | - | Prison |
| 12. | குடியரசுத்தலைவர் | - | President |
| 13. | குத்துச்சண்டை | - | Boxing |
| 14. | இளவரசி | - | Princess |

## 6.10 படைப்பாற்றல் வளர்ப்போம்

படக்காட்சிக்குப் பொருத்தமாக உரையாடல் எழுதுக.



## 6.11 செயல் திட்டம்

சமூகத்திற்குத் தொண்டு செய்தவர்களுள் ஒருவரைப் பற்றிய செய்திகளைத் திரட்டி, காணொலி உருவாக்குக

## பாடம் 7

### 7.1 பேசுவோம்



### கலந்துரையாடுவோம்

படங்களில் உள்ள நிலச்சூழல்கள் குறித்து வகுப்பில் ஆசிரியருடன் கலந்துரையாடுக.

## 7.2 படிப்போம்

### தமிழர் வாழ்வில் இயற்கைக்கூறுகள்

"அம்மா, இதோ பாருங்கள். நான் தேடிய பொருள் கிடைத்துவிட்டது" என்று மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்தான், கண்ணன். அப்படி என்ன பொருளைத் தேடினான் என்று அம்மா, அவன் கையிலிருந்த பொருளைப் பார்த்தார். அஃது ஒரு படவிளக்க அட்டை. அதில், ஐவகை நில அமைப்பு என்று அச்சிட்டிருந்தது.

**அம்மா** : "கண்ணா, இதைத்தான் நீ தேடினாயா?"

**கண்ணன்** : "ஆமாம், அம்மா"




**அம்மா** : "இந்தப் படவிளக்க அட்டையைக் கொண்டு என்ன செய்யப்போகிறாய்?

**கண்ணன்** : "நான் செயல்திட்டம் செய்வதற்காக இதனைத் தேடினேன். படம் கிடைத்துவிட்டது. ஆனால், செய்திகளைத் திரட்டவேண்டுமே"

**அம்மா** : ஓ, அப்படியா. அதைப்பற்றி நான் கூறுகிறேன். கூடுதல் செய்திகளை நாம் இணையத்தில் தேடிப் பெறுவோம்"

(வீட்டிற்கு வந்தவுடன் அம்மா, கண்ணனிடம் கூறத் தொடங்கினாள்)

**அம்மா** : தமிழகம் மலை, காடு, வயல், கடற்கரை எனச் சூழ்ந்திருந்தது. மலை-குறிஞ்சிநிலம், காடு-முல்லைநிலம், வயல்- மருதநிலம், கடற்கரை- நெய்தல்நிலம் எனவும் பெயர் பெற்றிருந்தன. இதனால்தான், தமிழகத்தை நானிலம் என்றனர்.

**கண்ணன்** : அம்மா, நானிலம் என்றால் நான்கு நிலம்தானே. ஆனால், இந்தப் படவிளக்கத் தாளில் ஐவகை நில அமைப்பு என்று உள்ளதே?

**அம்மா** : அடடே, சரியாகக் கூறினாய், கண்ணா. ஐந்தாவதாகக் கூறப்படும் நிலம் எது தெரியுமா? மணல் – பாலைநிலம்.

**கண்ணன்** : அப்படியெனில், நீங்கள் முதலிலேயே ஏன் கூறவில்லை? பாலைவனம்தான் பாலைநிலமா அம்மா?

**அம்மா** : இல்லை கண்ணா, தமிழகத்தில் ஏது பாலைவனம்? கடுமையான கோடைக்காலத்தில் முல்லை நிலமும் குறிஞ்சி நிலமும் வறண்டு போகும். மரம், செடி, கொடிகள் எல்லாம் காய்ந்துபோகும். அந்நிலத்தில் நடந்துசெல்வோரின் பாதங்களை வெப்பம் சுட்டெரிக்கும்.

**கண்ணன்** : ஓ, வளம் குறைந்த நிலம்தான் பாலைநிலமா?

**அம்மா** : ஆமாம், கண்ணா.

**கண்ணன்** : இப்போது புரிந்தது, அம்மா. அதனால்தான் பாலை என்று ஒரு நிலம் இல்லை என்று கூறினீர்களா?

**அம்மா** : ஆம். இப்போது ஐவகை நில அமைப்பைப் புரிந்துகொண்டிருப்பாய். ஒவ்வொரு நிலப்பகுதியிலும் வாழ்ந்த மக்கள், இயற்கையோடு எப்படி ஒன்றி வாழ்ந்தார்கள் என்று சொல்லவா?

**கண்ணன்** : சொல்லுங்கள் அம்மா!

**அம்மா** : குறிஞ்சி நிலமென்பது, மலையும் மலைசார்ந்த பகுதியும் ஆகும். இங்கு வாழ்ந்த மக்கள் குறவர், குறத்தியர் ஆவர். இவர்கள் தேனும் தினைமாவும் உண்டனர்.

**கண்ணன்** : அப்படியா! குறிஞ்சி நிலத்தைப் பற்றித் தெரிந்துகொண்டேன். முல்லை நிலத்தைப் பற்றியும் கூறுங்களேன்.

**அம்மா** : காடும் காடுசார்ந்த பகுதியும்தான் முல்லை. இங்கு வாழ்ந்த மக்கள் ஆயர், ஆய்ச்சியர் ஆவர். இவர்கள் ஆடு, மாடுகளை வளர்த்தனர். பால் முதலிய பொருள்களைப் பயன்படுத்தியும் பிறர்க்கு விற்றும் வாழ்ந்தனர்.

**கண்ணன்** : மருதநிலம் பற்றியும் சொல்லுங்கள், அம்மா.

**அம்மா** : மருதநில மக்கள், வயல் சூழ்ந்த பசுமையான நிலப்பகுதிகளில் வாழ்ந்தனர். இவர்களை உழவர், உழத்தியர் என்பர். இவர்கள் நெல் முதலான உணவுப் பயிர்களை விளைவித்தனர்.

**கண்ணன்** : ஓ! அப்படியென்றால், நெய்தல் நிலம் பற்றி நானே சொல்லட்டுமா? கடற்கரைப்பகுதி என்று நீங்கள் கூறினீர்கள் அல்லவா? அதனால், கடலும் கடல்சார்ந்த பகுதியும் நெய்தல்தானே, அம்மா?

அம்மா : சரியாகச் சொன்னாய், கண்ணா. அந்நெய்தல் நிலப்பகுதியில் வாழ்ந்தவர்களைப் பரதர், பரத்தியர் என்பர். இவர்கள் மீன்களை உணவாக உண்டும் அவற்றை விற்றும் வாழ்ந்தனர்.

**கண்ணன்** : பாலைநிலம் பற்றியும் அறிந்துகொள்ள விரும்புகிறேன், அம்மா.

அம்மா : பாலைநிலம் மணல் பகுதி அல்லவா, அங்கு வாழ்ந்த மக்களை எயினர், எயிற்றியர் என்பர். இவர்கள் பிறரிடம் கவர்ந்த பொருள்களைக் கொண்டு வாழ்ந்தனர்.

**கண்ணன்** : அப்படியா, அம்மா?

அம்மா : ஆமாம். கண்ணா! ஐவகை நில அமைப்பு பற்றி ஓரளவு அறிந்து கொண்டாய். கூடுதல் செய்திகளை மற்றொருநாள் கூறுகிறேன்.

**கண்ணன்** : சரிங்க அம்மா, நான் செயல்திட்டம் செய்யத் தொடங்குகிறேன். (கண்ணன் செயல்திட்டம் செய்யத் தொடங்க, அம்மா அவனுக்கு உதவுகிறார்.)

## பொருள் அறிவோம்

| | | |
|---|---|---|
| 1. நானிலம் | - | நான்கு வகையான நிலம் |
| 2. ஆய்ச்சியர் | - | ஆநிரைகளை மேய்க்கும் பெண்கள் |
| 3. கோடைக் காலம் | - | வெயில் காலம் |

## பயிற்சிகள்

### அ) விடை காண்போம்

1. நானிலம் என்று எவற்றைக் கூறுகிறோம்?
2. பாலைநிலம் எவ்வாறு உருவாகிறது?
3. மருதநிலத்தில் வாழ்ந்த மக்கள் யாவர்?
4. கண்ணன் தேடிய பொருள் என்ன?
5. படவிளக்க அட்டையைக் கொண்டு கண்ணன் செய்ய விரும்பியது என்ன?

### ஆ) கோடிட்ட இடத்தில் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

(நெய்தல், மருதம், பாலை, முல்லை, குறிஞ்சி)

1. வளம் குன்றிய பகுதி ______________________ நிலம் என அழைக்கப்பட்டது.
2. மலைப் பகுதி ______________________ நிலம் ஆகும்.
3. கடற்கரைப் பகுதி ______________________ நிலம் ஆகும்.
4. வயல் நிறைந்த பசுமையான நிலம் ______________________ .
5. காடும் காடுசார்ந்த பகுதியும் ______________________ நிலம் ஆகும்.


### (இ) பிரித்தெழுதுக.

1. நானிலம் = ______________ + ______________
2. ஐவகை = ______________ + ______________
3. கடற்கரை = ______________ + ______________
4. திட்டப்பணி = ______________ + ______________
5. படவிளக்கம் = ______________ + ______________

### (ஈ) பொருத்துக.

| | | |
|---|---|---|
| 1. குறிஞ்சி | - | வயல் |
| 2. முல்லை | - | கடல் |
| 3. மருதம் | - | காடு |
| 4. நெய்தல் | - | மணல் |
| 5. பாலை | - | மலை |

### (உ) படத்திலுள்ள நிலப்பகுதியின் பெயரைக் கண்டறிந்து எழுதுக.



______________



______________



______________



______________

## 7.3 தெரிந்துகொள்வோம்

### வினையெச்சம்

வினைமுற்றைக் கொண்டு முடியும் எச்சம், வினையெச்சம் எனப்படும். (எச்சம் – முடிவு பெறாத வினைச்சொல்)



ஜானகி எழுதிப் பார்த்தாள்.



சிறுவர்கள் கூடி விளையாடுகின்றனர்.



பிரேமா உணவை விரும்பி உண்பாள்



அன்பரசன் ஓடி வந்தான்.



இலக்கியா ஆடிக் கொண்டிருந்தாள்.



கண்ணன் படித்து மகிழ்ந்தான்.

## பயிற்சிகள்

**(அ) கீழ்க்காணும் வினைமுற்றுச் சொல்லை, வினையெச்சச் சொல்லாக மாற்றுக.**

1. ஓடினான் - ஓடி
2. பாடினான் - ______________
3. நடித்தாள் - ______________
4. உண்டார் - ______________
5. எழுதினாள் - ______________

**(ஆ) அடைப்புக்குள் உள்ள வினைமுற்றை வினையெச்சமாக மாற்றித் தொடரை நிறைவு செய்க.**

1. பொன்மொழி ______________ (ஆடினாள்) பாடினாள்.

   பொன்மொழி ஆடிப் பாடினாள்.

2. கயல்விழி ______________ (தேடினாள்) படித்தாள்.
3. மாறன் ______________ (எழுந்தான்) நின்றான்.
4. எழிலன் ______________ (உண்டான்) முடித்தான்.
5. ஷீபா ______________ (நடித்தாள்) பார்த்தாள்.

**(இ) கீழ்க்காணும் கதைப் பகுதியிலுள்ள வினையெச்சச் சொற்களைக் கூறுக.**

அடர்ந்த காடு. அங்கு விலங்குகளும் பறவைகளும் ஒன்றாகக் கூடி வாழ்ந்தன. மயில்கள் அழகாக ஆடி நின்றன. குயில்கள் இனிமையாகக் கூவிப் பறந்தன. குரங்குகள் மரக்கிளையில் தாவிச் சென்றன. புலிகள் இரைதேடிப் பாய்ந்தன. மான்கள் கூட்டமாக ஓடிச் சென்றன.

## தகவல் துளி

உலகிலுள்ள இயற்கை வளங்களைப் பாதுகாக்க வேண்டும். இந்த நோக்கத்தினை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டதே பன்னாட்டு இயற்கைப் பாதுகாப்புச் சங்கம். இது, 1948ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. காலநிலை மாற்றத்திலிருந்து இயற்கை வளங்களைப் பாதுகாக்க இச்சங்கம் செயல்படுகிறது. இயற்கையை நாம் பாதுகாத்தால்தான், இயற்கை நம்மைப் பாதுகாக்கும். எனவே, ஒவ்வோர் ஆண்டும் ஜூலை 28ஆம் நாள் உலக இயற்கை வளங்கள் பாதுகாப்பு நாளாகக் (World Nature Conservation Day) கடைப்பிடிக்கப்படுகிறது.



## 7.4 மொழியோடு விளையாடுவோம்

ஓர் எழுத்து நான்கு சொல்

| | | |
|---|---|---|
| சமம் | | மணம் |
| | ம | |
| மகன் | | தாமரை |
| தொ_தி | | ம_டம் |
| | | |
| கழு_ | | அழ_ |
| எழுத்_ | | முத்_ |
| | | |
| பந்_ | | கோ_மை |
| அம்_ | | சிரிப்_ |
| | | |
| கம்_ | | கரும்_ |
| கல்_ | | பத_ |
| | | |
| க_தை | | அரு_ |

## கருத்து விளக்கப்படம்

**கீழ்க்காணும் செய்தித்தாள் செய்தியைப் படித்து, வினாக்களுக்கு விடை எழுதுக.**

# உருகும் பனிமலைகள் கொதிக்கும் பெருங்கடல்கள்



பருவநிலை மாற்றத்தின் விளைவுகள் நிலப்பகுதியில் வாழ்வோரைப் பாதிக்காமல், பெருங்கடல்களும் பனிப் பிரதேசங்களும் காப்பாற்றுகின்றன. ஆனால், பனி உறைந்து காணப்படும் கிரீன்லாந்து, அண்டார்டிகா பகுதிகளில் பனி அதிகமாக உருகத் தொடங்கியுள்ளது. இதனால் கடல் நீர் மட்டம், ஆண்டுதோறும் 1.8 மிமீ உயர்ந்து வருகிறது.

அனைத்துப் பெருங்கடல்களும் சூடேறிவருகின்றன. இதனால், வளி மண்டலத்தில் ஈரப்பதம் அதிகரித்து, வலுவான சூறாவளிகள் தோன்றிப் பெருமழையாகப் பெய்கிறது. மனிதர்களால் உணரப்படாத பல மாற்றங்களும் கடல்பரப்பில் நிகழ்கின்றன. கடலில் ஏற்படும் மாற்றங்களால் கடல்வாழ் உயிரினங்கள் பெரும் பாதிப்புக்கு உள்ளாகி அழியும் நிலையில் உள்ளன. குறிப்பாக, கடலிலுள்ள பவளப்பாறைகள் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளன. பவளப்பாறைகள் புயல், சூறாவளி காலங்களில் கடல் அலைகளின் வேகத்தைக் கட்டுப்படுத்தி மக்களைக் காக்கும் பணியினைச் செய்கின்றன.

### வினாக்கள்

1. பருவநிலை மாற்றத்திலிருந்து மக்களைக் காப்பாற்றுபவை எவை?
2. உலகின் எப்பகுதியில் பனி உறைந்து காணப்படுகிறது?
3. கடல் நீர்மட்டம் உயரக் காரணம் என்ன?
4. பெருங்கடல்கள் ஏன் சூடாகின்றன?
5. பவளப்பாறைகள் எங்கு உள்ளன?

## 7.5 கேட்டல் கருத்தறிதல்

### பொறுத்தார் பூமி ஆள்வார்

கதிரும் சுடரும் நண்பர்கள். இருவரும் நேர்காணல் ஒன்றில் கலந்துகொண்டனர். அவர்களிடம் ஒரு வினாத்தாள் கொடுக்கப்பட்டது. பொறுமையாகப் படித்து, பத்து நிமிடத்தில் விடையளிக்க வேண்டும் என்ற குறிப்பு வினாத்தாளில் இருந்தது.

கதிர், வேகவேகமாக எழுதத் தொடங்கினான். அவனால், பத்து வினாவிற்குமேல் விடையளிக்க முடியவில்லை. சுடர், கடைசி நேரத்தில்தான் எழுதினான். அவனுக்கே வேலையும் கிடைத்தது. கதிர் புரியாமல் சுடரைப் பார்த்தான். சுடர், வினாத்தாளின் 29ஆவது வினாவைக் காண்பித்தான். அதில் '30ஆவது வினாவுக்கு மட்டும் விடையளிக்கவும்' என்றிருந்தது.

**வினாக்கள்**

1. கதையில் வரும் நண்பர்களின் பெயர்களைக் கூறுக.
2. வினாத்தாளில் என்ன குறிப்பு இருந்தது?
3. கதிர் எத்தனை வினாக்களுக்கு விடையளித்தான்?
4. கதிர் செய்த தவறு என்ன?
5. வேலை யாருக்குக் கிடைத்தது? ஏன்?

## 7.6 படம் பார்த்துக் கருத்து கூறல்



## 7.7 செந்தமிழ்ச்செல்வம்

### திருக்குறள்

சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை.

(குறள் 1031)

-திருவள்ளுவர்

(ஏர் – உழவுத்தொழில்; உழந்தும் - வருந்துதல்)

**பொருள் :**

உலகம் பல்வேறு தொழில்களைச் செய்து சுழன்றாலும் உணவு தரும் உழவுத்தொழிலின் பின் தான் நிற்கின்றது. எனவே, எவ்வளவு வருந்தச் செய்தாலும் உழவுத்தொழிலே சிறந்தது.

**பழமொழி**

பருவத்தே பயிர் செய்!

### சொல்வதைக் கேட்டு எழுதுக

1. குறிஞ்சி என்றால் மலைப்பகுதி.
2. முல்லை என்றால் காட்டுப் பகுதி.
3. மருதம் என்றால் வயல்பகுதி.
4. நெய்தல் என்றால் கடல் பகுதி.
5. பாலை என்றால் வறண்ட பகுதி.

### சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக

எ.கா. அருவி

விடுமுறை நாள்களில் அருவிக்கு நீராடச் செல்வேன்.

1. வெப்பம்
2. பாலைவனம்
3. பசுமையான வயல்
4. கடற்கரை

## 7.8 மொழிபெயர்ப்போம்

1. It is our duty to protect nature

_______________________________________________

2. Mother nature provides us with many resources.

_______________________________________________

## 7.9 அறிந்துகொள்வோம்

| | | | |
|---|---|---|---|
| 1. | அருவி | – | Waterfalls |
| 2. | இளநீர் | – | Tender coconut |
| 3. | கொத்து | – | Bunch |
| 4. | கரடி | – | Bear |
| 5. | காட்டுப்பகுதி | – | Forest Area |
| 6. | எல்லை | – | Border |
| 7. | பகைவர் | – | Enemy |
| 8. | திரைச்சீலை | – | Screen |

## 7.10 படைப்பாற்றல் வளர்ப்போம்

நீங்கள் வாழும் ஊரின் நில அமைப்பைப் படமாக வரைந்து வருக.

## 7.11 செயல் திட்டம்

ஐவகை நில அமைப்புகளை மாதிரிகளாகச்(Models) செய்து வருக.

## 8.1 பேசுவோம்

# பாடம் 8



### கலந்துரையாடுவோம்

நீரின் முக்கியத்துவம் குறித்து, ஆசிரியருடன் கலந்துரையாடுக.

## 8.2 படிப்போம்




**நடுவர்** : அனைவருக்கும் வணக்கம். "நீர்இன்று அமையாது உலகு" என்றார் திருவள்ளுவர். மனித வாழ்வுக்கு அடிப்படை நீர். அதனைச் சிறப்பாகத் திட்டமிட்டுப் பயன்படுத்துவதே நீர் மேலாண்மை எனப்படும். நீர் மேலாண்மையில் சிறந்து விளங்குவது அந்தக் காலமா? இந்தக் காலமா? என்பதே இன்றைய பட்டிமன்றத் தலைப்பு. அந்தக் காலமே! என்ற அணியில் இருவரும், இந்தக் காலமே! என்ற அணியில் இருவரும் இங்குப் பேச வந்துள்ளனர். அவர்களுள் முதலாவதாக, அந்தக் காலமே எனப் பேச வருகிறார் மகிழ்நன்.

**மகிழ்நன்** : நடுவர் உள்ளிட்ட அனைவருக்கும் வணக்கம். 'மாமழை போற்றுதும்!.. மாமழை போற்றுதும்!' என்கிறது சிலப்பதிகாரம். நம் முன்னோர், பருவக்காலங்களில் பெய்யும் மழைநீரை வீணாக்கவில்லை. அந்நீரை அணைகள், குளங்கள், ஏரிகள் ஆகியவற்றில் சேமித்தனர். அவற்றைப் பயன்படுத்தி வேளாண்மை செய்தனர். எனவே, 'நீர் மேலாண்மையில் சிறந்து விளங்கியது அக்காலமே!' என்று கூறி அமர்கிறேன். நன்றி!





நடுவர் : நம் முன்னோர் நீரைச் சேமிப்பதில் அக்கறை கொண்டிருந்தனர் என்று மகிழ்நன் பேசினார். அடுத்ததாக, 'நீர் மேலாண்மையில் சிறந்து விளங்குவது இந்தக் காலமே!' என்ற தலைப்பில் பேச வருகிறார் ஓவியா.


ஓவியா : "மழை வரும் என்றே மந்திரம் செபிச்சது அந்தக் காலம்... மழையைப் பொழிய வைக்கவே எந்திரம் வந்தது இந்தக் காலம்" என்றார் பாடலாசிரியர் உடுமலை நாராயண கவி. பூமியின் உயிர் நீர் மழை. அதை வீணாக்காமல், இக்காலத்தில் வீடுகள்தோறும் மழைநீர்ச் சேமிப்புத் தொட்டி அமைத்துச் சேமிக்கிறோம். ஆகவே, காலத்திற்கு ஏற்ப இன்றுதான் நாம் நீர் மேலாண்மையில் சிறந்து விளங்குகிறோம் என்பதை உறுதியாகக் கூறி அமர்கின்றேன் நன்றி!


நடுவர் : வான்மழை போல் பேசிய ஓவியாவிற்குப் பாராட்டுகள். அடுத்தாக, "நீர் மேலாண்மையில் சிறந்தது அந்தக் காலமே!" என்று பேசவருகிறார் மணி.

மணி : ஐயா!. . . அந்தக் காலத்தில் மக்கள், தங்கள் தேவைக்கு மட்டுமே நீரைப் பயன்படுத்தினர். ஆனால் இன்றோ, தேவைக்கும் அதிகமாகவே பயன்படுத்துகின்றனர். நீர் மேலாண்மை என்பது அதனைச் சேமிப்பது மட்டுமன்று. சேமித்ததைச் சிக்கனமாகப் பயன்படுத்தவும் வேண்டும். அதனைச் சிறப்புறச் செய்தது அந்தக் காலமே எனக்கூறி, என் உரையை நிறைவு செய்கிறேன்.

நடுவர் : நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துவதும் நீர் மேலாண்மைதான் என்பதை அழகாகச் சுட்டிக்காட்டினார் பனிமொழி. நிறைவாகப் பேச வருகிறார் இனியன்.

இனியன் : நடுவர் அவர்களே! அன்று வயல்களுக்கு வாய்க்கால் வழியாக நீரைப் பாய்ச்சி வேளாண்மை செய்தனர். ஆனால் இன்றோ, சொட்டுநீர்ப் பாசனம், தெளிப்புமுறை நீர்ப்பாசனம் போன்றவை உள்ளன. இவற்றின் மூலம், நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தி, வேளாண்மை செய்கின்றனர். இதனால், தண்ணீர் வீணாவது தடுக்கப்பட்டுச் சேமிக்கப்படுகிறது. அதுமட்டுமின்றி, கடல்நீரைக் குடிநீர் ஆக்குதல், பயன்படுத்திய நீரைத் தூய்மை செய்து மீண்டும் பயன்படுத்துதல் முதலிய முறைகளும் உள்ளன. எனவே, 'நீர் மேலாண்மையில் சிறந்து விளங்குவது, இந்தக் காலமே!' என்று கூறி அமர்கிறேன்.





நடுவர் : இன்றைய நீர் மேலாண்மையின் சிறப்பைப் பேசிய இனியனுக்கு நன்றி. இன்று, நீரின் தேவை அதிகரித்து வருகிறது. அதனால்தான், நாம் நீர் மேலாண்மையின் அவசியத்தை வலியுறுத்தி வருகிறோம். ஆகவே, நீர்நிலைகளைப் பாதுகாப்பது நம் கடமையாகும். புதிய தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி, நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துவோம். அதுவே நமக்கும் நம் தலைமுறையினருக்கும் நாம் செய்யும் சிறந்த உதவியாகும். இங்கு நம்மிடையே பேசிய நால்வரும், நீர் மேலாண்மை பற்றித் தெளிவாகக் கூறினர். நீரைச் சேமிப்பதும் சிக்கனமாகப் பயன்படுத்துவதும் மிகவும் தேவை என்று வலியுறுத்தினர். அவர்களுக்கு நம் பாராட்டுகள். அந்தக் காலமோ, இந்தக் காலமோ எந்தக் காலமாக இருந்தாலும் நம் அடிப்படைத் தேவை நீர். அதனை, மேலாண்மை செய்வது மிகவும் இன்றியாமையாதது என்று கூறிப் பட்டிமன்றத்தை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

## பொருள் அறிவோம்

1. அணி - குழு
2. மாமழை - அதிக மழை
3. செபிச்சது - ஓதியது
4. பாசனம் - நீர் பாய்ச்சுதல்

## பயிற்சிகள்

### அ) விடை காண்போம்

1. பட்டிமன்றத்தின் தலைப்பு என்ன?
2. மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும் என்று கூறும் நூல் எது?
3. முன்னோர் நீரைச் சேமிக்கப் பின்பற்றிய முறைகளைக் கூறுக.
4. வேளாண்மையில் நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தும் முறைகளைக் கூறுக.

### ஆ) கோடிட்ட இடத்தில் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

(அக்கறை, மழை, வேளாண்மை, திருவள்ளுவர், கடமை)

1. நீர் இன்று அமையாது உலகு என்று கூறியவர் ________________.
2. பூமியின் உயிர் நீர் ________________
3. நீர் நிலைகளைப் பாதுகாப்பது நம் ________________ ஆகும்.
4. சொட்டுநீர்ப் பாசனமுறை ________________ யில் பயன்படுத்தப்படுகிறது.
5. முன்னோர் நீரைச் சேமிப்பதில் ________________ கொண்டிருந்தனர்.

### (இ) நீர் மேலாண்மை தொடர்பான முழக்கத் தொடர் (slogan) ஒன்றை உருவாக்குக.

எ.கா. மரம் வளர்ப்போம்; மழை பெறுவோம்.

## 8.3 தெரிந்துகொள்வோம்

### இணைமொழிகள்

**ஆடிப்பாடி**

கலைநிகழ்ச்சியில் மாணவர்கள் **ஆடிப்பாடி** மகிழ்ந்தனர்.

**மேடுபள்ளம்**

ஆற்றுநீர் செல்லும் வழி **மேடுபள்ளம்** நிறைந்தது.

**பச்சைப்பசேல் (பச்சை நிறமாக)**

வயலில் பயிர்கள் **பச்சைப்பசேலெனக்** காட்சியளித்தன.

## பயிற்சிகள்

**(அ) பொருத்தமான இணைமொழிகளை நிரப்பி, உரைப்பகுதியை நிறைவு செய்க. (பச்சைப்பசேல், ஆடிப்பாடி, மேடுபள்ளங்களை)**

வயல் ________________ என்று காட்சியளித்தது. அதனருகில் ஓடிய ஆற்றுநீர் ________________ நிரப்பியது. அங்கு வந்த சிறுவர்கள் ________________ மகிழ்ந்தனர்.

(ஆ) நீங்கள் கற்ற இணைமொழிகளைக் கீழ்க்காணும் படங்களுடன் பொருத்துக.

ஆடிப்பாடி



பச்சைப்பசேலெனக்



மேடுபள்ளம்




## தகவல் துளி

கல்லணை தமிழ்நாட்டில் உள்ள பழைமை வாய்ந்த அணையாகும். கரிகாலன் என்ற சோழ மன்னனால் கி.பி. முதலாம் நூற்றாண்டில் கட்டப்பட்டது. தற்போதுள்ள அணைகளில் கல்லணையே மிகப்பழமையானது எனவும், தற்போதும் பயன்பாட்டில் உள்ளது எனவும் அறியப்படுகிறது. மணலில் அடித்தளம் அமைத்து கல்லணையைக் கட்டிய பழந்தமிழர் தொழில்நுட்பம் இன்றுவரை வியத்தகு சாதனையாகப் புகழப்படுகிறது. கல்லணையின் நீளம் 1,079 அடி, அகலம் 66 அடி மற்றும் உயரம் 18 அடியாகும். இது நெளிந்து வளைந்த அமைப்புடன் காணப்படுகிறது. கல்லும் களிமண்ணும் மட்டுமே சேர்ந்த ஓர் அமைப்பு 1900 ஆண்டுகளுக்கு மேலாகக் காவிரி வெள்ளத்தைத் தடுத்து நிறுத்தி வருவது வியப்பே ஆகும்.



## 8.4 மொழியோடு விளையாடுவோம்

**அ) வட்டத்திலுள்ள எழுத்துகளைக் கொண்டு சொற்களை உருவாக்கி எழுதுக.**




1. தார் (பூமாலை)

2. ______________________

3. ______________________

4. ______________________

**ஆ) பலூனிலுள்ள எழுத்துகளைக் கொண்டு வினாக்களுக்கான விடையளிக்க.**


1. வேளாண்மைக்குப் பயன்படும் பாசன முறைகளுள் ஒன்று, அது என்ன?

2. நீரைத் தேக்கி வைக்க உதவுவது. அது என்ன?

3. நீர் வளங்களுள் ஒன்று, அது என்ன?

4. Lake என்பதன் தமிழ்ச்சொல். அது என்ன?

5. விண்ணின் உயிர்த்துளி. அது என்ன?



## 8.5 கேட்டல் கருத்தறிதல்

### போதும் என்ற மனமே பொன்செய்யும் மருந்து

வேலனும் முத்துவும் மாமா வீட்டுக்கு நடந்து சென்றனர். அவர்களுக்குத் தாகம் எடுத்தது. சாலை ஓரமாக இருந்த வீட்டில் தண்ணீர் கேட்டனர். அந்த வீட்டில் இருந்த பாட்டி, "தண்ணீர் இல்லை; ஆனால் கொஞ்சமாக மோர் இருக்கிறது; அதனைத் தருகிறேன்" என்றார். ஒரு குவளையில் பாட்டி கொடுத்த மோரைப் பார்த்த வேலன், "இது மிகவும் குறைவாக உள்ளதே. இது எங்கள் தாகத்தை எப்படித் தீர்க்கும்?" என்றான். ஆனால் முத்து, "குவளையில் பாதியளவுக்குமேல் மோர் உள்ளதே! அதைக் குடித்துக் கொஞ்சமாவது தாகத்தைத் தணித்துக்கொள்ளலாம்" என்றான். இதனைக் கேட்ட பாட்டி, "நல்லது தம்பி! இப்படித்தான் இருப்பதைக் கொண்டு வாழப் பழகிக் கொள்ள வேண்டும்" என்று கூறி முத்துவைப் பாராட்டினார்.


### வினாக்கள்

1. வேலனும் முத்துவும் எங்குச் சென்றனர்?
2. தாகம் தீர்க்க, பாட்டி என்ன கொடுத்தார்?
3. பாட்டி மோரை எதில் கொடுத்தார்?
3. மோரைப் பார்த்த வேலன் கூறியது என்ன?
4. பாட்டி, முத்துவைப் பாராட்டக் காரணம் என்ன?

## 8.6 படம் பார்த்துக் கருத்து கூறல்



நம் உடலுக்கு நீரின் பங்களிப்பு




## 8.7 செந்தமிழ்ச்செல்வம்

### திருக்குறள்

நீர்இன்று அமையாது உலகுஎனின், யார்யார்க்கும்
வான்இன்று அமையாது ஒழுக்கு.

(குறள்: 20)
-திருவள்ளுவர்

(இன்று – இல்லாமல்: எனின் - என்றால்)

**பொருள் :**

நீர் இல்லாமல் உலக வாழ்க்கை யாருக்கும் அமையாது. அதுபோல மழை இல்லாமல் ஒழுக்கமும் நிலைபெறாது.

### பழமொழி

சிறுதுளி பெருவெள்ளம்

## சொல்வதைக் கேட்டு எழுதுக.

1. மரம் வளர்ப்போம்.
2. மழை நீரைச் சேமிப்போம்
3. பூமி வெப்பமாவதைத் தடுப்போம்.

## சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.

எ.கா. நீர் மேலாண்மை

நீரைத் திட்டமிட்டுச் சேமித்துப் பயன்படுத்துவதே நீர் மேலாண்மை ஆகும்.

1. மழைப்பொழிவு
2. மழைநீர்ச் சேமிப்பு
3. நீர்ப் பாசனம்

## 8.8 மொழிபெயர்ப்போம்

1. நம் அடிப்படைத் தேவை நீர்.

______________________________

2. நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும்.

______________________________

## 8.9 அறிந்துகொள்வோம்

| | | | |
|---|---|---|---|
| 1. | மேலாண்மை | - | Management |
| 2. | முன்னோர் | - | Ancestors |
| 3. | அணை | - | Dam |
| 4. | குளம் | - | Pool |
| 5. | ஏரி | - | Lake |
| 6. | கால்வாய் | - | Canal |
| 7. | குடிநீர் | - | Drinking water |
| 8. | சொட்டுநீர்ப் பாசனம் | - | Drip irrigation system |
| 9. | தொழில்நுட்பம் | - | Technology |
| 10. | தலைமுறை | - | Generation |
| 11. | மழைநீர்ச் சேகரிப்பு | - | Rain Water Harvesting |

## 8.10 படைப்பாற்றல் வளர்ப்போம்

**கலைந்துள்ள கதையின் வரிகளை வரிசைப்படுத்துக.**

- ❖ பெரிய காடு ஒன்று இருந்தது.
- ❖ மயில் , மழை வந்தால் நான் தோகைவிரித்து ஆடுவேன், என்று முயலுக்கு விளக்கியது.
- ❖ இதனைக் கண்ட முயல் பதறி மயிலுக்குப் போர்வையாகச் சில தழைகளை இணைத்துப் போர்த்தியது.
- ❖ மயில் முயலின் செயலைக் கண்டு சிரித்தது.
- ❖ அக்காட்டில் முயலும் மயிலும் நண்பர்களாக இருந்தன.
- ❖ ஒரு நாள் மயிலானது மழையில் நனைந்து ஆடியது.
- ❖ இருவரும் இணைந்து மழையில் ஆடினர்.

## 8.11 செயல் திட்டம்

மழைநீர்ச் சேகரிப்புச் செயல் மாதிரி ஒன்றைத் தயார் செய்க.

# மீள்பார்வை

## பயிற்சிகள்

### 1. பின்வரும் சொற்களைப் படித்துக்காட்டுக.

| | | | |
|---|---|---|---|
| செம்மொழித்தமிழ் | வரிவசூலித்தல் | வானூர்திகள் | நடுவுநிலைமை |
| பட்டத்து யானை | ஊடகங்கள் | மொழிக்கோட்பாடு | இணையத்தமிழ் |
| வீரச்சிறுவன் | ஒருங்குறி | எழுத்துரு | தடுப்புச்சுவர் |
| படவிளக்க அட்டை | பழக்கவழக்கங்கள் | நீர்மேலாண்மை | |

### 2. பின்வரும் பாடலைப் படித்துக்காட்டுக.

நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு

ஒத்த பதிற்றுப்பத்து ஓங்கு பரிபாடல்

கற்றறிந்தார் ஏத்தும் கலியோடு அகம்புறமென்று

இத்திறத்த எட்டுத்தொகை.

### 3. பின்வரும் உரைப்பகுதியைப் படிக்கக் கேட்டு, விடை கூறுக.

ஓர் ஊரில் வணிகன் ஒருவன் வாழ்ந்து வந்தான். ஒரு நாள் வியாபரத்திற்காக வண்டியில் பொருள்களை ஏற்றிக்கொண்டு காட்டுப்பாதையில் சென்றான். அங்கே முதியவர் ஒருவர் அடிபட்டு கிடந்தார், அவர் வணிகனை அழைத்தார். வணிகன் அம்முதியவரைப் பொருட்படுத்தாமல், முன்னே சென்று கொண்டிருந்தான். பாதையில் திருடர்கள், வணிகனை வழிமறித்து பொருள்களைத் திருடி, அவனையும் காயப்படுத்தி, தரையில் கிடத்திவிட்டு வண்டியுடன் ஓடிவிட்டனர். அப்பொழுது அங்கு வந்த வண்டியினை நிறுத்தி வணிகன் உதவிகேட்டான். அந்த வண்டியில் இவன் உதவி செய்யாமல் விட்டுவந்த முதியவரும் இருந்தார். அவர் வணிகனைப் பார்த்து “தம்பி, இந்தப் பக்கம் திருடர்கள் இருக்கிறார்கள் என்று கூறவே வண்டியை நிறுத்தச் சொல்லிக் கேட்டேன். பரவாயில்லை, உயிர் பிழைத்திருக்கிறாய்! வா, உன்னை அழைத்துச்செல்லத்தான் இந்தவழி வந்தோம்” என்றுகூறி வண்டிலிருந்து கை நீட்டினார். வணிகனும் தலைதாழ்த்தி மன்னிப்பு கேட்டுவிட்டு அவருடன் மருத்துவமனைக்குச் சென்றான்.

#### வினாக்கள்

1. வணிகன் எந்தப் பாதையில் சென்றான்?
2. வணிகன் பொருள்களை எதற்காக எடுத்துச் சென்றான்?
3. வணிகனை யார் வழிமறித்தார்கள்?
4. முதியவர், வணிகனிடம் என்ன கூறினார்?
5. கதையின்வழி உங்களுக்குத் தோன்றும் கருத்துகளை எழுதுக.

4. பின்வரும் கவிதையை, கவிதைநடையில் படித்துக்காட்டுக.

ஓடப்ப ராயிருக்கும் ஏழையப்பர்
உதையப்ப ராகிவிட்டால் ஓர்நொடிக்குள்
ஓடப்பர் உயரப்பர் எல்லாம்மாறி
ஒப்பப்பர் ஆய்விடுவார் உணரப்பா நீ

5. சரியான பொருளுடன் பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| 1. | கசிவு | - | சேர்தல் |
| 2. | இணைதல் | - | வெளியேறுதல் |
| 3. | அகற்றுதல் | - | அறிஞர் |
| 4. | அணி | - | நீக்குதல் |
| 5. | மேதை | - | குழு |

6. எதிர்ச்சொற்களுடன் பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| 1. | இளமை | X | புதுமை |
| 2. | மழை | X | வெறுத்தல் |
| 3. | இரவு | X | முதுமை |
| 4. | பழைமை | X | வெயில் |
| 5. | விரும்புதல் | X | பகல் |

7. கீழ்க்காணும் பெயர்ச்சொற்களின் வகையை எழுதுக.

1. மாலை - ____________________
2. கண் - ____________________
3. தாமரை - ____________________
4. சென்னை - ____________________
5. ஆட்டம் - ____________________
6. இனிமை - ____________________

8. கோடிட்ட இடத்தில் சரியான மரபுப்பெயரை நிரப்புக.

(அலறும், பிளிறும், அகவும், உறுமும், கூவும்)

1. மயில் ____________________
2. குயில் ____________________
3. ஆந்தை ____________________
4. யானை ____________________
5. புலி ____________________

9. பொருந்தாத பெயர்ச்சொல்லை வட்டமிடுக.

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | கை | பூ | நீர் | கண் |
| 2. | ஆடல் | பாடல் | ஓடல் | கடல் |
| 3. | சென்னை | மதுரை | கோவை | சோறு |
| 4. | நேற்று | இன்று | ஆடுதல் | மாலை |
| 5. | மேசை | பை | துணி | எடுத்தல் |

10. இணைமொழியைக் கொண்டு தொடர் உருவாக்குக.


1. சீரும் சிறப்பும்
2. ஏழை எளியவர்
3. இன்பதுன்பம்
4. ஏற்ற இறக்கம்
5. திட்டவட்டமாக

11. தொடருக்குப் பொருத்தமான பெயரெச்சத்தைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

(செய்த, எடுத்த, சென்ற, ஓடும், வைத்த, தூக்கிய)

1. வீட்டிலிருந்து ____________________ சேவலைப் பிடித்தான்.
2. அண்ணன் ____________________ பாதையில் தம்பியும் சென்றான்.
3. மலையைத் ____________________ கண்ணன் சிற்பம் அழகாக உள்ளது.
4. கவிதா ____________________ மண்பானை உடைந்துவிட்டது.
5. அம்மா ____________________ பால்பாயாசம் சுவையாக இருந்தது.
6. கையில் ____________________ புத்தகத்தைப் படித்து முடித்தான்.

12. குறிப்புகளைப் படித்து, விடைகளைக் கண்டறிக.




1. மரத்தில் ஒரு வகை = பனை
2. வளர்ப்பு விலங்குகளுள் ஒன்று = ____________
3. தும்பிக்கையுடைய விலங்கு = ____________
4. செயலைக் குறிக்கும் வேறுசொல் = ____________
5. அறுவகைப் பெயர்களுள் ஒன்று = ____________
6. பயிர்வகைகளுள் ஒன்று = ____________

13. தொடருக்குப் பொருத்தமான வினையெச்சத்தைத் தேர்ந்தெடுத்து எழுதுக.
(செய்து, தூக்கி, சென்று, ஓடி, வைத்து, முடித்து, படித்து)

1. கண்ணன் புத்தகக் கடையில் வேலை ____________ வந்தான்.
2. இளங்கோ திருக்குறளைப் ____________ முடித்தான்.
3. ராமன் பெட்டியைத் ____________ வைத்தான்.
4. மாலா புத்தகக்கடைக்குச் ____________ வந்தாள்.
5. சீதா ஓட்டப்பந்தயத்தில் ____________ வந்து முதல்பரிசை வென்றாள்.

**14. பின்வரும் ஆங்கிலச் சொற்களுக்கு இணையான தமிழ்ச்சொற்களை எழுதுக.**

1. Impartiality -
2. Web pages -
3. Mahout -
4. Ball of rice -
5. Dikes -
6. Millet -
7. Limestone -
8. Tender coconut -
9. Technology -
10. Generation -

**15. பின்வரும் வினாக்களுக்கு ஒரு சொல்லில் விடை கூறுக.**

1. செம்மொழிக்குரிய தகுதிகள் எத்தனை?
2. தமிழின் வரிவடிவம் எவ்வாறு அழைக்கப்படுகிறது?
3. தமிழரின் நிருவாகத் திறனை அறிய உதவும் நூல் எது?
4. யானைக்கு அளிக்கும் உணவினை எவ்வாறு அளிப்பர்?
5. நீர்நிலைகளிலிருந்து நீர் வெளியேறாமல் இருக்கக் கட்டப்படுவது எது?
6. வீட்டுக்கு வரும் விருந்தினரை வரவேற்று உணவளிப்பதை எவ்வாறு கூறுவர்?
7. நெல்சன் மண்டேலாவின் நாடு எது?
8. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை இவற்றைக் குறிக்கும் சொல் எது?
9. தமிழ்நாட்டின் பழைமையான அணையைக் கட்டியவர் யார்?
10. 'நீரின்றி அமையாது உலகு' என்று கூறியவர் யார்?

**16. பின்வரும் வினாக்களுக்கு ஒரு சொல்லில் விடை எழுதுக.**

1. பெயரைக் குறிக்கும் சொல் எது?
2. பெயர்ச்சொல் எத்தனை வகைப்படும்?
3. செயலைக் குறிக்கும் சொல் எது?

4. 'நாய் ______________________' – ஒலிமரபுச் சொல்லை எழுதுக

5. வந்தான் - இச்சொல்லை வினையெச்சமாக மாற்றுக.

6. சினைப்பெயருக்கு எடுத்துக்காட்டு தருக.

7. இணைமொழிக்கு எடுத்துக்காட்டு தருக.

8. பெயர்ச்சொல்லைக் கொண்டு முடியும் எச்சம் எது?

9. பூ ______________________, மனித ______________________ (மனம் /மணம்)

10. வினைச்சொல்லைக் கொண்டு முடியும் எச்சம் எது?

**17. பின்வரும் விளம்பரத்தைப் படித்து, வினாக்களுக்கு விடை கூறுக.**




1. கொடுக்கப்பட்ட விளம்பரம் எதனைப் பற்றியது?

2. கண்காட்சி எங்கு நடைபெறுகிறது?

3. கண்காட்சி ஏன் நடைபெறுகிறது?

4. கண்காட்சியை நடத்துவது யார்?

5. கண்காட்சி எத்தனை நாள்களுக்கு நடக்கிறது?




## கலந்துரையாடுவோம்

'தலை குனிந்து என்னைப் படி; உன்னைத் தலைநிமிரச் செய்வேன்' என்னும் பொன்மொழி பற்றிய உங்கள் கருத்தினை வகுப்பில் கலந்துரையாடுக.

## 9.2 படிப்போம்

### உலக நூலகங்கள்

ரெமோ : மோஜோ! வணக்கம்.

மோஜோ : வணக்கம்... ரெமோ!

ரெமோ : மோஜோ!... நாளை எனக்கு 'நூலகம்' என்ற தலைப்பில் பேச்சுப் போட்டி இருக்கிறது. அது தொடர்பாகச் சில செய்திகள் வேண்டும் சொல்வாயா?

மோஜோ : ஓ... சொல்வேனே!

ரெமோ : புத்தகம் என்றால் என்னவென்று சொல், மோஜோ?

மோஜோ : புது அகத்தை உருவாக்கக் கூடியவை, புத்தகங்கள். நமக்குப் புறத்தில் மாற்றம் வேண்டுமெனில் அகத்தில் மாற்றம் வேண்டும். அதற்கு மிக எளிய வழி புத்தகம் படித்தல்தான்.

ரெமோ : ஓ... அப்படியா? சரி. . . புத்தகத்தின் சிறப்பைப் பற்றி அறிஞர்கள் கூறியுள்ளதைச் சொல்.

மோஜோ : 'உடலுக்கு எப்படி உடற்பயிற்சியோ அதுபோல, மனத்துக்குப் பயிற்சி புத்தக வாசிப்பு' என்றார் சிக்மண்ட் ஃப்ராய்ட். 'ஒரு குழந்தைக்கு நீங்கள் வாங்கித் தரும் ஆகச்சிறந்த பரிசு ஒரு புத்தகம்தான்' என்றார் வின்ஸ்டன் சர்ச்சில். 'புத்தகம் இல்லாத அறை, உயிரில்லாத உடலுக்கு ஒப்பானது' என்றார் சிசரோ. ' நல்ல நூலைப் போல, சிறந்த நண்பனும் நெருக்கமான உறவினனும் எனக்கு வேறு இல்லை' என்றார் அறிஞர் அண்ணா.

ரெமோ : மிக நல்ல கருத்துகள் மோஜோ... சரி நூலகம் என்றால் என்ன?

மோஜோ : அறிவை வளர்க்கும் புத்தகங்களைக் கொண்டிருப்பதே நூலகம்.

ரெமோ : நூலகத்தைப் பற்றிக் கூடுதல் செய்திகள் கொடு மோஜோ...

மோஜோ : சொல்கிறேன். . . நூலகம், புத்தகங்களைப் பாதுகாத்து அனைத்துத் தலைமுறைக்கும் அறிவைக் கடத்தும் ஊடகமாகச் செயல்படுகிறது. அது, நாம் அறிந்திராத பல செய்திகளைத் தனக்குள் வைத்துள்ளது.

ரெமோ : அருமை. . . அருமை. . . மோஜோ... உலகில் உள்ள சிறந்த சில நூலகங்களைப் பற்றிச் சொல்.

மோஜோ : சொல்கிறேன் ரெமோ . . . . உலகின் மிகப்பெரிய நூலகம், பிரிட்டிஷ் நூலகம் (British Library). இங்கு, 3000 ஆண்டுகால வரலாற்றுப் பழைமையான புத்தகங்கள் மட்டுமன்றித் தற்காலத்திற்கேற்ற மின்நூல்களும் உள்ளன.




ரெமோ : அப்பாடியோ . . .? அப்படி என்றால் எவ்வளவு பெரிய நூலகமாக இருக்கும்? அடுத்த நூலகம் பற்றிச் சொல்.

மோஜோ : தி லைப்ரரி ஆஃப் காங்கிரஸ் (The Library of Congress) என்ற நூலகம், அமெரிக்காவின் வாஷிங்டன் நகரில் உள்ளது. இது, சுமார் 110 மில்லியன் புத்தகங்களைக் கொண்டுள்ளது.



ரெமோ : சரி மோஜோ. . . சிறுவர்களுக்குச் சிறப்பான நூலகம் ஏதேனும் இருப்பின் கூறுவாயா?

மோஜோ : ஓ. . . ஏராளமாக உள்ளனவே. அவற்றுள், செர்ரிடோஸ் மில்லினியம் நூலகம் (The Cerritos Library), கலிஃபோர்னியாவின் செர்ரிடோஸ் நகரத்தில் அமைந்துள்ளது. குழந்தைகளுக்கான பிரிவு மிகவும் புதுமையாக வடிவமைக்கப்பட்டுள்ளது. அடுத்தாக, அமெரிக்காவிலுள்ள பிரெண்ட்வுட் நூலகமும் அத்தகையதே.

**ரெமோ** : கேட்கவே மிகவும் ஆச்சரியமாக உள்ளது மோஜோ.

**மோஜோ** : மற்றுமொரு சிறந்த நூலகம், மயிங்கா. இது, மத்திய ஆப்பிரிக்க நாடான புருண்டியின் மயிங்கா என்ற நகரில் உள்ளது. நகரின் முதல் நூலகமும் ஒரே நூலகமும் இதுதான். காது கேளாத குழந்தைகளுக்காக அமைக்கப்பட்ட சிறப்பு நூலகம் இதுவாகும்.


மத்திய ஆப்பிரிக்க நூலகம்

**ரெமோ** : அடடா... சிறப்பு. சரி, மோஜோ. . . ஆசியாவிலுள்ள நூலகங்களைப் பற்றிச் சொல்கிறாயா?

**மோஜோ** : சொல்கிறேன். . . சீனாவின் தேசிய நூலகம் (National Library of China) பெய்ஜிங்கில் அமைந்துள்ளது. இது, அழகிய கட்டட வடிவமைப்பைப் பெற்றுள்ளது. பல ஆயிரம் மின்நூல்களைக் கொண்டுள்ளது.


சீனாவின் தேசிய நூலகம்

ரெமோ : அப்படியா? சரி மோஜோ... இந்தியாவில் உள்ள நூலகங்களைப் பற்றிச் சொல்..

மோஜோ : ஆசியாவின் மிகப்பழைமையான நூலகம் இந்தியாவில் உள்ளது. அதுதான், சரசுவதி மகால் நூலகம் (Saraswathi Mahal Library). தமிழ்நாட்டின் தஞ்சாவூரிலுள்ள இந்த நூலகத்தில், அரிய வகை ஓலைச்சுவடிகள் உள்ளன. இங்கு தமிழ், தெலுங்கு, மராத்தி, ஆங்கிலம் ஆகிய மொழிகளின் காகிதக் குறிப்புகளும் உள்ளன. இந்த நூலகத்தின் சிறப்பைப் பொதுமக்களுக்கு உணர்த்தும் வகையில் ஓர் அருங்காட்சியகமும் அங்கேயே உள்ளது.




ரெமோ : ஓ...... இது, நம் அறிவுச் செல்வங்களைப் பாதுகாக்கும் இடம் என்று சொல்.

மோஜோ : ஆமாம் ரெமோ. மற்றொரு நூலகத்தைப் பற்றிக் கூறுகிறேன் கேள். தமிழ்நாட்டின் சென்னையில் உள்ள அண்ணா நூற்றாண்டு நூலகம் (Anna Centenary Library). இது, ஆசியாவின் பெரிய நூலகங்களுள் ஒன்று.



ரெமோ : அண்ணா நூற்றாண்டு நூலகமா? அதைப்பற்றி விளக்கமாகச் சொல்.

மோஜோ : சொல்கிறேன். தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சர் சி.என். அண்ணாதுரை. அவர், நூல்கள் கற்பதில் மிகுந்த விருப்பம் உடையவர். எனவே, அவர் நூற்றாண்டைச் சிறப்பிக்கும் வகையில் "அண்ணா நூற்றாண்டு நூலகம்" தொடங்கப்பட்டது.

ரெமோ : இந்த நூலகத்தைப் பற்றிய கூடுதல் செய்திகளைச் சொல் மோஜோ.

மோஜோ : பல்வேறு துறையைச் சார்ந்த ஐந்து இலட்சம் நூல்கள் இங்கு உள்ளன. இது, "உலக இணைய மின்நூலகத்துடன்" (World Digital Library) இணைக்கப்பட்டுள்ளது. நூலகக் கட்டடத்தில், 8 தளங்கள் உள்ளன. இந்நூலகத்தின் ஒவ்வொரு தளமும் தனிச் சிறப்புடன் விளங்குகிறது. இந்நூலகம் சர்வதேசத் தரத்துடன் அமைந்துள்ளது. உலகின் பல்வேறு நாடுகளிலிருந்தும் இங்கு வருகை தருகிறார்கள்.

ரெமோ : அப்படியா மோஜோ ... முதலில் அங்குச் சென்று வரவேண்டும்.

மோஜோ : சென்று வா ரெமோ. . . மிக அருமையாக இருக்கும். நூலகம் பற்றி உனக்குத் தேவையான செய்திகள் கிடைத்துள்ளனவா ரெமோ?

ரெமோ : கூடுதலாகவே செய்திகள் கிடைத்துவிட்டன. நாளை பேச்சுப் போட்டியில் எப்படி அசத்துகிறேன் பார்... நன்றி மோஜோ...

மோஜோ : நன்றி ரெமோ.

## பொருள் அறிவோம்

1. ஒப்பானது - இணையானது
2. ஏராளமாக - நிறைய
3. ஆச்சரியம் - வியப்பு
4. கூடுதல் - மிகுதி
5. அசத்துதல் - சிறப்பாகச் செயல்படுதல்

## பயிற்சிகள்

## விடைகாண்போம்

**(அ) உரிய விடையைக் கூறுக.**

1. புத்தகத்தின் சிறப்பைப் பற்றிச் சிக்மண்ட் ஃப்ராய்ட் என்ன கூறுகிறார்?
2. மயிங்கா நூலகத்தின் சிறப்பு யாது?
3. ஆசியாவில் மிகப் பழைமையான நூலகம் எது? அதன் சிறப்பு என்ன?
4. ரெமோ எந்த தலைப்பில் பேச்சுப் போட்டியில் பங்கேற்கிறான்?
5. உலகின் மிகப் பெரிய நூலகம் எது?

## (ஆ) மாறியுள்ள எழுத்துகளை முறைப்படுத்திச் சொல்லை உருவாக்குக.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மு | த | றை | லை | | | - | தலைமுறை |
| ல் | க | ள் | நூ | | | - | |
| ட | க | ஊ | ம் | | | - | |
| பே | லை | தொ | சி | | | - | |
| றா | ண் | நூ | டு | ற் | | - | |
| லை | சு | வ | ஓ | டி | ச் | - | |

## (இ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து நிரப்புக.

**(சிசரோ, புத்தகங்கள், பொது நூலகம், அண்ணா நூற்றாண்டு, பிரிட்டிஷ் நூலகம்)**

1. புது அகத்தை உருவாக்கக் கூடியவை ____________________.
2. 'புத்தகம் இல்லாத அறை, உயிரில்லாத உடலுக்கு ஒப்பானது' என்றவர் ____________________ ஆவார்.
3. 3000 ஆண்டுகால வரலாற்றுப் பழைமையான புத்தகங்களைப் ____________________ கொண்டுள்ளது.
4. சீனாவின் ____________________ அழகிய கட்டட வடிமைப்பைக் கொண்டது.
5. உலக மின்நூலகத்துடன் ____________________ நூலகம் இணைக்கப்பட்டுள்ளது.

## (ஈ) நூலகத்தையும் அது அமைந்துள்ள இடத்தையும் பொருத்துக.

| வ.எண் | நூலகத்தின் பெயர் | அமைந்துள்ள இடம் | |
|---|---|---|---|
| 1 | பிரிட்டிஷ் நூலகம் | அ) | வாஷிங்டன் |
| 2 | தி லைப்ரரி ஆஃப் காங்கிரஸ் | ஆ) | தஞ்சாவூர் |
| 3 | சீன தேசிய நூலகம் | இ) | இலண்டன் |
| 4 | சரசுவதி மகால் நூலகம் | ஈ) | சென்னை |
| 5 | அண்ணா நூற்றாண்டு நூலகம் | உ) | பெய்ஜிங் |

## 9.3 தெரிந்துகொள்வோம்

### ஒரு சொல் பல பொருள்

| | | |
|---|---|---|
| ஓடு |  வீட்டின் ஓடு |  ஓடினான் |
| பட்டம் |  பட்டம் |  பட்டம் பெற்றான் |
| அணை |  அணை |  அணைத்தல் |
| அலை |  கடல் அலை |  அலைந்தான் |
| அடி |  அடித்தல் |  அடிமேல் அடி வைத்து நடந்தான் |

## பயிற்சிகள்

**(அ) கீழ்க்காணும் தொடர்களைப் பொருத்தமான சொல்லைக் கொண்டு நிறைவு செய்க.**

**(அடித்து, படைத்தான், ஓடுகள், பிழை, அணை)**

1. வீட்டின் மேற்பகுதியில் ____________________ அழகாக அமைக்கப்படிருந்தன.
2. மழை காரணமாக ____________________ வேகமாக நிரம்பியது.
3. அவன் எழுதிய கட்டுரையில் ____________________ இருந்தது.
4. வேலன் பந்தை மட்டையால் ____________________ விளையாடினான்.
5. இறைவன் இயற்கையைப் ____________________.

**(ஆ) கீழ்க்காணும் தொடர்களில் வண்ணமிடப்பட்ட சொற்கள் தரும் பொருளைக் கூறுக**


1. அமுதன் மேட்டூர் அணைக்குச் சுற்றுலா சென்ற இடத்தில் நண்பனைச் சந்தித்தான். நெடுநாள் கழித்துச் சந்தித்ததால் ஒருவரை ஒருவர் கட்டி அணைத்துக் கொண்டனர்.
2. சிறுவயதில் பட்டம்விட்டு விளையாடிய மாணவன், தற்பொழுது பட்டம் பெற்று வந்ததை எண்ணி ஆசிரியர் மகிழ்ச்சியடைந்தார்.
3. கடற்கரைக்குச் சென்ற செல்வி அங்கு அலைந்து திரிந்து பொம்மையை வாங்கினாள், பின் தன் தங்கையுடன் கடல் அலையில் விளையாடினாள்.

**(இ) சொல்லோடு சொல்லைப் பொருத்துக.**

| | | |
|---|---|---|
| 1. பூ | - | படை |
| 2. புத்தகம் | - | அலை |
| 3. கலை | - | மாலை |
| 4. கடல் | - | பை |
| 5. வீரர் | - | விழா |

## 9.4 மொழியோடு விளையாடுவோம்

**விடுபட்ட எழுத்தைக் கண்டறிந்து பூட்டுடன் சாவியைப் பொருத்துக.**



## சுவைச்செய்தி

'வீட்டில் ஒரு நூலகம்' என்பது பலருக்கும் கனவு. ஆனால், 'புத்தகங்களுக்காக ஒரு வீடு' என்று ஏங்கிய மனிதர் அண்ணல் அம்பேத்கர். ஒரு நாளில் பதினெட்டு மணி நேரத்தைக் கற்பதற்காகவே செலவிட்டார். இப்படி ஓய்வின்றிப் படிக்கும் பழக்கம் கொண்ட அம்பேத்கரிடம் அவரின் நண்பர், 'இப்படிச் சலிப்படையாமல் வாசிக்கிறீர்களே, நீங்கள் இளைப்பாறவே மாட்டீர்களா?' என்று கேட்டார். அதற்கு அம்பேத்கர் தனக்கு இளைப்பாறுதல் என்பது, "ஒரு தலைப்பு கொண்ட புத்தகத்திலிருந்து வேறு ஒரு வகையான, முற்றிலும் மாறான ஒரு புத்தகத்துக்கு மாறுவதுதான்" என்றார்.



அண்ணல் அம்பேத்கர்

## 9.5 கேட்டல் கருத்தறிதல்

### ஊக்கத்தின் மேன்மை

இந்தியாவின் குடியரசுத்தலைவராக இருந்தவர் டாக்டர் ஏ.பி.ஜே.அப்துல்கலாம். அவரிடம், "உங்களுக்குப் பிடித்த புத்தகம் எது?" என்று ஒருவர் கேட்டார். அதற்கு அவர், "வாழ்க்கைக்கு வழிகாட்டும் சிறந்த புத்தகமாக நான் கருதுவது திருக்குறள்தான்." இதிலுள்ள 1330 குறளையும் நான் பலமுறை படித்திருக்கிறேன். அவற்றுள் என் வாழ்க்கைக்கு வழிகாட்டியாகவும் அச்சாணியாகவும் இருந்த குறள்,

> வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
> உள்ளத் தனைய துயர்வு (595)

என்றார். அதாவது, "நீர்ப் பூக்களது தண்டின் நீளம், நீர் மட்டத்தின் அளவாக அமையும். அதுபோல, மனிதருடைய ஊக்கத்தின் அளவாக அவர்தம் உயர்வு அமையும்." என்பது இக்குறளின் பொருளாகும்.

### வினாக்கள்

1. இந்தியாவின் குடியரசுத்தலைவராக இருந்தவர் யார்?
2. குடியரசுத்தலைவரிடம் கேட்கப்பட்ட வினா எது?
3. குடியரசுத்தலைவர் சிறந்த நூலாக எதனைக் கூறினார்?
4. குடியரசுத்தலைவரின் வாழ்க்கைக்கு வழிகாட்டியாக அமைந்த குறள் எது?
5. திருக்குறளிலுள்ள மொத்த குறட்பாக்களின் எண்ணிக்கை யாது?

## 9.6 படம் பார்த்துக் கருத்து கூறல்



## 9.7 செந்தமிழ்ச்செல்வம்

### திருக்குறள்

தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத்து ஊறும் அறிவு.

(குறள் 396)
-திருவள்ளுவர்

(தொடுதல் – தோண்டுதல்; ஊறும் - உண்டாதல், கேணி - கிணறு)

**பொருள் :**

மணல் கேணியில் தோண்டிய அளவிற்கு நீர் சுரக்கும். அதுபோல், படிக்கப்படிக்கக் கல்வி அறிவு உயரும்

### பழமொழி

கற்றோருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு

## சொல்வதைக் கேட்டு எழுதுக

1. நூலகம் செல்வோம்; அறிவை வளர்ப்போம்.
2. புத்தகமே சிறந்த நண்பன்
3. வீட்டிற்கு ஒரு நூலகம் அமைப்போம்

## சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக

எ.கா. நூலகம்

என் வீட்டிற்கு அருகில் நூலகம் உள்ளது.

1. தலைமுறை
2. ஓலைச்சுவடி
3. மகிழ்ச்சி

## 9.8 மொழிபெயர்ப்போம்

1. ஒரு குழந்தைக்கு நீங்கள் தரும் சிறந்த பரிசு புத்தகம்.

_______________________________________________

2. சரஸ்வதி மகால் நூலகம் தஞ்சையில் உள்ளது.

_______________________________________________

## 9.9 அறிந்துகொள்வோம்

| | | |
|---|---|---|
| 1. நூலகம் | - | Library |
| 2. தலைமுறை | - | Generation |
| 3. ஊடகம் | - | media |
| 4. ஓலைச்சுவடி | - | Palm Leaf Manuscript |
| 5. காகிதக் குறிப்பு | - | Paper Note |
| 6. அருங்காட்சியகம் | - | Museum |
| 7. முதலமைச்சர் | - | Chief Minister |
| 8. நூற்றாண்டு | - | Centenary |
| 9. தரம் | - | Quality |

## 9.10 படைப்பாற்றல் வளர்ப்போம்

கீழே கொடுக்கப்பட்டுள்ள பாடல் வரிக்குப் பொருத்தமான ஒரு கதை எழுதுக.

தீதும் நன்றும் பிறர் தர வாரா

- புறநானூறு

## 9.11 செயல் திட்டம்


நூலக அமைப்பு மாதிரி ஒன்று செய்து வருக.

## பாடம் 10

## 10.1 பேசுவோம்

### கலந்துரையாடுவோம்

கல்வி கற்பதால் நீங்கள் அடையும் பயன்கள் குறித்து உங்கள் நண்பர்களுடன் வகுப்பில் கலந்துரையாடுக.



## 10.2 படிப்போம்

### கல்வியின் சிறப்பு



மனித வாழ்வில், ஒவ்வொரு பருவத்திற்கும் சில கடமைகள் உண்டு. அவற்றுள். இளமைப்பருவம் கல்விக்கு உரியது. எனவேதான் 'இளமையில் கல்' என்றார் ஔவையார். கல்வியானது, கற்பவனின் வாழ்வியல் சூழலுக்கு ஏற்ப அமைதல் வேண்டும். அத்தகைய கல்வியைக் கற்றுத்தரும்படி, தன் மகனின் ஆசிரியருக்கு ஆபிரகாம் லிங்கன் கடிதம் எழுதினார்.

சிறந்த கல்வி, மனித சமுதாயத்தை வளர்ச்சிப்பாதையில் கொண்டு செல்லும். மக்களைச் சீர்திருத்திச் செம்மைப்படுத்தும். மனித ஆற்றலை மேம்படுத்தும். பண்பாட்டினைக் காக்கும். அறிவியலை வளர்க்கும். நாட்டுப்பற்றை உண்டாக்கும். இத்தகு ஆற்றல் கொண்ட கல்வியையே இளைய தலைமுறை பெற வேண்டும். இதனையே ஆபிரகாம் லிங்கனின் கடிதம் வலியுறுத்துகிறது. அக்கடிதத்தின் சில பகுதிகளை இப்பாடத்தில் காண்போம்.

அவன் கற்றுக் கொள்ள வேண்டும்…
அனைத்து மனிதர்களும்
நேர்மையானவர் அல்லர்
அனைத்து மனிதர்களும்
உண்மையானவர் அல்லர்
என்பதை அவன் தெரிந்து கொள்ள வேண்டும்.

தன்னல அரசியல்வாதிகளுக்கு இடையில்
அர்ப்பணிப்பு மிக்க தலைவர்களும்
இருக்கிறார்கள் என்பதையும்
பகைவர்களுக்கு இடையில் நண்பர்களும்
இருக்கிறார்கள் என்பதையும்
அவனுக்குக் கற்றுக் கொடுங்கள்.

புத்தகங்கள் என்ற புதிய உலகத்தின் வாசல்களை
அவனுக்குத் திறந்து காட்டுங்கள்.
அதே வேளையில், இயற்கையை இரசிக்கவும்
அவனுக்குக் கற்றுக்கொடுங்கள்.

வானில் பறக்கும் பறவைகளின்
வியப்பு மிகுந்த அழகையும்
சூரிய ஒளியில் மின்னும்
தேனீக்களின் வேகத்தையும்
பசுமையான மலையில் உள்ள
மலர்களின் வனப்பையும்
இரசிப்பதற்கு அவனுக்குக் கற்றுக்கொடுங்கள்.

அவனுக்குப் பொறாமை குணம் வந்துவிடாமல்
கவனமாகப் பார்த்துக் கொள்ளுங்கள்.
ஏமாற்றுவதை விடவும் தோல்வியடைவது
எவ்வளவோ மேலானது என்பதைப்
பள்ளியில் அவனுக்குக் கற்றுக்கொடுங்கள்.

மனிதர்கள் அனைவரின் குரலையும்
அவன் கேட்க வேண்டும்; எனினும்
உண்மை என்னும் திரையில் வடிகட்டி
நல்லவற்றை மட்டும் பிரித்து எடுக்க
அவனுக்குக் கற்றுக் கொடுக்க வேண்டும்.

துன்பமான வேளைகளில் சிரிப்பது எப்படி என்று
அவனுக்குக் கற்றுக்கொடுங்கள்
தவறு கண்டால் கொதித்து எழும் துணிச்சலை
அவனுக்குக் கற்றுக்கொடுங்கள்.
அதே வேளையில்
தன்னுடைய வலிமையை மௌனமாக வெளிப்படுத்தும்
பொறுமையை அவனுக்குக் கற்றுக்கொடுங்கள்.

அவன் தன் மீதே மிகுந்த நம்பிக்கை வைக்க வேண்டும்
அப்போதுதான் மனித இனத்தின்மீது
அவன் மிகுந்த நம்பிக்கை கொள்வான்.

அவனை அன்பாக நடத்துங்கள்
ஆனால் அதிக செல்லம் கொடுத்துச் சார்ந்திருக்கச்
செய்யாதீர்கள்.
ஏனென்றால் மிகுதியான தீயில் காட்டப்படும்
இரும்பு மட்டும்தான்
பயன் மிக்கதாக மாறுகிறது.

இது மிகப்பெரிய பட்டியல்தான்.
இவற்றுள் செய்ய முடிந்ததை எல்லாம் கற்றுக்கொடுங்கள்.
அவன் மிக நல்லவன், என்னுடைய அன்பு மகன்.

## பொருள் அறிவோம்

1. வனப்பு – அழகு
2. மௌனம் – அமைதி
3. வாசல் – நுழைவாயில்
4. செல்லம் – மிகுந்த அன்பு

## பயிற்சிகள்

### அ) விடை காண்போம்

1. ஆபிரகாம் லிங்கன் 'புதிய உலகம்' என்று எதனைக் கூறுகிறார்?
2. பொறாமை, பொறுமை - இவ்விரண்டில் எதனைக் கடைப்பிடிக்க வேண்டும்? ஏன்?
3. ஆசிரியர், மாணவனுக்கு எவற்றையெல்லாம் இரசிக்கக் கற்றுக் கொடுக்க வேண்டும்?

### (ஆ) பொருத்தம் இல்லாத ஒன்றைக் கண்டறிந்து எழுதுக.

1. ஆபிரகாம் லிங்கன் தன் மகனுக்குக் கற்றுக் கொடுக்கச் சொன்னவை

அ. இயற்கையை இரசித்தல்

ஆ. தோல்வியை ஏற்றுக்கொள்ளுதல்

இ. பிறருக்குத் தீங்கு செய்தல்

ஈ. துன்பமான வேளையில் சிரித்தல்


### (இ) பின்வரும் தொடர்களில் வண்ணமிட்ட எழுத்துகளை இணைத்தால் படிப்பதைக் குறிக்கும் சொல் கிடைக்கும். அது என்ன?


1. குமரன் புத்தகம் வாங்கினான்.
2. வில் வித்தை கற்றேன்.
3. தலைவர் பதவி ஏற்றார்.


விடை ___________

## 10.3 தெரிந்துகொள்வோம்

### ஒலி வேறுபாட்டுச் சொற்கள் – (ர, ற)



அரம்



அறம்



பரவை



பறவை



இரை



இறை




பழங்கள் தருவது மரம்



பகைவரை விரட்டுவது மறம்



ஆற்றின் ஓரம் கரை



ஆடையில் இருப்பது கறை



விறகை எரித்தால் கரி



வீட்டில் சமைப்பது காய்கறி

## பயிற்சிகள்


**(அ) படத்தைப் பார்த்து, விடுபட்ட எழுத்தை எழுதுக.**



ப_த்தல் (ரி,றி)



ப_சளித்தல் (ரி,றி)




அ_ (ரை,றை)



அ_ (ரை,றை)

**(ஆ) படத்தைப் பார்த்து, தொடரில் விடுபட்ட எழுத்துகளை நிரப்புக.**


1.) ம_வர்கள் கு_ங்குகளைப் பார்த்தார்கள். (ர/ற)





2.) பு _ ப_க்கின்றது. (ற/றா)

3.) சி_ந்த அ_ண்மனை. (ற/ர)



## சுவைச்செய்தி

### கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு




இந்தியாவின் குடியரசுத் தலைவராக இருந்தவர் சங்கர் தயாள் சர்மா. அவர் ஒரு முறை மஸ்கட் சென்றார். மஸ்கட் மன்னர், அவரை வரவேற்கச் சென்றார். சங்கர் தயாள் சர்மா வண்டியின் அருகே வந்ததும், பின் பக்கக் கதவுகளை மன்னரே திறந்துவிட்டார். அதன்பின் தானே ஓட்டுநராகிக் காரை ஓட்டினார்.



வளைகுடா நாடுகளில் எவருக்கும் கிடைக்காத சிறப்பு இது. "இந்தியக் குடியரசுத் தலைவருக்கு மட்டும் ஏன் இந்தச் சிறப்பான வரவேற்பு?" என்ற கேள்வி அனைவருக்கும் எழுந்தது. அதற்கு மாமன்னர் சொன்னார், "அவர் இந்தியக் குடியரசுத் தலைவர் என்பதற்காக மட்டும், இந்தச் சிறப்பான வரவேற்பு நிகழவில்லை. பூனா பல்கலைக்கழகத்தில் அவரிடம் படித்த மாணவன் நான். சிறந்த ஆசிரியருக்குத் தரவேண்டிய மதிப்பை, மாணவன் என்ற முறையில் அளித்தேன்" என்றார்.

# 10.4 மொழியோடு விளையாடுவோம்

**(அ) குறிப்புகளைக் கொண்டு சொற்களைக் கண்டறிந்து வட்டமிடுக.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
|  | அ | மீ | ன் | ல் | நீரில் வாழ்வது |
|  | ல் | ட் | க | ண் | பார்க்க உதவுவது |
|  | கூ | டு | ட் | ஐ | பறவையின் வாழிடம் |
|   | ப் | நூ | ல் | ஓ | அறிவைத் தருவது |
|  | பா | ல் | ற் | இ | பசு தருவது |

## கருத்து விளக்கப்படம்



**நூல் வெளியீட்டு விழா அழைப்பிதழ்**

**வானை அளப்போம்...வா!!!**

**– கவிஞர் பாரதி மைந்தன்**

**நாள்** : 14. 04. 2023 **நேரம்** : மாலை 5 மணி

**இடம்** : பாரதி கலையரங்கம், டைம்ஸ் சதுக்கம்.

| | | |
|---|---|---|
| வரவேற்புரை | : | திரு. ந. பாலன் தலைவர், தமிழ்ச் சபை, நியூ யார்க். |
| தலைமை | : | முனைவர் பா. வளர்மதி, நிறுவனர், செந்தமிழ் ஆய்வு மையம், தமிழ்நாடு. |
| வெளியிடுபவர் | : | முனைவர் த. மலையரசன், தலைவர், திருவள்ளுவர் தமிழ் இலக்கிய மன்றம், கலிஃபோர்னியா. |
| பெறுபவர் | : | முனைவர் பா. மெய்ஞ்ஞானி, தலைவர், கம்பன் கழகம், மெக்ஸிகோ. |
| வாழ்த்துரை | : | பேராசிரியர் ஜோ. அலெக்ஸ் |
| ஏற்புரை | : | கவிஞர் பாரதிமைந்தன் |
| நன்றியுரை | : | முனைவர் மா. கீர்த்தி |

**அனைவரும் வருக!!**

**(விழா அரங்கில் நூல் விற்பனையும் நடைபெறும்)**

### வினாக்கள்

1. விழா எங்கு நடைபெறுகிறது?
2. விழாவில் வெளியிடப்படும் நூல் எது?
3. விழாவிற்குத் தலைமை ஏற்பவர் யார்?
4. நூலை வெளியிடுபவர் யார்?
5. நூல் வெளியீட்டு விழாவில் வாழ்த்துரை வழங்குபவர் யார்?

## 10.5 கேட்டல் கருத்தறிதல்

### அகத்தின் அழகு முகத்தில் தெரியும்

ஆபிரகாம் லிங்கன் தம் செயலாளரைத் தேர்ந்தெடுப்பதற்கு நேர்காணல் நடத்தினார். ஆனால், யாரும் தேர்வு செய்யப்படவில்லை. லிங்கனின் நண்பர் காரணம் கேட்டார். அதற்கு லிங்கன், 'நேர்காணலுக்கு வந்த யாரும் அழகாக இல்லை' என்றார். நண்பர், 'முகம் அழகாக இல்லை என்பது, அவர்களது குற்றம் இல்லை அல்லவா?' என்று கேட்டார்.

அதற்கு லிங்கன், 'அவர்களது குற்றம்தான். ஏனெனில், நான் அழகு என்று கூறியது, சாதாரண முக அழகை அல்ல. மனிதன் ஒருவனின் முகம் எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம். ஆனால், மனத்தில் நல்ல எண்ணமும், ஆழ்ந்த தன்னம்பிக்கையும் இருக்க வேண்டும். அப்படி இருந்தால், கண்களில் ஒளி இருக்கும். உதடுகளில் புன்னகை மிளிரும். முகத்தில் பெரும் அமைதி நிலவும். அப்படிப்பட்ட அழகை, வந்தவர் யார் முகத்திலும் நான் பார்க்கவில்லை' என்றார். இந்த நிகழ்வு 'அகத்தின் அழகு முகத்தில் தெரியும்' என்னும் பழமொழியை நினைவுப்படுத்துகிறது.

### வினாக்கள்

1. நேர்காணல் நடத்தியவர் யார்?
2. எந்தப் பதவிக்காக நேர்காணல் நடைபெற்றது?
3. லிங்கன் நேர்காணலில் யாரையும் தேர்ந்தெடுக்கவில்லை. ஏன்?
4. லிங்கன், அழகு என்று எவற்றைக் குறிப்பிடுகிறார்?
5. 'அகத்தின் அழகு முகத்தில் தெரியும்' – இதனை மொழிபெயர்க்க.

## 10.6 படம் பார்த்துக் கருத்து கூறல்



## 10.7 செந்தமிழ்ச்செல்வம்

### திருக்குறள்

ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப் புடைத்து

(குறள்: 398)

-திருவள்ளுவர்

(ஒருமை – ஒரு பிறப்பு: எழுமையும் - ஏழுபிறப்புக்கும்; ஏமாப்பு - பாதுகாப்பு)

**பொருள் :**

ஒரு பிறப்பில் தான் கற்ற கல்வியானது அப்பிறப்பிற்கு மட்டும் அல்லாமல் அவனுக்கு ஏழுபிறப்பிலும் உதவும் தன்மை உடையது.

### பழமொழி

காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்

### சொல்வதைக் கேட்டு எழுதுக

1. பள்ளிக்குச் செல்வோம்.
2. கல்வி கற்போம்.
3. வளமாக வாழ்வோம்.

### சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக

எ.கா. கல்வி

கவின் கல்வியில் சிறந்து விளங்கினான்.

1. புத்தகம்
2. நேர்மை
3. உலகம்

## 10.8 மொழிபெயர்ப்போம்

1 Education helps us acquire knowlegde

______________________________

2. Education helps us distinguish between good and bad.

______________________________

## 10.9 அறிந்துகொள்வோம்

| | | | |
|---|---|---|---|
| 1. | தன்னலம் | – | Selfish |
| 2. | திரை | – | Screen |
| 3. | அரசியல்வாதி | – | Politician |
| 4. | வடிகட்டி | – | Filter |
| 5. | அர்ப்பணிப்பு | – | Dedication |
| 6. | வலிமை | – | Strength |
| 7. | தலைவர் | – | Leader |
| 8. | மௌனம் | – | Silence |
| 9. | பகைவர் | – | Enemy |
| 10. | பொறுமை | – | patience |
| 11. | தேனீ | – | Honey bee |
| 12. | இரும்பு | – | Iron |
| 13. | பொறாமை | – | Jealousy |
| 14. | பட்டியல் | – | List |

## 10.10 படைப்பாற்றல் வளர்ப்போம்

"கல்வி கண் போன்றது" என்னும் தலைப்பினைக் கொண்டு ஐந்து வரி எழுதுக.

## 10.11 செயல் திட்டம்

நீங்கள் கற்கும் பள்ளிக்கூடத்தின் மாதிரி அமைப்பை உருவாக்குக.

## 11.1 பேசுவோம்

# பாடம் 11

# உலக வாணிகம்



### கலந்துரையாடுவோம்

வாணிகம் பற்றியும் அதனால் ஏற்படும் பயன்கள் குறித்தும் வகுப்பில் உங்கள் ஆசிரியருடன் கலந்துரையாடுக.

## 11.2 படிப்போம்

# பழந்தமிழர் வாணிகம்



வாணிகம் என்பது. ஒரு பொருளை வாங்குவதும் விற்பதும் ஆகும். பழந்தமிழர், இச்செயலைப் 'பண்டமாற்று' என்று குறிப்பிட்டனர். பண்டம் என்பது பொருள். மாற்று என்பது மாற்றுதல். முல்லை நிலத்தில் வாழ்ந்த மக்கள், பால் முதலான பொருள்களைக் கொடுத்து அதற்கு மாற்றாகத் தானியங்களைப் பெற்றனர் என்னும் செய்தி, சங்கப்பாடல் ஒன்றில் (குறு.221) இடம்பெற்றுள்ளது

காலம் செல்லச் செல்ல, பண்டமாற்று முறைக்கு மாற்றாகப் பொருள்களை விலை கொடுத்து வாங்கும் நிலை ஏற்பட்டது. இவ்வாறு பொருள்களை வாங்குவதிலும் விற்பதிலும் நாணயங்கள் பயன்படுத்தப்பட்டன. பொருள்களை விற்பனை செய்யும் வணிகரும் வாங்கும் நுகர்வோரும் ஒருவரையொருவர் ஏமாற்றுவதில்லை. இதிலிருந்து, பழந்தமிழர் வாணிகத்தில் அறத்தைப் பின்பற்றினர் என்பதை அறிந்துகொள்ளலாம்.

வாணிகத்தில் உள்நாட்டு வாணிகம், வெளிநாட்டு வாணிகம் என இருவகை உண்டு. வெளிநாட்டிலிருந்து சில பொருள்கள் வருவிக்கப்படும். இஃது இறக்குமதியாகும். பட்டு, கண்ணாடி போன்ற பொருள்கள் பிற நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன. அதேபோன்று, தம் நாட்டிலிருந்து வெளிநாட்டுக்குச் சில பொருள்கள் அனுப்பப்படும். இஃது ஏற்றுமதியாகும். மிளகு, ஏலக்காய், சந்தனம், முத்து, பவளம் முதலிய பொருள்கள் வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன.

பண்டைத்தமிழர்கள் தரைவழியாகவும் கடல்வழியாகவும் வாணிகம் செய்தனர். இத்தாலி, கிரேக்கம், பர்மா, மலேசியா முதலான நாடுகளோடு அவர்கள் வாணிகத் தொடர்பு கொண்டிருந்தனர். தமிழகத்தில் நடைபெற்ற அகழாய்வுச் சான்றுகள் வாயிலாகக் கிரேக்க, ரோமானிய நாணயங்கள் கிடைத்துள்ளன. இவை, வெளிநாட்டுடன் தமிழர்கள் வாணிகத் தொடர்பு கொண்டிருந்தனர் என்பதை உறுதிசெய்கின்றன.

தமிழர்கள் வெளிநாட்டவருடன் வாணிகம் மேற்கொண்டதால், அந்நாட்டுச் சொற்கள் பலவும் தமிழில் கலந்தன. அதுபோல் தமிழ்ச்சொற்கள் வெளிநாட்டினர் பேசும் மொழிகளில் கலந்தன. 'அரிசி' என்னும் தமிழ்ச்சொல் கிரேக்கம், இலத்தீன் மொழிகளில் கலந்தது. இஃது "ஒரைசா" என்றழைக்கப்படுகிறது. இதுவே ஆங்கிலத்தில் Rice என்றானது.

கடல்வழி வாணிகம் எளிதாக நடைபெறும் வகையில், துறைமுகங்கள் அமைக்கப்பட்டன. தொண்டி, முசிறி, கொற்கை என்பவை துறைமுகங்கள் ஆகும். ஒவ்வொரு துறைமுகத்திலும் ஒரு கலங்கரை விளக்கம் கட்டப்பட்டது. இது, கப்பல்களுக்கு வழிகாட்டியாகச் செயல்பட்டது. துறைமுகங்களில் கப்பல்களை நங்கூரமிட்டு நிறுத்துவர்; இக்காட்சி, யானைகளைத் தூணில் கட்டி வைத்திருந்ததைப் போல் இருந்தது எனச் சங்கப்பாடல் (பட்டினப்பாலை) ஒன்று கூறுகிறது.

## பொருள் அறிவோம்

1. பண்டமாற்று - பொருளை மாற்றுதல்
2. வணிகர் - பொருளை விற்பவர்
3. நுகர்வோர் - பொருள் வாங்குபவர்
4. அகழாய்வு - நிலத்தைத் தோண்டி ஆராய்தல்
5. நங்கூரம் - கப்பலை நிறுத்துவதற்குப் பயன்படும் கருவி

## பயிற்சிகள்

### அ) விடை காண்போம்

1. வாணிகம் என்பது யாது?
2. முல்லை நில மக்கள் பண்டமாற்றாகப் பெற்ற பொருள்கள் யாவை?
3. ஏற்றுமதி, இறக்குமதி – விளக்கம் கூறுக.
4. தமிழர், வெளிநாட்டவருடன் வாணிகம் மேற்கொண்டதால் விளைந்த பயன் யாது?
5. கலங்கரை விளக்கத்தின் பயன் யாது?


### ஆ) கோடிட்ட இடத்தில் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

**(நுகர்வோர், ஒரைசா, கலங்கரை விளக்கம், பண்டமாற்று, இறக்குமதி)**


1. பொருள் கொடுத்துப் பொருள் வாங்குவது ______________ எனப்படும்.
2. வணிகரிடமிருந்து பொருளைப் பெறுபவரை ______________ என அழைக்கிறோம்.
3. பழந்தமிழர் வெளிநாட்டிலிருந்து கண்ணாடியை ______________ செய்தனர்.
4. கிரேக்க, இலத்தீன் சொற்களில் 'அரிசி' என்னும் சொல் ______________ எனக் கூறப்பட்டது.
5. கப்பல்களுக்கு வழிகாட்டியாகக் ______________ அமைக்கப்பட்டது.

## 11.3 தெரிந்துகொள்வோம்

### பல சொல் ஒரு பொருள்





கட்டத்திலுள்ள சொற்கள் **'சூரியன்'** என்னும் ஒரு பொருளையே குறிக்கின்றன.




வயல்

கட்டத்திலுள்ள சொற்கள் 'வயல்' என்னும் ஒரு பொருளையே குறிக்கின்றன.




நிலவு

கட்டத்திலுள்ள சொற்கள் 'நிலவு' என்னும் ஒரு பொருளையே குறிக்கின்றன.

## பயிற்சிகள்

**அ) கீழ்க்காணும் படங்களைக் குறிக்கும் பல சொல் எழுதுக.**





______________________ ______________________

______________________ ______________________

______________________ ______________________

**ஆ) கீழ்க்காணும் ஒரு பொருளுக்குரிய பல சொற்களைச் சரியாகப் பொருத்துக**

1. சூரியன் – அம்புலி, திங்கள், மதி
2. வயல் – அணி, வனப்பு, எழில்
3. நிலவு – ஞாயிறு, கதிரவன், ஆதவன்
4. அன்பு – கழனி, செறு , பழனம்
5. அழகு – பாசம், பரிவு, நேசம்

**இ) கீழ்க்காணும் தொடர்களில் கோடிட்ட இடத்தைச் சரியான சொல் கொண்டு நிரப்புக.**

**(அம்புலி, பரிவு, சுற்றுலா, கழனி, கதிரவன்)**

1. காலையில் ______________ உதிப்பது மிகவும் அழகான காட்சி.
2. அவன் ______________ யில் தினமும் வேலை செய்கிறான்.
3. தாய் தன் குழந்தையிடம் ______________ காட்டி உணவூட்டினாள்.
4. எழில் சூழ்ந்த இடங்களுக்குச் ______________ செல்ல அனைவரும் திட்டமிட்டனர்.
5. ரவியும், அமுதனும் ஒருவர் மீது ஒருவர் ______________ செலுத்தி வாழ்ந்தனர்.

## 11.4 மொழியோடு விளையாடுவோம்

**கீழ்க்காணும் எழுத்துகளைக் கொண்டு தொழில்களைக் கண்டுபிடிப்போம்.**

நெ ளா ர் வா து ண் ச மை ரு இரா வே ணு

த் நி க ம ம் வ வு த ணி

| படம் | குறிப்பு | தொழில் |
|---|---|---|
|  | 1. உணவைத் தருவது | வேளாண்மை |
|  | 2. உடையைத் தருவது | |
|  | 3. விற்பனை செய்வது | |
|  | 4. நாட்டைக் காப்பது | |
|  | 5. உயிரைக் காப்பது | |

## தகவல் துளி

### நாளங்காடி, அல்லங்காடி

பண்டைய காலத்தில், பகலில் மட்டும் அல்லாமல், இரவிலும் வாணிகம் நடைபெற்றுள்ளது. இதனைத் தமிழிலக்கியங்கள் நாளங்காடி, அல்லங்காடி எனக் குறிப்பிடுகின்றன. பகலில் வாணிகம் நடைபெறும் இடம், நாள் (பகல்) அங்காடி ஆகும். இரவில் வாணிகம் நடைபெறும் இடம், அல் (இரவு) அங்காடி ஆகும். மதுரை மாநகரில் இவை இரண்டும் இருந்தன என அறிய முடிகிறது. சங்க இலக்கிய நூல்களில் ஒன்றான மதுரைக்காஞ்சியில் நாளங்காடி, அல்லங்காடி பற்றிய குறிப்புகள் உள்ளன. மேலும் மதுரை துங்கா நகரம் என்று அழைக்கப்படுகிறது.

## 11.5 கேட்டல் கருத்தறிதல்

### உழைப்பின் சிறப்பு

சிங்கம் ஒன்று சில நாள்களாக குகைக்குள்ளேயே படுத்திருந்தது. குகையின் மூலையில் ஒரு சிலந்தி, வலை பின்னியிருந்தது. அது, சிங்கத்தைப் பார்த்து, 'சிங்க ராஜாவே! நீங்கள் இரை தேடச் செல்லவில்லையா?' எனக் கேட்டது. 'சிலந்தியே! நானும் உன்னைக் கவனித்துக் கொண்டுதான் இருக்கிறேன். நீ இருக்கும் இடத்திலிருந்தே இரையைப் பிடித்து விழுங்குகிறாய்! நானும் உன்னைப் போலவே இருக்கும் இடத்திலேயே இரையைப் பிடித்து உண்ணலாம் என நினைத்துப் படுத்திருக்கிறேன்' என்றது சிங்கம். இதனைக் கேட்ட சிலந்தி சிரித்தது. சிங்கம் 'ஏன் சிரிக்கிறாய்?' என்றது.

உங்கள் அறியாமையை நினைத்துதான் சிரிக்கிறேன். என் கடின உழைப்பினாலேயே வலை உருவாகிறது. அது ஒட்டும் தன்மையுடன் உள்ளது. அதில் பூச்சிகள் ஒட்டிக்கொள்கின்றன. அதனால்தான், எனக்கு உணவு கிடைக்கிறது. ஆனால் நீங்கள், எந்த முயற்சியும் செய்யாமல், உங்களுக்கு உணவு எப்படிக் கிடைக்கும்?' என்று கேட்டது சிலந்தி. சிலந்தியின் உழைப்பை உணர்ந்தது சிங்கம். தானும் வேட்டையாடி உண்ண வேண்டும் என்று குகையைவிட்டுப் புறப்பட்டது.

### வினாக்கள்

1. சிங்கம் எங்கு இருந்தது?
2. சிலந்தி எங்கு வலை பின்னியிருந்தது?
3. சிங்கம், சிலந்தியிடம் என்ன சொன்னது?
4. சிலந்தி வலை, எத்தன்மை உடையது?
5. சிங்கம், சிலந்தியிடமிருந்து என்ன கற்றுக் கொண்டது?

## 11.6 படம் பார்த்துக் கருத்து கூறல்




## 11.7 செந்தமிழ்ச்செல்வம்

### புறநானூறு

'ஈ' என இரத்தல் இழிந்தன்று; அதன் எதிர்,

'ஈயேன்' என்றல் அதனினும் இழிந்தன்று;

'கொள்' எனக் கொடுத்தல் உயர்ந்தன்று; அதன் எதிர்,

'கொள்ளேன்' என்றல் அதனினும் உயர்ந்தன்று;

(பாடல் – 204)

- கழைதின் யானையார்

(ஈ - கொடு ; இரத்தல் - கேட்டல் ; ஈயேன் - கொடுக்கமாட்டேன்)

**பொருள்:**

'எனக்குக் கொடு' எனக் கேட்பது இழிவானது ஆகும். அப்படிக் கேட்டபிறகும் 'நான் கொடுக்கமாட்டேன்' எனச் சொல்வது மிகவும் இழிவானது ஆகும். 'எடுத்துக்கொள்ளுங்கள்' என்று கூறுவது உயர்ந்தாகும். அவ்வாறு கூறியபின் 'எனக்கு வேண்டாம்' என்று மறுப்பது அதனைவிட உயர்ந்தாகும்.

**பழமொழி**

உழுதவன் கணக்குப் பார்த்தால், உழக்கும் மிஞ்சாது

## சொல்வதைக் கேட்டு எழுதுக

1. தமிழர் வாணிகம் சிறப்புடையது.
2. பண்டமாற்று மூலம் பொருள் பெற்றனர்.
3. வாணிகத்திலும் நேர்மையைக் கடைப்பிடிக்க வேண்டும்.

## சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக

எ.கா. கப்பல்

எனக்குக் **கப்பலி**ல் பயணம் செய்வது மிகவும் பிடிக்கும்.

1. வாணிகம்
2. ஏற்றுமதி
3. துறைமுகம்

## 11.8 மொழிபெயர்ப்போம்

நாம் நாள்தோறும் பொருள்களை வாங்கிப் பயன்படுத்துகிறோம். பொருள்களை வாங்குவதற்குப் பணம் தேவைப்படுகிறது. பணம் ஈட்டுவதற்கு நாம் உழைக்க வேண்டும்.

______________________________

______________________________

## 11.9 அறிந்துகொள்வோம்

1. மின்னஞ்சல் - Email
2. துறைமுகம் - Harbour
3. வாணிகம் - Business
4. சுங்கச்சாவடி - Toll gate
5. ஏலக்காய் - Cardamom
6. வரி - Tax
7. முத்து - Pearl
8. அங்காடி - Market
9. பவளம் - Coral
10. பொன் - Gold

| | | | |
|---|---|---|---|
| 11. | ஏற்றுமதி | - | Export |
| 12. | விற்பனை | - | Sale |
| 13. | இறக்குமதி | - | Import |
| 14. | கப்பல் | - | Ship |
| 15. | நாணயங்கள் | - | Coins |
| 16. | இணையதள விற்பனை | - | Online Sale |

## 11.10 படைப்பாற்றல் வளர்ப்போம்

கீழ்க்காணும் படத்திலுள்ள பொருளுக்கு இணைய விற்பனைத் தளத்திற்கேற்ப பொருளின் விளக்கம் எழுதுக.



## 11.11 செயல் திட்டம்

உங்களுக்கு மிகவும் பிடித்த பொருளை விற்பனை செய்வதற்கான விளம்பரத்தைக் காணொலியாகத் (Video) தயாரிக்க.

பாடம்

12

## 12.1 பேசுவோம்



### கலந்துரையாடுவோம்

உங்கள் பகுதியில் நடைபெறும் தொழில்கள் குறித்து, ஆசிரியருடன் கலந்துரையாடுக.

## 12.2 படிப்போம்

### உலகத்தொழில் கண்காட்சி

### ஆசிரியர், மாணவர் கலந்துரையாடல்

**ஆசிரியர் : நிவேதிதா**

மாணவர்கள் : டேவிட், பெலீசியா, வர்ஷிதா, தருண், ஏஞ்சலின், சங்கமித்ரா, நிலவன்

ஆசிரியர் : வணக்கம்!

மாணவர்கள் : வணக்கம்!

ஆசிரியர் : அனைவரும் நலமா? பல நாள் கழித்துச் சந்திக்கின்றோம்.

மாணவர்கள் : ஆமாம். நாங்கள் அனைவரும் நலம்.

ஆசிரியர் : விடுமுறை நாள்களை எவ்வாறு கழித்தீர்கள்?

மாணவர்கள் : கண்காட்சி வாரமாயிற்றே. நாங்கள் எல்லாரும் எங்களுக்குப் பிடித்த கண்காட்சிகளுக்குச் சென்று வந்தோம்.

ஆசிரியர் : நன்றாகத்தான் விடுமுறையைக் கழித்துள்ளீர்கள். நீங்கள் எந்தக் கண்காட்சிக்குச் சென்றீர்கள்?

ஈத்தன் : நான் வீட்டு உபயோகப்பொருட்கள் கண்காட்சிக்குச் சென்றேன்.

நிலவன் : நான் புத்தகக்கண்காட்சியில் புத்தகங்கள் வாங்கினேன்.

தருண் : நீங்கள் எந்தக் கண்காட்சிக்குச் சென்றீர்கள்?

ஆசிரியர் : நான் உலகத்தொழில் கண்காட்சிக்குச் சென்றிருந்தேன்.

நிலவன் : தொழில் கண்காட்சியா? அப்படி என்றால் என்ன?

ஆசிரியர் : சொல்கிறேன். பொருள் கண்காட்சி என்றால், பொருள்களின் வகைகளைக் காட்சிப்படுத்தி இருப்பர் அல்லவா? அதுபோல், தொழில் கண்காட்சியில், பல்வேறு நாடுகளின் தொழில்கள் காட்சிப்படுத்தப்பட்டு இருக்கும். அதாவது, நாடுகள் உருவாக்கிய, முன்னேற்றம் கண்ட தொழில்கள், தொழிற் கருவிகள் போன்றவற்றை ஒரே இடத்தில் காட்சியாக வைத்திருப்பர்.

டேவிட் : பல நாடுகளின் தொழில்கள், தொழிற்கருவிகள் ஒரே இடத்திலா? கேட்கவே வியப்பாக உள்ளது.

தருண் : நீங்கள் எங்கு நடைபெற்ற கண்காட்சிக்குச் சென்று வந்தீர்கள்?

ஆசிரியர் : நான், துபாயில் நடைபெற்ற உலகத் தொழில் கண்காட்சிக்குச் சென்று வந்தேன் தருண்.

ஏஞ்சலின் : கண்காட்சி எத்தனை நாள்கள் நடைபெற்றன?



ஆசிரியர் : நாள்கள் இல்லை ஏஞ்சலின். மாதக்கணக்கில், ஆண்டுக் கணக்கில் தொழில் கண்காட்சிகள் நடைபெறும். நான் சென்று வந்த கண்காட்சி 6 மாதம் நடைபெற்றது. அதாவது, 2021 அக்டோபர் 1 முதல் 2022 மார்ச் 31வரை நடைபெற்றது.

நிலவன் : அப்படியா? மாதக்கணக்கிலா நடைபெற்றது?

ஆசிரியர் : ஆம் நிலவன். மற்றக் கண்காட்சிகளில் ஒரு கடை சில அடி அகலத்தில் வைக்கப்பட்டிருக்கும். ஆனால், இங்கு ஒவ்வொரு நாடும் பல ஏக்கர் பரப்பளவில் கண்காட்சி அமைத்திருந்தது. ஒரு நாட்டின் தொழில் வளர்ச்சி முழுவதையும் காட்சிப்படுத்த வேண்டும் அல்லவா?

சங்கமித்ரா : அடேங்கப்பா. . . எவ்வளவு பெரிய கண்காட்சி! நீங்கள் சென்று வந்த கண்காட்சியின் சிறப்புகளைக் கூறுங்கள்.

ஆசிரியர் : “மனங்களை இணைத்து, எதிர்காலத்தை உருவாக்குதல்” என்ற மையப் பொருளுடன் இது நடைபெற்றது. இதில் உலகம் முழுவதிலும் உள்ள தொழில்நுட்ப முன்னேற்றங்கள் காட்சிப்படுத்தப்பட்டன.

ஏஞ்சலின் : ஒரு நாடு எவற்றையெல்லாம் காட்சிப்படுத்தியிருந்தது?

**ஆசிரியர் :** மருத்துவம், சுற்றுலா, கட்டடம், வேளாண்மை, உணவு, உடை, மின்னணு சாதனங்கள், தொழில்நுட்பம் போன்ற பல்வேறு துறை சார்ந்த இயந்திரங்கள் மற்றும் அவற்றின் வடிவமைப்பு போன்றவை இடம்பெற்றிருந்தன.

**வர்ஷிதா :** தொழில் கண்காட்சிகள் ஏன் நடத்தப்படுகின்றன? இதனால் என்ன பயன்?

**ஆசிரியர் :** மிக நல்ல கேள்வி வர்ஷிதா. பல்வேறு நாட்டினர், தங்கள் உழைப்பாலும் அறிவாலும் உருவாக்கிய பொருள்களைக் காட்சிப்படுத்துவர். அவை குறித்த தகவல்கள் அரங்குகளில் திரையிடப்படும். பல்வகைத் தொழில்நுட்பங்கள் உலகிற்கு அறிமுகப்படுத்தப்படும். ஒவ்வொரு நாட்டினரும் தங்கள் நாட்டிற்கான முதலீடுகளை ஈர்க்கும் விதமாகப் புதிய வழிகளில் அரங்குகளை அமைப்பர். அதனைக் காண வரும் ...

**வர்ஷிதா :** புதிதாகத் தொழில் தொடங்கும் எண்ணம் உடையவர்களுக்கு, இது ஒரு நல்ல வாய்ப்பை ஏற்படுத்தித் தரும். அப்படித்தானே.

**ஆசிரியர் :** அப்படியேதான் வர்ஷிதா. நன்றாகப் புரிந்துகொண்டாய். தொழில் முன்னேற்றம், நாட்டை முன்னேற்றும். உலகத்தொழில் கண்காட்சி ஏன் என்பது அனைவருக்கும் புரிந்ததா?

**மாணவர்கள் :** நன்றாகப் புரிந்தது. நாங்களே கண்காட்சிக்குச் சென்று வந்ததுபோல் இருந்தது.

**ஆசிரியர் :** மகிழ்ச்சி!

## பொருள் அறிவோம்

1. பதப்படுத்துதல் - கெட்டுப்போகாமல் பாதுகாத்தல்
2. தொழிற்கருவி - தொழிலுக்குப் பயன்படுத்தும் பொருட்கள்
3. காட்சிப்படுத்துதல் - அனைவரும் பார்க்கும்படி வைத்தல்
4. ஈர்க்கும் - கவரும்
5. எண்ணம் - சிந்தனை

## பயிற்சிகள்

### (அ) கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிக்க.

1. கண்காட்சி என்றால் என்ன?
2. ஆசிரியர் எந்தக் கண்காட்சிக்குச் சென்று வந்தார்?
3. துபாயில் நடைபெற்ற உலகத்தொழில் கண்காட்சியின் மையப்பொருள் என்ன?

### (ஆ) சொல்லுக்கு ஏற்ற பொருளைப் பொருத்துக.

1. வேளாண்மை - அ) கவரும்
2. கேள்வி - ஆ) சிந்தனை
3. ஈர்க்கும் - இ) வினா
4. எண்ணம் - ஈ) உழவு


**(இ) கோடிட்ட இடத்தில் உரிய சொல்லை நிரப்புக.**

(முதலீட்டை, துபாய், மனங்களை, ஆறு)

1. உலகத்தொழில் கண்காட்சி நடைபெற்ற இடம் ______________.
2. உலகத்தொழில் கண்காட்சி ______________ மாதங்கள் நடைபெற்றது.
3. உலகத்தொழில் கண்காட்சியின் மையப்பொருள் ______________ இணைத்து எதிர்காலத்தை உருவாக்குதலாகும்.
4. ஒவ்வொரு நாட்டின் அரங்கும் ______________ ஈர்க்கும் விதத்தில் அமைந்திருந்தது.

## 12.3 தெரிந்துகொள்வோம்

### மரபுத்தொடர்கள்



அப்பா : வர்ஷா! உன்னைப் படிக்கச் சொன்னேன் அல்லவா? எங்கே **கம்பி நீட்டுகிறாய்**?

வர்ஷா : நான் வேகமாகப் படித்துவிட்டேன் அப்பா.

அப்பா : வேகமாகப் படித்துவிட்டாயா? **நுனிப்புல் மேயக்கூடாது** வர்ஷா.

வர்ஷா : அப்படியெல்லாம் இல்லை அப்பா. பாடங்களை நான் மனப்பாடம் செய்துவிட்டேன்.

அப்பா : வெறும் மனப்பாடம் செய்தல் கூடாது வர்ஷா. பொருள் அறிந்து படிக்க வேண்டும். அப்படிப் படிப்பதே உன் வாழ்வின் வெற்றிக்குக் **கைகொடுக்கும்**.

வர்ஷா : சரி அப்பா! அப்படியே படிக்கிறேன்.

| | | |
|---|---|---|
| கம்பி நீட்டுதல் | - | யாருக்கும் தெரியாமல் நழுவுதல் |
| நுனிப்புல் மேய்தல் | - | மேலோட்டமாகப் படித்தல் |
| கைகொடுக்கும் | - | உதவும் |

## பயிற்சிகள்

**(அ) பொருளுக்கு ஏற்ற மரபுத் தொடரை இணைக்க.**

| | | |
|---|---|---|
| தக்க நேரத்தில் உதவி செய்தல் | - | கம்பி நீட்டுதல் |
| யாருக்கும் தெரியாமல் நழுவுதல் | - | நுனிப்புல் மேய்தல் |
| மேலோட்டமாகப் படித்தல் | - | கைகொடுத்தல் |

**(ஆ) சூழலுக்கு ஏற்ற மரபுத் தொடரை எழுதுக.**

**(நுனிப்புல் மேய்தல், கம்பி நீட்டுதல், கைகொடுத்தல்)**



எழில் – மதி ஏன் வினாடி வினாவில் வெற்றி பெறவில்லை?

பிரபா – பாடங்களை மேலோட்டமாகப் படித்தால், வெற்றிபெறுவது கடினம்தானே!



எழில் – நேற்று நான் நூலகத்திற்குச் செல்லும்போது உன்னைப் பார்க்கவே இல்லையே.

பிரபா – ஆமாம். வருவதாகக் கூறிவிட்டு யாருக்கும் தெரியாமல் திரைப்படம் பார்க்கச் சென்றுவிட்டேன்.



எழில் – பிரபா! இதுவரை என் வீட்டிற்கு நீ வந்ததே இல்லை. ஆனால், எப்படி மிகச்சரியாக வந்தாய்?

பிரபா – முன்பு நீ கூறிய அடையாளங்கள், எனக்குத் தக்க நேரத்தில் உதவின எழில்.

## தகவல் துளி

உலக வர்த்தக அமைப்பானது (WTO), ஒரு சர்வதேச நிறுவனம் ஆகும். இது, 1995ஆம் ஆண்டு ஜனவரி 1 முதல் செயல்படத் தொடங்கியது. இதில் பங்குபெறும் நாடுகளிடையே நிகழும் வணிகத்தை வணிக உடன்பாடுகள், உலக வர்த்தக மாநாடுகள், பேச்சு வார்த்தை மூலம் முறைப்படுத்துகிறது. இந்நிறுவனத்தின் தலைமைச் செயலகம் சுவிட்சர்லாந்து நாட்டிலுள்ள ஜெனீவா, நகரத்தில் உள்ளது.




## 12.4 மொழியோடு விளையாடுவோம்

**படங்களைப் பார்த்து இரு பொருள் தரும் ஒரு சொல்லை எழுதுக.**



பார்



















## 12.5 கேட்டல் கருத்தறிதல்

### திட்டமிட்டுச் செயல்படுவோம்

மெர்லின் மகன்களுடன் வாழ்ந்து வந்தாள். மூத்த மகன் விறகு விற்பனை செய்தான். இளைய மகன் ஐஸ்கீரிம் விற்பனை செய்தான். மழைக்காலத்தில் இளைய மகனின் ஐஸ்கீரிம் விற்பனை குறைந்தது. கோடைக் காலத்தில் மூத்த மகனின் விறகு விற்பனை குறைந்தது. இவர்களின் வருமான ஏற்ற இறக்கம் குறித்து மெர்லின் வருந்தினார்.

மழைக்காலம் வந்தது. மெர்லின், தம் மகன்களை அழைத்தார். இருவரையும் விறகு விற்க அனுப்பினார். அதைப் போலவே கோடைக்காலத்தில் ஐஸ்கீரிம் விற்க, இருவரையும் அனுப்பினார். அவர்களின் வருமானம் பெருகியது. இதற்குத் தாயின், சரியான திட்டமிடலே காரணம் ஆகும்.

### வினாக்கள்

1. மெர்லினுக்கு எத்தனை மகன்கள்?
2. மூத்த மகன் என்ன விற்பனை செய்தான்?
3. இளைய மகன் என்ன விற்பனை செய்தான்?
4. மெர்லின் மகன்களின் வருமான ஏற்ற இறக்கத்திற்குக் காரணம் என்ன?
5. மெர்லினின் சரியான திட்டமிடலால் நிகழ்ந்தது என்ன?

## 12.6 படம் பார்த்துக் கருத்து கூறல்



## 12.7 செந்தமிழ்ச்செல்வம்

### திருக்குறள்

பொருள்கருவி காலம் வினைஇடனொடு ஐந்தும்
இருள்தீர எண்ணிச் செயல்.

(குறள் 675)
-திருவள்ளுவர்

(இருள் - அறியாமை; எண்ணி - ஆலோசித்தல்)

பொருள்:

ஒரு செயலைத் தொடங்குவதற்கு முன்பு வேண்டிய பொருள், தகுந்த கருவி, காலம், பொருத்தமான செயல், ஏற்ற இடம் ஆகிய ஐந்தையும் ஐயம் நீங்க ஆராய வேண்டும், அதன்பின்பு அச்செயலைச் செய்யவேண்டும்.

**பழமொழி**

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

### சொல்வதைக் கேட்டு எழுதுக

உலகத்தொழில் கண்காட்சி துபாயில் நடைபெற்றது. அதில், பல நாடுகள் பங்குபெற்றன. அவை, தங்களின் தொழில்நுட்ப முன்னேற்றங்களைக் காட்சிப்படுத்தின.

### சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக

**எ.கா. முதலீடு**

நதியா, புதிய தொழில் தொடங்க முதலீடு செய்தாள்.

1. சுற்றுலா
2. தொழில்கள்
3. விடுமுறை

## 12.8 மொழிபெயர்ப்போம்

1. தொழில்கள் காட்சிப்படுத்தப்படுவது தொழில் கண்காட்சி ஆகும்.

_______________________________________________

2. வேளாண்மை அடிப்படையான தொழில் ஆகும்.

_______________________________________________

## 12.9 அறிந்துகொள்வோம்

| | | | |
|---|---|---|---|
| 1. | கண்காட்சி | - | Fair/Exhibition/Show |
| 2. | தொழில் கருவிகள் | - | Industrial tools |
| 3. | அகலம் | - | Width |
| 4. | ஏக்கர் | - | Acres |
| 5. | வீட்டுப்பயன்பாட்டுப் பொருட்கள் கண்காட்சி | - | Home Appliances Exhibition |
| 6. | பரப்பளவு | - | Areas |
| 7. | தொழில்நுட்பம் | - | Technology |
| 8. | விற்பனை | - | Sale |
| 9. | மின்னணு சாதனங்கள் | - | Electronic Devices |
| 10. | உலகத்தொழில் கண்காட்சி | - | World Business Exhibition |
| 11. | இயந்திரம் | - | Engine |
| 12. | பதப்படுத்துதல் | - | Preservative |
| 13. | முதலீடு | - | Investment |
| 14. | மருத்துவர் | - | Doctor |
| 15. | அரங்குகள் | - | Stalls |

## 12.10 படைப்பாற்றல் வளர்ப்போம்

புத்தகக் கண்காட்சிக்குத் தகுந்த விளம்பரச்சுவரொட்டி உருவாக்குங்கள்.


## 12.11 செயல் திட்டம்

துபாயில் நடைபெற்ற 'உலகத்தொழில் கண்காட்சி' குறித்த தகவல்களையும் புகைப்படங்களையும் இணையத்திலிருந்து திரட்டித் தொகுப்பேடு ஒன்றை உருவாக்குக.

## 13.1 பேசுவோம்

பாடம் 13







### கலந்துரையாடுவோம்

நீங்கள் அறிந்த தற்காப்புக்கலை ஒன்றைப் பற்றி வகுப்பில் கலந்துரையாடுக.

## 13.2 படிப்போம்

### சிலம்பாட்டம்

**நேர்காணல்**

**பங்கேற்பவர்: சிலம்ப ஆசான் சின்னத்தம்பி**

**நேர்காணல் செய்பவர்: அகிலன்**

அகிலன் : ஐயா, வணக்கம்.

ஆசான் : வாங்க தம்பி... வணக்கம்.

அகிலன் : ஐயா! என் பெயர் அகிலன். சிறந்த சிலம்பாட்டக் கலைஞரான உங்களைச் சந்திப்பதில் மகிழ்ச்சி. எங்கள் பள்ளி ஆண்டுவிழா மலருக்காக நான் உங்களை நேர்காணல் செய்ய வந்துள்ளேன்.

ஆசான் : அப்படியா...! மிக்க மகிழ்ச்சி!

அகிலன் : ஐயா, சிலம்பாட்டம் பற்றி விளக்கிக் கூற முடியுமா?

ஆசான் : தம்பி ! சிலம்பாட்டம், தமிழக நாட்டுப்புற மக்களின் வீர விளையாட்டு. சிறந்த தற்காப்புக் கலையும்கூட.

அகிலன் : அப்படியா, ஐயா? இந்தச் சிலம்பாட்டம் எப்படித் தோன்றியது?


ஆசான் : தம்பி, தொடக்கத்திலே கொடிய விலங்குகளிடமிருந்து மக்கள் தங்களைப் பாதுகாத்துக்கொள்ளக் கையில் கம்பு வைத்திருந்தனர். கம்பை ஓய்வு நேரங்களில் சுழற்றிப் பார்த்தனர். அதுவே, சிலம்பாட்டக் கலையின் தோற்றம் என்று கூறலாம். அக்காலத்தில் சிலம்பம் சிறந்த போர்க்கலையாகவும் விளங்கியது.

அகிலன் : ஓ! இதனை ஏன் சிலம்பாட்டம் என்று கூறுகிறோம்?

ஆசான் : 'சிலம்பு' என்பதற்கு 'ஒலித்தல்' என்று பொருள். கம்பை மாற்றி மாற்றிச் சுழற்றி அடிப்பதால் ஓசை வரும். அதனால், இதைச் சிலம்பம், சிலம்பாட்டம் என்று சொல்லுவார்கள்.

அகிலன் : அப்படியா! எந்தக் கம்பைச் சிலம்பாட்டத்திற்குப் பயன்படுத்த வேண்டும்?

ஆசான் : இதற்கு, மூங்கில் இனத்தைச் சேர்ந்த சிறுவாரைக் கம்பைப் பயன்படுத்த வேண்டும். அந்தக் கம்பு, விளையாடுவோரின் நெற்றி உயரத்திற்கு இருக்க வேண்டும். உயரம் அதிகமாகவோ, குறைவாகவோ இருக்கக் கூடாது.





அகிலன் : அப்போ வேறு கம்பைப் பயன்படுத்தக் கூடாதா, ஐயா?

ஆசான் : சிலர் பிரம்பைப் பயன்படுத்துகின்றனர் தம்பி. ஆனால், அது வளையும் தன்மையுடையது. எதிரிகளைச் சரியாகக் குறிவைக்க முடியாது. மேலும், அடிதாங்கும்போது நார் நாராகப் பிரிந்துவிடும்.

அகிலன் : ஓ... அப்படியெனில் மூங்கில் கம்புதான் ஏற்றது. சிலம்பாட்டத்துக்கு வேறு பெயர்கள் உண்டா?

ஆசான் : ம்ம் . . . இருக்கு தம்பி. கம்பு சுழற்றுதல், சிலம்பம் ஆடுதல், சிலம்பம், சிலம்பொலி ஆட்டம், சிலம்ப விளையாட்டு, தடியடி என்றெல்லாம் வேறு பெயர்கள் சொல்வதும் உண்டு.

அகிலன் : ஐயா, சிலம்பாட்டத்தை எப்படிக் கற்றுக்கொள்ள வேண்டும்? எத்தனை நாளில் கற்றுக்கொள்ளலாம்?

ஆசான் : இதை முறையாகக் கற்கவேண்டும் தம்பி. குறைந்தது, 6 மாதமாவது தொடர் பயிற்சி வேண்டும்.

அகிலன் : ஐயா! சிலம்பம் கற்றுக்கொள்வதால் என்னென்ன பயன்கள் அடைகிறோம்?

ஆசான் : சிலம்பம் தற்காப்புக்கலை என்பதால், அதனைக் கற்றால், முழு உடல் வலிமையுடன் மன வலிமையும் பெற்றுப் பாதுகாப்புடன் வாழலாம்.

அகிலன் : சிறப்பு. சிலம்பாட்டம் எங்கெல்லாம் கற்றுக் கொடுக்கப்படுகிறது?

**ஆசான்** : இந்தியாவில், தமிழ்நாட்டிலும் கேரளாவிலும் சிலம்பம் கற்றுக் கொடுக்கப்படுகிறது. மேலும், இலங்கை, மலேசியா, பிரான்சு, கனடா முதலிய நாடுகளிலும் சிலம்பத்தைக் கற்றுக் கொடுக்கின்றனர். தமிழ்நாடு அரசு சிலம்பாட்டத்தைப் பள்ளி விளையாட்டாக ஏற்றுக்கொண்டுள்ளது. மேலும் வேலைவாய்ப்பில் தமிழ்நாடு அரசின் 3% இடஒதுக்கீடு பெறும் விளையாட்டுகளுள் சிலம்பமும் ஒன்று.



**அகிலன்** : மிகச்சிறப்பு. உங்களை நேர்காணல் செய்தது மிகவும் பயனுள்ளதாக இருந்தது. சிலம்பம் கற்றுக்கொள்ள எனக்கும் விருப்பமாக உள்ளது.

**ஆசான்** : நல்லது தம்பி. மிக்க மகிழ்ச்சி.

## பொருள் அறிவோம்

1. ஆசான் – ஆசிரியர்
2. தற்காப்பு – தன்னைத்தானே பாதுகாத்தல்
3. நேர்காணல் – கேள்விகளைக் கேட்டுப் பதில்களைப் பெறும் ஓர் உரையாடல்
4. மூங்கில் – புல் வகைகளுள் ஒன்று
5. பயிற்சி – தெரியாத ஒன்றைக் கற்றுக்கொள்ளத் தொடர்ந்து பழகுதல்

## பயிற்சிகள்

**(அ) கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிக்க.**

1. அகிலன் யாரை நேர்காணல் செய்தான்?
2. சிலம்பாட்டத்திற்கு ஏற்ற கம்பு எது?
3. சிலம்பக்கலையின் தோற்றம் குறித்து எழுதுக.
4. சிலம்பக்கலை எந்தெந்த நாடுகளில் கற்றுக்கொடுக்கப்படுகிறது?
5. சிலம்பம் கற்றுக்கொள்வதால் ஏற்படும் பயன் யாது?

**(ஆ) சரியான சொல்லைத் தேர்ந்தெடுத்து நிரப்புக.**
**(மூங்கில், சிலம்பாட்டம், ஒலித்தல், மூன்று)**

1. 'சிலம்பு' என்ற சொல்லுக்கு ________ என்று பொருள்.
2. தமிழரின் தற்காப்புக் கலைகளுள் ஒன்று ________.
3. சிலம்பாட்டத்திற்கு ஏற்றது ________ கம்பு.
4. விளையாட்டு வீரர்களுக்குத் தமிழ்நாடு அரசு வேலைவாய்ப்பில் ________ சதவீதம் இடஒதுக்கீடு அளிக்கிறது.

**(இ) படத்திற்குப் பொருந்தும் தற்காப்புக்கலையின் பெயரைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**
**(குத்துச்சண்டை, மல்யுத்தம், ஜூடோ, கராத்தே, சிலம்பம், குங்பூ)**


________


________


________



________



________

## 13.3 தெரிந்துகொள்வோம்

### ஒலி வேறுபாட்டுச் சொற்கள் (ல, ழ, ள)










பல்லி




பள்ளி



மலை



மழை



ஆல் (ஆலமரம்)



ஆழ் (ஆழமான)



ஆள் (மனிதன்)




பறவையின் அலகு



அழகு மயில்



அளகு (கோழி)



நூல் இழை



உடல் இளைத்தல்



வாழை இலை



நீர் வாழ் உயிரினம்



போர் வாள்



விலங்கின் வால்

## பயிற்சிகள்

(அ) படத்திற்கு ஏற்ற சரியான சொல்லைக் கண்டறிந்து (✓) இடுக.



- ☐ பழம்
- ☐ பலம்




- ☐ பல்லி
- ☐ பள்ளி



- ☐ அல்லி
- ☐ அள்ளி



- ☐ புளி
- ☐ புலி



- ☐ விளக்கு
- ☐ விலக்கு


**(ஆ) பொருத்தமான எழுத்தைக் கொண்டு நிரப்புக.**

1. இனியா வா__ப்பழம் சாப்பிட்டாள். (லை/ழை/ளை)
2. நாய்க்குட்டியின் வா__வளைந்து இருக்கிறது. (ல்/ழ்/ள்)
3. இருட்டில் வி__க்கு ஒளிர்ந்தது. (ல/ழ/ள)
4. ராபர்ட் பு__வெளியில் நடந்தான். (ல்/ழ்/ள்)
5. தண்ணீருக்குள் தவ__ தாவிச்சென்றது. (லை/ழை/ளை)

**(இ) படத்திற்குப் பொருத்தமான சொல்லைத் தேர்ந்தெடுத்து நிரப்புக.**

(பழம், வழியில், கலைந்து, பலம், வளைந்து, களைத்து, விலை, வலையில், விளைவது, வலியால்)





1. யாழினி உண்பது ____________________

2. யானையின் ______________ தும்பிக்கை





3. புத்தகங்கள் ______________ கிடந்தன

4. மீனா ______________ இருந்தாள்.



5. தென்னைமரம் ____________ உள்ளது.




6. மீன்கள் ____________ உள்ளன.



7. கீழே விழுந்து ____________ துடித்தான்



8. பள்ளி செல்லும் ____________ ஆறு உள்ளது.





9. சட்டையின் ____________ என்ன?







10. வயலில் ____________ பயிர்

## 13.4 மொழியோடு விளையாடுவோம்

கீழ்க்காணும் படக்குறிப்பைக் கொண்டு சொல் உருவாக்குக.

|  |  |  |  |  |
|---|---|---|---|---|
| ல | ம் | சி | ம் | ப |

| | |
|---|---|
|  | <u>சில</u> |
|  | ______________________ |
|  | ______________________ |
|  | ______________________ |
|  | ______________________ |

## கருத்து விளக்கப்படம்

கீழ்க்காணும் விளம்பரத்திலுள்ள செய்தியைப் படித்து, வினாக்களுக்கு விடை எழுதுக.

# உலக சிலம்பச் சங்கம்

### உலகச் சிலம்பச் செய்தி



தமிழர்கள் வாழும் உலக நாடுகளில் "உலகச் சிலம்ப மாநாடு" நடைபெற உள்ளது. பல்வேறு சிலம்ப ஆர்வலர்கள், சங்கத்தலைவர்கள் சிறப்பிக்க உள்ளனர். ஆசிய, பசிபிக் சிலம்பப் போட்டி நடைபெற உள்ளது. விரைவில் நடைபெறும் நாள் அறிவிக்கப்படும். ஆர்வமுள்ள அனைத்துச் சங்கங்களும் பங்குபெறலாம்.

தொடர்புக்குக் கீழ்க்காணும்
இணைய முகவரியைத் தொடர்புகொள்க.

**www.worldsilambam.com**

### வினாக்கள்

1. செய்தி எதனைப் பற்றியது?
2. செய்தியை வெளியிட்டோர் யார்?
3. யார் யார் மாநாட்டைச் சிறப்பிக்க உள்ளனர்?
4. மாநாட்டில் நடைபெற இருக்கும் போட்டி யாது?
5. மாநாட்டிற்கான நாள் செய்தியில் இடம்பெற்றுள்ளதா?

## தகவல் துளி

'வளரி' தென் தமிழகத்தின் சிறந்த தற்காப்பு போர்க்கருவிகளுள் ஒன்று. இக்கருவியை யார் எறிகிறாரோ அவரிடமே அது மீண்டும் திரும்பி வரும். இஃது, எதிரியை நிலைகுலைய வைக்கும் வல்லமை உடையது. மரக்கட்டை, உலோகம், தந்தம் முதலியவற்றைப் பயன்படுத்தி வளரிகள் செய்யப்படுகின்றன. வளரி, செல்ல வேண்டிய தூரத்தைக் கணக்கிட்டு அதற்குரிய எடையுடன் வடிவமைக்கப்படுகிறது.



## 13.5 கேட்டல் கருத்தறிதல்

### மனத்தை ஒருமுகப்படுத்துவோம்

துறவி ஒருவர் ஆற்றுப்பாலத்தில் நடந்து சென்றார். அப்போது இளைஞர்கள் சிலர், ஆற்றில் முட்டை ஓடுகளை மிதக்கவிட்டனர். பின், அதனைப் பாலத்தின் மேல் நின்று சுட்டனர். சரியாகச் சுடுபவர்களுக்குப் பரிசு என்றனர். ஆனால், எவராலும் சுட முடியவில்லை. அதனைக் கண்டு துறவி புன்னகை செய்தார். இதனை இளைஞர் ஒருவர் கண்டார். அவர், துறவியிடம் 'சிரிப்பது எளிது சுடுவது கடினம்' என்றார்.

உடனே துறவி, துப்பாக்கியைப் பெற்றார். அனைத்து முட்டை ஓடுகளையும் குறி தவறாமல் சுட்டார். அதனைக் கண்டு இளைஞர்கள் வியந்தனர். துறவியைப் பார்த்து, 'குறிபார்த்துச் சுடுவதற்கு ஏதேனும் பயிற்சி பெற்றுள்ளீர்களா?' என்றனர். அதற்குத் துறவி, 'இல்லை. நான் முதல்முறையாகத் துப்பாக்கியால் சுடுகிறேன். உங்களுக்குப் பரிசுதான் இலக்கு. ஆனால் எனக்கு முட்டை ஓடுகளைச் சரியாகச் சுடுவதுதான் இலக்கு. அதனால்தான் என்னால் சுட முடிந்தது' என்றார்.

**வினாக்கள்**

1. ஆற்றுப் பாலத்தில் நடந்து சென்றவர் யார்?
2. இளைஞர்கள் என்ன செய்து கொண்டு இருந்தனர்?
3. துறவி ஏன் புன்னகை செய்தார்?
4. இளைஞர்கள் துறவியிடம் என்ன கூறினர்?
5. துறவியால் மட்டும் எவ்வாறு சுட முடிந்தது?

## 13.6 படம் பார்த்துக் கருத்து கூறல்



## 13.7 செந்தமிழ்ச்செல்வம்

### திருமந்திரம்

உடம்பார் அழியில் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே"

- பாடல் 724
திருமூலர்

(மெய் - உண்மை; உபாயம் - வழிமுறை; உடம்பு - உடல்)

**பொருள்:**

உடற்பயிற்சிகள் செய்து, உடலைப் பாதுகாத்தல் வேண்டும். அவ்வாறின்றி உடல் அழிந்தால், உடலில் உள்ள உயிரும் அழியும். அத்தகையோர் உறுதியாக, உண்மை ஞானத்தைப் பெறவும் முடியாது. ஆகவே, உடம்பைச் சீராக வளர்க்கும் வழிமுறைகளை அறிந்து உடலை வளர்ப்போம். உடலில் வாழும் உயிரையும் பாதுகாப்போம்.

**பழமொழி**

பதறாத காரியம் சிதறாது

## சொல்வதைக் கேட்டு எழுதுக

1. உடற்பயிற்சி உடலுக்கு நல்லது.

2. தற்காப்புக் கலையைக் கற்றல் வேண்டும்.

3. மாலையில் விளையாடுதல் வேண்டும்.

## சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக

எ.கா. பயிற்சி

மட்டைப்பந்து விளையாட்டில் வெற்றிபெறப் பயிற்சி செய்தல் வேண்டும்.

1. பள்ளி

2. பாதுகாப்பு

3. உடல் வலிமை

## 13.8 மொழிபெயர்ப்போம்

1. Silambam is a martial art.

______________________________

2. Learning martial arts will increase physical and mental strength.

______________________________

______________________________

## 13.9 அறிந்துகொள்வோம்

| | | |
|---|---|---|
| 1. ஆண்டுவிழா | - | Anniversary |
| 2. நெற்றி | - | Forehead |
| 3. ஆசான் | - | Teacher |
| 4. குறிவைத்தல் | - | Targeting |
| 5. நேர்காணல் | - | Interview |
| 6. விழாமலர் | - | Souvenir |
| 7. தமிழ்நாடு அரசு | - | Government of Tamil Nadu |
| 8. நாட்டுப்புறக்கலைகள் | - | Folk Arts |
| 9. அங்கீகாரம் | - | Approval |
| 10. வடிகால் | - | Outlet |

| | | | |
|---|---|---|---|
| 11. | இடஒதுக்கீடு | - | Reservation |
| 12. | தற்காப்புக்கலைகள் | - | Martial Arts |
| 13. | மூங்கில் | - | Bamboo |

## 13.10 படைப்பாற்றல் வளர்ப்போம்

நீங்கள் கற்றுக்கொள்ள விரும்பும் தற்காப்புக் கலை குறித்து ஐந்து வரி எழுதுக.

## 13.11 செயல் திட்டம்

தமிழர்களின் வீர விளையாட்டுகள் பற்றி, இணையத்தில் கண்டறிந்து படத்தொகுப்பு உருவாக்குக


## 14.1 பேசுவோம்

# பாடம் 14









## கலந்துரையாடுவோம்

உங்களுக்குப் பிடித்த ஒரு பொருளை உருவாக்கும்போது ஏற்படும் மகிழ்ச்சியை வகுப்பில் பகிர்ந்துகொள்க.

## 14.2 படிப்போம்

### சிலை சொல்லும் கதை

லிஸி தன் பெற்றோருடன் லாஸ் ஏஞ்சல்ஸில் வசிக்கிறாள். அவளுடைய பிறந்தநாளுக்காகத் தாத்தாவும் பாட்டியும் வந்திருந்தனர். பிறந்தநாளன்று அனைவரும் அவளை வாழ்த்தி மகிழ்ந்தனர். நண்பர்களும் உறவினர்களும் பரிசுகளைத் தந்தனர். லிஸி அவர்களுக்கு நன்றி தெரிவித்தாள்.

இரவு தூங்குவதற்குமுன், தனக்கு வந்த பரிசுகளை ஒவ்வொன்றாகத் திறந்து பார்த்தாள். அவளுக்குப் பிடித்த பொம்மைகளும் விளையாட்டுப் பொருள்களும் இருந்தன. தன் தாத்தா தந்த பெட்டியைத் திறந்ததும் மிகவும் வியப்படைந்தாள். அப்போது, தாத்தா அவள் அருகில் வந்தார்.

"தாத்தா, நீங்கள் தந்த பரிசுப் பொருள், மிகவும் உறுதியாகவும் எடை மிகுந்தும் காணப்படுகின்றதே. என்ன பரிசு இது?" என்று கேட்டாள் லிஸி.

"இதனைச் சிற்பம் என்று கூறுவார்கள். இஃது உலோகத்தால் செய்யப்பட்டுள்ளது. அதனால்தான் எடை மிகுந்து காணப்படுகிறது." என்றார் தாத்தா.

"இந்தச் சிற்பத்தில் நிறைய உருவங்கள் உள்ளன. நான் இதுவரை பார்த்தது இல்லை" என்றாள் லிஸி.


"இந்தச் சிற்பங்களை நேரில் பார்த்தால் எப்படி இருக்கும்?" என்றார் தாத்தா.

"என்ன, இவற்றை நேரில் பார்க்கமுடியுமா? அப்படியெனில் இவை எங்குள்ளன? என்னை அங்கு அழைத்துச்செல்லுங்கள்" என்றாள் லிஸி.

"கட்டாயம் அழைத்துச் செல்கிறேன். நான் அடுத்த வாரம் தமிழ்நாட்டிற்குச் செல்கின்றேன். அங்குதானே புகழ்பெற்ற மாமல்லபுரம் உள்ளது. அங்குச் சென்றால் நீ இந்தச் சிற்பங்களைக் காணலாம்" என்றார் தாத்தா.

"நானும் உங்களுடன் வருகிறேன், எனக்கு இவற்றை நேரில் பார்க்க ஆவலாக உள்ளது" என்றாள் லிஸி.

லிஸி, தான் விரும்பியபடியே தன் தாத்தா பாட்டியுடன் தமிழ்நாட்டிற்குச் சென்றாள். அவளை மாமல்லபுரத்திற்குத் தாத்தா அழைத்துச் சென்றார்.



“அங்கு மிகப்பெரிய யானையின் உருவத்தைக் கண்டாள் லிஸி. “தாத்தா, இந்த யானையைப் பாருங்கள். எவ்வளவு பெரிதாக இருக்கிறது. அப்படியே உண்மையான யானைபோல இருக்கிறதே “ என்று வியந்தாள், லிஸி.

“ஆமாம், லிஸி. இதன் சிறப்பு என்ன தெரியுமா? இஃது ஒற்றைக் கல்லில் செதுக்கப்பட்டுள்ளது. பெரிய பாறையில் யானையின் முழு உருவமும் தெரியும்படி எவ்வளவு நுணுக்கமாகச் சிற்பி செதுக்கியுள்ளார் பார்த்தாயா?“ என்று தாத்தா கூறினார். “ஓ! சிற்பத்தைச் செதுக்குபவர் பெயர் சிற்பியா? அவர் செதுக்கியுள்ள இந்த யானைச் சிற்பம் மிக அழகாக இருக்கிறது. தாத்தா, இங்கு வேறு சில சிற்பங்களும் உள்ளன. இவை எப்போது செதுக்கப்பட்டன? என்று கேட்டாள் லிஸி.



ஒற்றைக் கல் யானை

“இவை பல்லவ மன்னர்கள் காலத்தில் செதுக்கப்பட்டன. தமிழர்களின் கலைத்திறனுக்குச் சிறந்த எடுத்துக்காட்டாய் விளங்குகின்றன “ என்றார் தாத்தா.



பஞ்ச பாண்டவர் இரதம்

“தாத்தா, அங்கே பாருங்கள், ஏதோ ஐந்து வண்டி இருப்பதுபோல உள்ளதே, அவற்றின் சக்கரங்கள் கல்லினால் செய்யப்பட்டுள்ளன“ என்று வியப்புடன் கூறினாள் லிஸி.

“நீ இப்போது பார்த்தவை ஓடாத தேர்கள். இவையும் ஒரே கல்லில் செதுக்கப்பட்டுள்ளன. இவற்றைப் பஞ்ச பாண்டவர் இரதங்கள் என்பர் “ என்றார் தாத்தா.

“அப்படியா, தாத்தா!“ என்ற லிஸி அருகில் இருந்த பாறைகள் இரண்டைப் பார்த்தாள். அவற்றில் நூற்றுக்குமேற்பட்ட சிற்பங்கள் இருந்தன. “தாத்தா, இங்கே பாருங்கள். நிறைய சிற்பங்கள் உள்ளன “ என்று வியப்புடன் கூறினாள் லிஸி.

“லிஸி, இவை புடைப்புச் சிற்பங்கள். நாம் காணும் வகையில் பாறையில் புடைத்துக் காணப்படுகின்றன.“ என்றார் தாத்தா.

அச்சிற்பங்களின் அருகில் சென்று, அவற்றைத் தொட்டுப் பார்த்தாள் லிஸி. “தாத்தா, இங்குப் பாருங்கள். ஒருவர் ஒற்றைக்காலில் நிற்கிறார். அருகில் அருவியிலிருந்து நீர் கொட்டுகிறது. நீரில் பறவைகள் நீந்துகின்றன. அங்கு மான், புலி, சிங்கம், குரங்கு ஆகியவற்றின் சிற்பங்கள் உள்ளன! என்று கூறினாள் லிஸி.



புடைப்புச் சிற்பங்கள்

"ஆமாம், லிஸி. அதோ பார். கடற்கரைக் கோவில். இங்கு வருபவர்கள் இதனைப் பார்க்காமல் செல்லமாட்டார்கள். இது, கட்டுமானக் கோவிலுக்கு எடுத்துக்காட்டாக உள்ளது. இதனை உலகப் பாரம்பரியச் சின்னமாக 1984ஆம் ஆண்டு யுனெஸ்கோ அறிவித்துள்ளது" என்றார் தாத்தா.


கடற்கரைக் கோவில்

"மிகவும் சிறப்பு. நீங்கள் கூறுவதைக் கேட்கும்போது எனக்கு வியப்பாக இருக்கிறது தாத்தா" என்றாள் லிஸி.

"இங்குப் பார்க்க வேண்டிய சிற்பக்காட்சிகள் நிறைய இருக்கின்றன. இன்று ஒருநாள் போதாது. மீண்டும் ஒருநாள் இங்கு வருவோம். கண்டு மகிழ்வோம்" என்று தாத்தா கூறியதும் மிகவும் மகிழ்ச்சியுடன் தலையாட்டினாள் லிஸி.

## பொருள் அறிவோம்

1. பரிசு - அன்பளிப்பு
2. ஆவல் - விருப்பம்
3. நுணுக்கமாக – நுட்பமாக
4. இரதங்கள் - தேர்கள்

## பயிற்சிகள்

### அ) விடை காண்போம்

1. லிஸிக்கு வியப்பைத் தந்த பரிசு எது?
2. தமிழ்நாட்டிற்குச் செல்லவேண்டும் என லிஸி ஏன் விரும்பினாள்?
3. லிஸி, புடைப்புச் சிற்பங்களைப் பார்த்து என்ன கூறினாள்?
4. யுனெஸ்கோ அறிவித்துள்ள உலகப் பாரம்பரியச் சின்னம் எது?


### ஆ) கோடிட்ட இடத்தில் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.
**(பல்லவ, தமிழ்நாடு, சிற்பி, லாஸ் ஏஞ்சல்ஸ், கடற்கரைக்கோவில்)**

1. லிஸி தன் பெற்றோருடன் ________________ நகரத்தில் வசிக்கிறாள்.
2. சிற்பங்களைச் செதுக்குபவர் ________________ ஆவார்.
3. யுனெஸ்கோ அறிவித்துள்ள உலகப் பாரம்பரியச் சின்னம் ________________.
4. மாமல்லபுரச் சிற்பங்கள் ________________ மன்னர்கள் காலத்தில் செதுக்கப்பட்டன.
5. மாமல்லபுரச் சிற்பங்கள் அமைந்துள்ள இடம் ________________.

## 14.3 தெரிந்துகொள்வோம்

### தொடர் அமைத்தல்



## பயிற்சிகள்

**(அ) கீழ்க்காணும் படங்களைப் பார்த்துத் தொடர்களை உருவாக்குக.**



கண்ணன் ஏறுகிறான்.

கண்ணன் ஏணியில் ஏறுகிறான்.

கண்ணன் வேகமாக ஏணியில் ஏறுகிறான்.



______________________

______________________

______________________




______________________

______________________

______________________



______________________

______________________

______________________

**(ஆ) கொடுக்கப்பட்ட கட்டங்களிலிருந்து எவையேனும் மூன்று சொல்லைக் கொண்டு பொருளுடைய தொடர்களை உருவாக்குக.**

| | | |
|---|---|---|
| அங்கே | யானைகள் | தேர்கள் |
| இருந்தன | சிற்பங்கள் | நிற்கின்றன |
| காட்டில் | அருகில் | ஓடின |

1. அங்கே யானைகள் நிற்கின்றன.
2. ______________________
3. ______________________
4. ______________________
5. ______________________
6. ______________________

## 14.4 மொழியோடு விளையாடுவோம்

கடுஞ்சண்டை : கண், சண்டை, கடை, சடை

கரும்பலகை : ______________________

______________________

______________________

______________________

பழக்கவழக்கம் : ______________________

______________________

______________________

______________________

பட்டுக்கோட்டை : ______________________

______________________

______________________

______________________

### தகவல் துளி



பசிபிக் கடலில் உள்ள ஒரு தீவு ஈஸ்டர். இத்தீவில் நூற்றுக்கணக்கான முகச்சிற்பங்கள் நடப்பட்டுள்ளன. இதற்கு மோவாய்ச் சிற்பங்கள் என்று பெயர். மேலும் ஏராளமான சிற்பங்கள் படுத்தநிலையில் உள்ளன. எடை அதிகமான இச்சிற்பங்களை எப்படி, எவர் நட்டனர் என்ற குறிப்புகள் ஏதும் இல்லை. இத்தீவு யுனெஸ்கோவால் உலகப் பாரம்பரியக் களமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## 14.5 கேட்டல் கருத்தறிதல்

### சிந்தித்துச் செயல்படு

சிலையூர் என்னும் சிற்றூரில் சிற்பி ஒருவன் இருந்தான். அவன் செய்யும் சிற்பங்கள் உண்மையான பொருள்களைப் போன்றே காட்சி அளிக்கும். வழக்கம்போல, அன்றும் ஒரு சிற்பத்தை அந்தச் சிற்பி செதுக்கிக் கொண்டிருந்தான். அவன் செதுக்கிய சிற்பம் ஒரு புலியினது உருவமாகும். அந்த உருவத்திற்குக் கண்களை அமைத்தால் போதும், அந்தச் சிற்பம் முழுமை பெற்றுவிடும். ஆகவே அந்தச் சிற்பி, புலி உருவத்திற்குக் கண்களை அமைக்கத் தொடங்கினான். அப்போது, அவ்வழியே ஞானி ஒருவர் வந்தார். அவர், சிற்பி செதுக்கும் உருவத்தைக் கண்டார். உடனே, அந்தச் சிற்பியிடம், "ஐயா, அருள்கூர்ந்து அந்தப் புலியின் கண்களைத் திறக்காதீர்கள். அஃது உறங்குவதுபோலச் செதுக்குங்கள்" என்று கூறினார். சிற்பி, காரணம் அறிந்துகொள்ள விரும்பினான். "நீங்கள் செதுக்கும் புலி உருவம் உண்மையான புலியைப்போன்றே உள்ளது. அதனால், அது தூங்குவதுபோல இருக்கட்டுமே" என்றார் ஞானி. ஆனால், அந்தச் சிற்பிக்கு ஞானி கூறிய காரணம் சரியாகப் படவில்லை. தன் கலைத்திறமையைக் கண்டு, ஞானிக்குப் பொறாமை போலும் என்று எண்ணிக்கொண்டான். அதனால், ஞானி கூறியதனைப் பொருட்படுத்தாமல், அந்தச் சிற்பி மீண்டும் தன் வேலையில் கவனம் செலுத்தினான். ஞானி அவ்விடத்தைவிட்டு அகன்றார். சிற்பி, புலி உருவத்திற்குக் கண்களை அமைத்தான். சிற்பம் உயிர் பெற்றது. அடுத்து என்ன நடந்திருக்கும்? நீங்களே ஊகியுங்கள்.

### வினாக்கள்

1. சிற்பி வாழ்ந்த ஊரின் பெயர் என்ன?
2. சிற்பி, சிறந்த கலைத்திறமை கொண்டவன் என்பதை எவ்வரிகள் உணர்த்துகின்றன?
3. சிற்பி செதுக்கிய சிற்பம் எது?
4. ஞானி, சிற்பியிடம் என்ன வேண்டினார்?
5. ஞானியின் அறிவுறுத்தலைப் பொருட்படுத்தாத சிற்பிக்கு நேர்ந்தது என்ன?

## 14.6 படம் பார்த்துக் கருத்து கூறல்



## 14.7 செந்தமிழ்ச் செல்வம்

### நீதிநெறி விளக்கம்

மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்துஞ்சார்
எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார் - செவ்வி
அருமையும் பாரார் அவமதிப்புங் கொள்ளார்
கருமமே கண்ணாயி னார்

பாடல் - 53)
குமரகுருபரர்

மெய் – உடல், துஞ்சார் – தூங்காதவர், அவமதிப்பு – அவமானம், கொள்ளார் – கருதாதவர், கருமம் – செயல்

**பொருள்:**

தாம் எடுத்துகொண்ட செயலை முடிப்பதிலேயே கவனம் கொண்டவர்கள், தங்களுக்கு உடலால் வரும் வருத்ததைக் கவனிக்கமாட்டார்கள். பசியினைப்பற்றி யோசிக்கமாட்டார்கள். உறங்கமாட்டார்கள். யார் தமக்கு தீங்கு செய்தாலும் அதைப் பொருட்படுத்தமாட்டார்கள். காலத்தின் அருமையையும் பார்க்கமாட்டார்கள். பிறர் தங்களை அவமதித்தாலும் கருதமாட்டார்கள்.

**பழமொழி**

பழகப் பழகப் பாலும் புளிக்கும்

## சொல்வதைக் கேட்டு எழுதுக

1. மாமல்லபுரம், தமிழ்நாட்டில் உள்ளது.
2. சிற்பங்களைச் செதுக்குபவர் சிற்பி.
3. நீரில் பறவைகள் நீந்துகின்றன.

## சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக

எ.கா. வியப்பு

மைசூர் அரண்மனையைக் கண்டதும் வியப்பு ஏற்பட்டது.

1. பரிசு
2. சிலைகள்
3. சக்கரம்

## 14.8 மொழிபெயர்ப்போம்

1. சிலைகள் பழங்கால அடையாளங்கள் ஆகும்.
2. சிலைகளைக் கொண்டு வரலாற்றினை அறிய இயலும்.

______________________________________________

______________________________________________

## 14.9 அறிந்துகொள்வோம்

1. பரிசு - Gift
2. சிற்பங்கள் - Sculptures
3. உலோகம் - Metals
4. புடைப்புச் சிற்பம் - Relief Sculpture
5. பாரம்பரியம் - Tradition
6. கட்டுமானம் - Construction
7. சின்னம் - Logo

## 14.10 செயல் திட்டம்

உங்களுக்குப் பிடித்த பொருளின் உருவ அமைப்பைக் களிமண் கொண்டு உருவாக்குக.

## 14.11 படைப்பாற்றல் வளர்ப்போம்

கீழ்க்காணும் படத்திலுள்ள சிற்பத்தினைப் பற்றி ஐந்து வரி எழுதுக.



______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

## மீள்பார்வை

### பயிற்சிகள்

**1. உரிய சொல்லைத் தேர்ந்தெடுத்துத் தொடரை நிரப்புக.**

(கல்விக்கு, புத்தக, வாணிகம், ஒலித்தல், மயிங்கா)

அ. காது கேளாத குழந்தைகளுக்கான நூலகம் உள்ள இடம் ________.

ஆ. மனத்துக்குப் பயிற்சி ________ வாசிப்பு.

இ. இளமைப் பருவம் ________ உரியது.

ஈ. ஒரு பொருளை வாங்குவதும் விற்பதும் ________ எனப்படும்.

உ. சிலம்பம் என்ற சொல்லின் பொருள் ________.

**2. உரிய சொல்லைத் தேர்ந்தெடுத்துத் தொடரை நிரப்புக.**

(சிறுவாரை, தொழில் கண்காட்சி, கடற்கரைக் கோவில், ஏலக்காய், நண்பர்களும்)

அ. பகைவர்களுக்கு இடையில் ________ இருக்கிறார்கள்.

ஆ. தமிழகத்திலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டது ________.

இ. பல தொழில்கள் காட்சிப்படுத்தப்பட்டு இருப்பது ________ ஆகும்.

ஈ. சிலம்பாட்டத்திற்குப் பயன்படும் கம்பு ________.

உ. யுனெஸ்கோ 1984 ஆம் ஆண்டு உலகப் பாரம்பரியச் சின்னமாக அறிவித்த கோவில் ________.

**3. ஒரு சொல் பல பொருள் கண்டறிந்து கோடிட்ட இடத்தை நிரப்புக.**

(படி, ஆறு, மாலை, ஆடி, திங்கள், )

அ. இன்று ________ கிழமை. இரவில் வரும் ________ அழகு.

ஆ. மாடிப் ________ யில் நின்றிருந்த என்னிடம், புத்தகம் ________ என்று அப்பா கூறினார்.

இ. பாலா ________ செல்லும் வழியைக் கடந்து, ________ எண் கொண்ட பேருந்தில் பயணம் செய்தான்.

ஈ. விமலா ________ மாதத்தில் சாமி ________ வழிபட்டாள்.

உ. ராணி பூக்களைத் தொடுத்து ________ செய்து ________ நேரத்தில் விற்றாள்.

## 4. கலைச்சொல்லைத் தேர்ந்தெடுத்துப் பொருத்துக.

அ. மேலாண்மை - 1. Canal

ஆ. அணை - 2. Investment

இ. கால்வாய் - 3. Logo

ஈ. முதலீடு - 4. Management

உ. சின்னம் - 5. Dam

## 5. பல சொல் ஒரு பொருள்

அ. நிலவு - 1. கதிரவன், ஆதவன், பரிதி.

ஆ. சூரியன் - 2. கும்பல், நெரிசல். திரள்.

இ. அம்மா - 3. மதி, திங்கள், சந்திரன்.

ஈ. குழந்தை - 4. அன்னை, தாய், மாதா.

உ. கூட்டம் - 5. மழலை, சேய், பிள்ளை.

## 6. மரபுத்தொடர்கள்

அ. தோள் கொடுத்தல் - 1. நேர்மையாக இருத்தல்

ஆ. உச்சி குளிர்தல் - 2. உறுதுணையாக இருத்தல்

இ. நுனிப்புல் மேய்தல் - 3. மிக்க மகிழ்ச்சி அடைதல்

ஈ. கை கொடுத்தல் - 4. மேலோட்டமாகப் படித்தல்

உ. கை சுத்தம் - 5. தக்க நேரத்தில் உதவுதல்

## 7. பொருத்தமான சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

அ. குரங்கின் ______________ (வாளை/வாலை) மிதித்தான்.

ஆ. சூரியன் ______________ (காளை/காலை) உதிக்கும்.

இ. எறும்பின் ______________ (தலை/தளை) சிறியது.

ஈ. வயலில் நெல் நன்றாக ______________ (விளை/விலை) ந்தது.

உ. ஆற்றின் ______________ (கரை/கறை) அழகு.

## 8. பொருந்தாத ஓசையுடைய சொல்லை வட்டமிடுக.

அ. களை, தழை, மழை, விழை

ஆ. மலை, விலை, தலை, வினை

இ. கூரை, நாரை, பாறை, கோரை

ஈ. மல்லி, பல்லி, பள்ளி, அல்லி

உ. வால், கால், நாள், பால்

## 9. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

அ. ஆசியாவின் பெரிய நூலகங்களுள் ஒன்று.

1. மயிங்கா　　　2. தி லைப்ரரி ஆப் காங்கிரஸ்

3. சரசுவதி மகால் நூலகம்　　　4. அண்ணா நூற்றாண்டு நூலகம்.

ஆ. ஏமாற்றுவதை விடவும் ______________ எவ்வளவோ மேலானது.

1. வெற்றி அடைவது.　　　2. தோல்வி அடைவது

3. மாற்றம் அடைவது.　　　4. சீர் அடைவது.

இ. Presevation என்னும் சொல்லின் தமிழ்சொல்.

1. குணப்படுத்தல்　　　2. வளப்படுத்துதல்

3. பதப்படுத்துதல்　　　4. செழுமைப்படுத்தல்

ஈ. ஒருவருக்கொருவர் தோள் கொடுத்து உதவ வேண்டும். இவ்வாக்கியத்தில் இடம்பெற்றுள்ள தொடர்

1. பெயர்த்தொடர்　　　2. வினைத்தொடர்

3. உவமைத்தொடர்　　　4. மரபுத்தொடர்

உ. 'படி' என்னும் சொல்லுக்குப் பொருந்தாத பொருள் எது?

1. மாடிப்படி　　　2. அளக்கும் படி

3. படித்தல்　　　4. சொல்லுதல்

## 10. சரியா? தவறா?

அ. நல்ல நூலைப் போல, சிறந்த நண்பனும் நெருக்கமான உறவினனும் எனக்கு வேறு இல்லை என்று அறிஞர் அண்ணா கூறினார். ☐

ஆ. இளமையில் கல் என்று பாடியவர் திருவள்ளுவர். ☐

இ. கண்ணாடி பிற நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டது. ☐

**11. கட்டத்தில் உள்ள சொற்களில் கீழ்வரும் தொடர்களுக்குத் தேவையான சொற்களை மட்டும் எடுத்து எழுதுக.**

| | | | | |
|---|---|---|---|---|
| கரை | கறை | வரை | தலை | தழை |
| தளை | மலை | அரை | அறை | கலை |
| களை | விலை | விளை | அழை | குழை |

அ. துணியில் ______________ உள்ளது.

ஆ. ஆடு ______________ யைத் தின்றது.

இ. வீட்டில் மூன்று ______________ கள் உள்ளன.

ஈ. சஞ்சீவி ______________ உயரமானது.

உ. வயலில் ______________ உள்ளதால் பயிர்கள் நாசமாயின.

**12. கீழ்க்காணும் சொற்களைத் முறைப்படுத்தித் தொடராக்குக.**

அ. வாசலில்/அம்மா/கோலம்/போட்டாள்/அழகான

ஆ. வீட்டுக் கூரைகள்/ பறந்தன/புயல்காற்றில்

இ. பணிகளை/முடித்து/ வேலன்/வந்தார்/அலுவலகப்

ஈ. காலையில்/சுதா/நாள்தோறும்/செய்வாள்/உடற்பயிற்சி

உ. கிளிகள்/வானில்/பறந்தன/கூட்டம்கூட்டமாக

**13. கீழ்க்காணும் வினாக்களுக்கு ஓரிரு வரிகளில் விடையளிக்க.**

அ. குழந்தைக்கான சிறந்த பரிசாக வின்ஸ்டன் சர்ச்சில் கூறுவது எது?

ஆ. தவறினைக் கண்டு வருவது எது?

இ. ஏற்றுமதி செய்யப்பட்ட பொருள்களை எழுதுக.

ஈ. உலகத்தொழில் கண்காட்சி நடைபெற்ற இடம் எது?

உ. விளையாட்டு வீரர்களுக்கு வேலைவாய்ப்பில் தமிழக அரசின் இட ஒதுக்கீடு எவ்வளவு?

**14. கீழ்க்காணும் வினாக்களுக்கு ஐந்து வரியில் விடையளிக்க.**

அ. உலக நூலகங்களுள் எவையேனும் இரண்டைப் பற்றிக் கூறுக.

ஆ. கல்வியின் சிறப்பு பற்றிக் கூறுக.

இ. பழந்தமிழரின் வாணிகமுறையினைப் பற்றி எழுதுக.

ஈ. உங்களுக்குப் பிடித்த தற்காப்புக்கலை பற்றி விளக்குக.

உ. மாமல்லபுரம் பற்றி விவரிக்க.

15. கீழ்க்காணும் அழைப்பிதழைப் பார்த்து வினாக்களுக்கு விடையளிக்க.




வினாக்கள்

1. விழா நடைபெறும் நாடு எது?

2. விழாவிற்கு நோக்க உரை நிகழ்த்தும் மாணவனின் பெயர் என்ன?

3. விழாவில் உரையாற்றும் மாணவர்களின் வகுப்புகளை எழுதுக.

4. தமிழ் ஆசிரியை வழங்கும் உரையின் பெயர் என்ன?

5. செம்மொழிப் பட்டறை யாருக்கான களம்?

16. **கீழ்க்காணும் மின்னிதழைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.**




வினாக்கள்

1. மின்னிதழ் என்பதன் பொருள் தருக.
2. அறம் மின்னிதழ் யாருக்கானது?
3. அக்டோபர் மாத மின்னிதழின் சிறப்பு என்ன?
4. மின்னிதழில் என்னென்ன படைப்புகள் இடம்பெற்றுள்ளன?
5. அறம் இதழ் வெளிவரும் மாதங்கள் யாவை?

## 17. கீழ்க்காணும் உரைப்பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.

மாணவர்கள் பாடப்புத்தகங்களைக் கடந்து பல்வேறு புத்தகங்களை வாசிக்க வேண்டும். அப்போதுதான் புத்தக வாசிப்பு என்பதை நாம் பண்பாடாக மாற்றமுடியும். புத்தகவாசிப்பிற்கு ஏன் இவ்வளவு முக்கியத்துவம் என்றால், அது சுயசிந்தனையைத் தூண்டும் கருவியாகப் பார்க்கப்படுகிறது. புத்தகம் வாசிப்பதால் 'மனவளம்' பாதுகாக்கப்படுகிறது என்று அறிஞர்கள் பலர் கூறுகின்றனர். மேலும், நினைவாற்றல் அதிகரிக்க வழிவகுக்கிறது என்றும் பதிவு செய்கின்றனர். ஆதலால், மாணவர்களாகிய நீங்கள் வகுப்பறைத் தேர்வு, மதிப்பெண்களைக் கடந்து சிந்திக்க வேண்டும். உலகளாவிய போட்டிகளுக்கு உங்களைத் தயார் செய்துகொள்ளப் புத்தக வாசிப்பு துணைநிற்கும் என்பதில் ஐயமில்லை. மனித ஆற்றலுக்குத் துணைநிற்கும் புத்தகத்தை வாசிப்போம்; நேசிப்போம்; கொண்டாடுவோம்.

வினாக்கள் :

1. புத்தக வாசிப்பை நாம் என்னவாக மாற்ற வேண்டும்?
2. புத்தகம் வாசித்தால் என்னென்ன மாற்றங்கள் நிகழும்?
3. நம்மை எந்த மாதிரியான போட்டிகளுக்குத் தயார்செய்து கொள்ள வேண்டும்?
4. நினைவாற்றலை அதிகரிக்க என்ன செய்ய வேண்டும்?
5. உரைப்பகுதிக்குப் பொருத்தமான தலைப்பு ஒன்று தருக.

## 18. மொழிபெயர்ப்பு

அ. சரஸ்வதி மகால் நூலகம் தஞ்சையில் உள்ளது.

ஆ. படிக்காமல் இருப்பதைவிடப் பிறக்காமல் இருப்பதே மேல். – பிளேட்டோ

இ. வேளாண்மை அடிப்படையான தொழில்.

ஈ. சிலம்பாட்டம் ஒரு தற்காப்புக் கலை.

உ. சிலைகள் பழங்கால அடையாளங்கள் ஆகும்.

# அடிப்படை மொழித்திறன்கள்
# பாடங்கள் 1 – 14, இலக்கணம் மொழிப் பயிற்சிகள்

## கேட்டல்

- ❖ புதிய செய்திகளைக் கேட்க ஆர்வம் கொள்ளுதல்
- ❖ சிறுசிறு உரைப்பகுதிகளைக் கேட்டுப் பொருளுணர்தல்.
- ❖ அறக்கருத்துகள் நிறைந்த பாடல்களைக் கேட்டுணர்தல்
- ❖ வாழ்வியல் திறன் வளர்க்கும் சிறுசிறு கதைப்பகுதிகளைக் கேட்டுப் புரிந்துகொள்ளுதல்
- ❖ ஒலி வேறுபாடுடைய சொற்களைக் கேட்டுப் பொருள்அறிதல். (ண,ந,ன/ர,ற/ ல,ழ,ள)
- ❖ இலக்கணக் கருத்துகளைக் கேட்டுப் புரிந்துகொள்ளுதல் (அறுவகைப் பெயர்ச்சொற்கள், பெயரெச்சம், வினையெச்சம், ஒரு சொல் பல பொருள், பல சொல் ஒரு பொருள்)

## பேசுதல்

- ❖ உரைப்பகுதி வழித் தாம் புரிந்துகொண்ட கருத்துகளை வெளிப்படுத்துதல்.
- ❖ நற்பண்பை வளர்க்கும் பாடலின் கருத்தைப் புரிந்துகொண்டு, தம் சொந்த நடையில் கூறுதல்.
- ❖ இலக்கணக் கருத்துகளைப் படங்கள், உரையாடல்கள் வாயிலாக எளிமையாக அறிந்துகொண்டு பேசுதல்.
- ❖ படக்காட்சிகள், சூழல்கள் ஆகியவற்றிற்கு ஏற்ப உரையாடல் அமைத்துப் பேசுதல்.
- ❖ தாம் கேட்ட புதிய சொற்கள், தொடர்கள், உரைப்பகுதிகள் முதலியவற்றின் பொருளுணர வினாக்கள் எழுப்பி விடைகாணல்.
- ❖ எளிய இலக்கணக் கூறுகளைப் புரிந்துகொண்டு பேசுதல். (அறுவகைப் பெயர்ச்சொற்கள், பெயரெச்சம், வினையெச்சம், ஒரு சொல் பல பொருள், பல சொல் ஒரு பொருள்) ஒலிவேறுபாடு உடைய சொற்களின் பொருள்அறிந்து, சரியாக ஒலித்துப் பழகுதல்.
- ❖ மொழியின் நுட்பங்களைப் புரிந்துகொண்டு பொருத்தமாகப் பேசுதல். (மரபுத்தொடர்கள், இணைமொழிகள், உவமைத் தொடர்கள் போன்றவை)
- ❖ இரண்டு, மூன்று, நான்கு சொல் கொண்டு தொடர் உருவாக்கிப் பேசுதல்.
- ❖ பிறரோடு தயக்கமின்றித் தமிழில் பேசும் திறன் பெறுதல்.

## படித்தல்

- ❖ சிறுசிறுஉரைப்பகுதிகள், பாடல்கள், கதை ஆகியவற்றைப் பொருளுணர்ந்து படித்தல்.
- ❖ படச்சூழல்களைப் புரிந்துகொள்ளுதல்.
- ❖ புதிய சொற்களின் பொருளுணர்ந்து தம் முன்னறிவோடு இணைத்தல்.
- ❖ அறக்கருத்துகள் உணர்த்தும் பாடல்களைப் படித்துப் பொருளுணர்தல்.
- ❖ இலக்கணக் கருத்துகளைப் படித்துத் தெரிந்துகொள்ளுதல். (அறுவகைப் பெயர்ச்சொற்கள், பெயரெச்சம், வினையெச்சம், ஒரு சொல் பல பொருள், பல சொல் ஒரு பொருள்)
- ❖ எளிய நடைமுறை இலக்கணக் கூறுகளைப் படித்துத் தெரிந்துகொள்ளுதல். (மரபுத்தொடர்கள், இணைமொழிகள், உவமைத்தொடர்கள்)
- ❖ இரண்டு, மூன்று, நான்கு சொல் கொண்ட தொடர்களைப் படித்தல்.
- ❖ விளம்பரம்/ அறிவிப்பு முதலானவற்றைப் படித்துக் கருத்துணர்தல், விடை கூறும் திறன்பெறுதல்.
- ❖ கருத்துவிளக்கப்படத்தின் கருத்தறிதல்.
- ❖ பாடநூலுக்கு அப்பாற்பட்டும் தமிழ்நாளிதழ்கள், வார, மாத இதழ்கள், கதைநூல்கள் ஆகியவற்றைப் படிப்பதற்கு ஆர்வம்கொள்ளுதல்.

## எழுதுதல்

- ❖ எளிய எழுத்துப் பயிற்சிகளை மேற்கொள்ளுதல். (சொல்வதைக் கேட்டு எழுதுதல், சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுதல்.)
- ❖ சிறுசிறு உரைப்பகுதிகளைப் படித்துப் புரிந்துகொண்டு விடை எழுதுதல்.
- ❖ படச்சூழல்களுக்குத் தமிழில் உரையாடல் எழுதும் திறன் பெறுதல்.
- ❖ இலக்கணக் கருத்துகளைப் புரிந்துகொண்டு பொருத்தமாக எழுதிப்பழகுதல். (அறுவகைப் பெயர்ச்சொற்கள், பெயரெச்சம், வினையெச்சம், ஒரு சொல் பல பொருள், பல சொல் ஒரு பொருள்)
- ❖ எளிய மொழிப் பயிற்சிகளைப் புரிந்துகொண்டு விடையளித்தல். (ஒலி வேறுபாடுடைய சொற்கள்)
- ❖ மொழியின் நுட்பங்களைப் புரிந்துகொண்டு பொருத்தமாக எழுதுதல். (மரபுத்தொடர்கள், இணைமொழிகள், உவமைத்தொடர்கள் போன்றவை)
- ❖ இரண்டு, மூன்று, நான்கு சொல் கொண்டு தொடர் உருவாக்குதல்.
- ❖ விடுகதை/ புதிர் போன்றவற்றைப் படித்து விடை எழுதுதல்.
- ❖ உரைப்பகுதியைப் படித்துப் பொருளுணர்ந்து வினாக்களுக்கு விடை எழுதுதல்.
- ❖ ஆங்கிலத்திற்கு இணையான தமிழ்ச் சொற்களை எழுதுதல்.
- ❖ சிந்தனைக்கு விருந்து அளிக்கும் படைப்பாற்றல் வளர்செயல்களில் ஆர்வத்துடன் ஈடுபடுதல்.
- ❖ சொற்கள், எளிய தொடர்கள், சிறுஉரைப்பகுதி ஆகியவற்றை மொழிபெயர்த்து எழுதுதல்.
- ❖ எளிய செயல் திட்டங்களை மேற்கொள்ளுதல்.

## மேலாய்வாளர் குழு

**முனைவர் மருதூர் அரங்கராசன்,**
பேராசிரியர் (ஓய்வு). சென்னை.

**முனைவர் மு. சுதந்திரமுத்து,**
பேராசிரியர் (ஓய்வு). சென்னை.

**திரு. ச. தமிழ்ச்செல்வன்,**
எழுத்தாளர், சிவகாசி,

## பாடத்திட்ட வல்லுநர் குழு

**முனைவர் ந. நடராச பிள்ளை,**
மேனாள் இயக்குநர், இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம், மைசூரு.

**முனைவர் ப. டேவிட் பிரபாகர்,**
தமிழ்த்துறைத் தலைவர், சென்னைக் கிறித்தவக் கல்லூரி, சென்னை.

**முனைவர் வ. தனலட்சுமி,**
இணைப்பேராசிரியர், சுப்பிரமணிய பாரதி தமிழ்மொழி & இலக்கியப் புலம், புதுவைப் பல்கலைக்கழகம், புதுச்சேரி – 605014.

**திருமதி பா. மலர்விழி,**
விரிவுரையாளர், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், திருவூர் - 602025, திருவள்ளூர் மாவட்டம்.

## பாட ஒருங்கிணைப்பாளர் குழு

**திருமதி ப. கலைச்செல்வி,**
விரிவுரையாளர், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், களியாம்பூண்டி, காஞ்சிபுரம் மாவட்டம்.

**முனைவர் க. ஜானகி,**
ஆய்வு வளமையர், தமிழ் இணையக் கல்விக்கழகம், சென்னை-25.

**திரு. ச. சுசீந்திரன்,**
உதவி நிரலர், தமிழ் இணையக் கல்விக்கழகம், சென்னை-25.

**முனைவர் இரா. சிங்காரவேலன்,**
ஆய்வு வளமையர், தமிழ் இணையக் கல்விக்கழகம், சென்னை-25.

## மெய்ப்புத் திருத்துநர்

**திரு. ம. அமல்ராஜ்,**
பட்டதாரி ஆசிரியர், பல்லவபுரம் நகராட்சி மேல்நிலைப் பள்ளி, ஜமீன் இராயப்பபேட்டடை , செங்கல்பட்டு மாவட்டம்.

## புத்தக வடிவமைப்பாளர்

**திரு. ச. அசோக் குமார்,**
68, வடக்கு தெரு, எக்கியர்குப்பம், மரக்காணம் 604 303

**திரு. வே.வெண்மணிவேலன்,**
நிரலர், தமிழ் இணையக் கல்விக்கழகம், சென்னை-25.

## ஓவியங்கள்

**திரு. கா. தனஸ் தீபக் ராஜன்,**
ஓவியர், நலன் தனஸ் ஸ்டுடியோஸ், சேலம்.

**திரு. அச்சுதன் ரவி,**
ஓவிய ஆசிரியர், நாடார் கமிட்டி மேல்நிலைப்பள்ளி, தென்காசி.

## பாட ஆசிரியர் குழு

**திரு. லூ. இக்னேஷியஸ் சேசுராஜா,**
பட்டதாரி ஆசிரியர், அன்னை வேளாங்கண்ணி உயர்நிலைப் பள்ளி, வியாசர்பாடி, சென்னை.

**திருமதி ஜோ. பிரேமா கிறிஸ்டி,**
பட்டதாரி ஆசிரியர், டி.இ.எல்.சி. மேக்தலின் பெண்கள் மேல்நிலைப் பள்ளி, புரசைவாக்கம், சென்னை.

**திரு. கு. சம்பந்தம்,**
முதுகலை ஆசிரியர் (பணிநிறைவு), டி.ஆர்.பி.சி.சி.சி. இந்து மேல்நிலைப் பள்ளி, திருவள்ளூர்.

**திருமதி நா. ஜானகி,**
பட்டதாரி ஆசிரியர், அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி, சின்னத்தடாகம், கோவை மாவட்டம்

**முனைவர் ப. மெய்யப்பன்,**
ஆசிரியப் பயிற்றுநர், வட்டார வளமையம், நம்பியூர், ஈரோடு மாவட்டம்

**திரு. ந. மாமலைவாசன்,**
பட்டதாரி ஆசிரியர், அரசு மேல்நிலைப்பள்ளி, இராயபுரம், திருவாரூர் மாவட்டம்.

**திரு. ஜோ. அலெக்ஸ் கிறிஸ்டோபர்,**
பட்டதாரி ஆசிரியர், ச.உ.நி. மேல்நிலைப்பள்ளி, இராயப்பன்பட்டி, தேனி மாவட்டம்.

**திரு. மு. பாலகிருஷ்ணன்,**
பட்டதாரி ஆசிரியர், எஸ். எஸ். என். அரசு மேல்நிலைப் பள்ளி, கொம்மடிக்கோட்டை, தூத்துக்குடி

## தட்டச்சுக் குழு

**திருமதி சோ. ஜோதி,**
தரவு உள்ளீட்டாளர், தமிழ் இணையக் கல்விக்கழகம், சென்னை-25.

**திருமதி கோ. கல்விக்கரசி,**
தரவு உள்ளீட்டாளர், தமிழ் இணையக் கல்விக்கழகம், சென்னை-25.

## தமிழ் இணையக் கல்விக்கழகம்

சென்னை – 600025.

www.tamilvu.org

978-81-977380-4-3